உதயன்

www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 266 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 03 சனிக்கிழமை (18/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

தீர்வுக்குத் தென்னாபிரிக்காவிடம் ஆலோசனை பெற அரசு உத்தேசம்

பேச்சு நடத்த செப்ரெம்பர் முற்பகுதியில் அங்கு விரைகிறார் அமைச்சர் நிமால்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியூடாக அதனைப் பெறுவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கொழும்பு, ஓக. 18

அரசு – கூட்டமைப்பு பேச்சில் மூன்றாந் தரப்பாக தென்னாபிரிக்காவைச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று அரசு வெளியில் கூறிவந்தாலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு இலங்கை அரசு உத்தேசித்துள்ளது.

உள்நாட்டுப் பொறிமுறையை அடிப்படையாகக் கொண்ட தீர்வுக்கு மூன்றாந் தரப்பு அனுசரணை அவசியமற்றது என உள்நாட்டில் சிங்கள தேசிய வாதக் கட்சிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்புகள் எழுந்தன.

எனினும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் தென்னாபிரிக்காவுடன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும், அந்நாட்டின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியூடாக அதனைப் பெறுவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதற்கிணங்க, தென்னாபிரிக்காவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த நாட்டின் ஆளும் கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பேச்சு நடத்தவுள்ளது.

அடுத்த மாதம் முற்பகுதியில் தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இது விடயம் தொடர்பில் அந்நாட்டு அரசின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சரும், அரசு–கூட்டமைப்பு பேச்சுக்குழுவின் உறுப்பினரும் என்ற அடிப்படையிலும் அவர் தென்னாபிரிக்கா செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஐ.தே.கவின் கோரிக்கைகளை நிறைவேற்றா விட்டால் அரசுக்கு எதிராக புரட்சி வெடிக்கும் - எச்சரிக்கிறார் ரணில். 2

கடுமையான விமர்சனப் பதிவுகளால் ஒரே நாளில் 'பேஸ்புக்கை' விட்டு பின்வாங்கினார் கருணாநிதி. 8

ஈரான் அணு உலைகளைத் தாக்கினால் இஸ்ரேல் ஏவுகணைகளை எதிர்கொள்ள நேரிடும். 9

சமூக விரோதிகளே இப்போது அரசியலில் பிரகாசிக்க முடிகிறது - ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி விசனம். 13

நாடு கடந்த தமிழீழ அரசின் செனட் சபையில் சிங்களவர் அமெரிக்கர் ஒருவரும் நியமனம்

தாயகம் - தேசியம் - தன்னாட்சியுரிமை எனும் ஈழத் தமிழர்களுடைய அரசியல் அபிலாசையினை அனைத்துலக அரங்கில் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசு தனது, மேற்சபைக்கான (செனட்) பிரதிநிதிகளை நியமித்துள்ளது. இதில் ஒரு சிங்களவரும் ஓர் அமெரிக்கரும் இடம்பெற்றுள்ளனர். இலங்கையில் ஒரு மருத்துவப் பேராசிரியராகத் தொழில் புரிந்த பிராயன் செனவிரத்ன, அமெரிக்காவின் முன்னை நாள் சட்டமா அதிபரான ராம்சி கிளார்க் ஆகியோரே இதில் இடம்பெற்றுள்ளவர்களாவர்.

உலகத் தமிழர் பரப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைந்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசு அவையின் மேற்சபைக்கு 9 பிரதிநிதிகள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் யாப்பு விதிகளில் (1.8.2) கூறப்பட்டவைக்கு அமைவாக தற்பொழுது மேற்சபை உறுப்பினர்கள் நியமனம் இடம்பெற்றுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் பணியக ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராம்சி கிளார்க், அமெரிக்காவின் முன்னை நாள் சட்டமா அதிபராவர்.

பார்க்க பக்கம் 4

தமிழருக்கு அதிகாரப் பகிர்வை வழங்க அரசு விரும்பவில்லை

சம்பந்தன் குற்றச்சாட்டு

திருகோணமலை, ஓக. 18

இலங்கை அரசு அதிக பட்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வு எதையும் தமிழர்களுக்கு வழங்க விரும்பவில்லை - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் ஆனந்தபுரி கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

இந்தத் தேர்தல் கடவுளினால் எமக்குத் தரப்பட்ட சந்தர்ப்பம் ஆகும். நீதி, நியாயத்தில் வெற்றி பெற வேண்டும் என்பது இறைவனின் விருப்

பார்க்க பக்கம் 4

ஆட்சியில் உள்ளவர்களே உண்மையான துரோகிகள்

விக்கிரமபாகு சாடல்

கொழும்பு,ஓக 18

இலங்கையின் வளங்களைச் சர்வதேச நிறுவனங்களுக்கு விற்றுவருவதனால் நாட்டுக்குத் துரோகம் இழைப்பவர்களே உண்மையில் காட்டிக் கொடுப்பவர்கள் என டாக்டர் விக்ரமபாகு கருணாரத்ன கூறினார்.

நேற்று நடைபெற்ற அநீதிக்கு எதிரான தேசிய இயக்கத்தின் கூட்டத்தில் பேசுகையிலேயே கருணாரத்ன இவ்வாறு கூறினார்.

சென்னையில் நடந்த டெசோ மாநாட்டுக்கு நான் சென்றதனால் நாட்டின் கௌரவம் குறைந்துவிட்டதாக ஜனாதிபதி அண்மையில்

பார்க்க பக்கம் 4

மன்மோகனைச் சந்திக்கும் மஹிந்தவின் திட்டம் தோல்வி

கொழும்பு,ஓக 18

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை நியூயோர்க்கில் சந்தித்துப் பேச ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டிருந்த திட்டம் தோல்வியில் முடிந்துள்ளதாகத் தெரியவருகிறது. இதனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒக்ரோபர் மாதத்தில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பூகோள மீளாய்வின் போது இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. இதன்

பார்க்க பக்கம் 4

புத்தரின் எலும்புகளை இலங்கைக்கு வழங்குகிறது இந்தியா

புதுடில்லி,ஓக. 18

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியா சென்றிருந்தபோது புத்தரின் சமாதியில் உள்ள அவரது சிதைந்த எலும்புகளை எங்கள் நாட்டுக்கு வழங்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனை ஏற்றுப் புத்தரின் எலும்பு கூளை இலங்கைக்கு வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

பார்க்க பக்கம் 4

டெசோ தீர்மானங்களை மூனிடம் நேரில் கையளிக்கிறார் ஸ்ராலின்

சென்னை, ஓக. 18

டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ - மூனை நேரில் சந்தித்து தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் வழங்க வுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் டெசோ மாநாடு சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஐ.நா. சபையின் மனித உரி

பார்க்க பக்கம் 4

ஒபாமாவுக்கும் சோனியாவுக்கும் சொந்தமானதல்ல வடக்கு - கிழக்கு

தேசப்பற்று இயக்கம் சீற்றம்

கொழும்பு, ஓக. 18

வடக்கு ஒபாமாவுக்கும், கிழக்கு சோனியாவுக்கும் உரித்தான பிரதேசங்கள் அல்ல என்பதை அந்நிய சக்திகளுக்கு மீண்டுமொரு தடவை தெளிவாகச் சொல்லிவைக்க விரும்புகின்றோம் என எச்சரிக்கை விடுத்துள்ள தேசிய அமைப்புகளின் ஒன்றியம், நாட்டின் இறையாண்மையைக் கூறுபோடுவதற்கு இடமளியோம் என்றும் குளுரைத்துள்ளது.

எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் அரசு, நாட்டுக்குப் பொருந்தாததை ஒருபோதும் செய்யக்கூடாது என்று தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

DREAMS GLOBAL WORKERS HELPING CENTRE (PVT)LTD

!!!...?...!!!

நாளைய உதயன் பக்கம் IV பார்க்கவும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை வவுனியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். இதன்போது, வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார்.(த)

திவிநெகும சட்ட மூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு,ஓக 18

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திவிநெகும என்ற சட்ட மூல ஆவணம் குறித்து ஆராயுமாறு கோரி உயர் நீதி மன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூர்த்தி அதிகாரிகள் சங்கம் நேற்று முன்தினம் இந்த மனுவை தாக்கல் செய்ததோடு மனுவின் பிரதிவாதியாக சட்ட மா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

திவிநெகும எனப்படும் சட்ட மூல ஆவணம் எதிர்வரும் செப் ரெம்பர் 10ம் திகதி பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் இணைத் துக் கொள்ளப்படவுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்ட மூல ஆவணம் மாகாண சபையுடன் தொடர்புபட்டிருப்பதால் இது குறித்து மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அப்படி மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட வில்லை என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே குறித்த சட்ட மூல ஆவணத்தைப் பரிசீலித்து அது அரசியல் யாப்புக்கு முறையானதாக இல்லையா என தீர்ப் பளிக்கும்படி மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

நுரைச்சோலை மின் நிலையத்தை பழுதுபார்க்கச் சீன நிபுணர்கள் குழு

கொழும்பு,ஓக 18

நுரைச்சோலை லக்வி ஜய மின்னுற்பத்தி நிலை யத்தில் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக சீன பொறியியலாளர்கள் குழு வொன்று கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை மின்சார சபை யின் பொறியியலாளர் விமல தர்ம அபேவிக்கிரம தெரி வித்தார்.

சீனாவின் சீ.ஈ.எம்.சி. நிறுவனத்தின் உபதலைவர் இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்குகிறார். இந்தக் குழுவி னர் பழுதுபார்க்கும் நடவடிக் கைகளைத் துரிதப்படுத்தி ஒரு வாரத்துக்குள் மின்னுற் பத்தியை முழுமையாக மீள ஆரம்பிக்க வழியமைப்பர் என எதிர்பார்க்கப்படுவதாகப் பேராசிரியர் விமலதர்ம அபே விக்கிரம தெரிவித்தார். (த)

வீதியை கடந்த சிறுவனை மோதியது மோ.சைக்கிள்

படுகாயமுற்ற அவன் போதனா வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஓக. 18

மோட்டார் சைக்கிளி லிருந்து இறங்கிய சிறுவன் வீதியைக் கடக்க ஓடிய போது எதிரே வந்த மோட் டார்சைக்கிளினால் மோதுண்டு தலையில் படுகாயமடைந் தான்.

இந்தச் சம்பவம் நேற்று வரணி சிட்டிவேரம் கண் ணகை அம்மன் கோவிலுக்கு முன்பாக இடம்பெற்றது.

கைக் குழந்தையுடனும் ஏனைய இரண்டு பிள்ளை களுடனும் மோட்டார் சைக் கிளில் ஆலயத்துக்கு குடும் பமாக வந்தவர்கள் ஆல யத்தின் முன் அதனை நிறுத்திவிட்டு இறங்கினர். இதன்போது சிறுவனைத் தாயார் கையில் பிடித்திருந் தார். ஆயினும் அவன் கையைப்பறித்துக் கொண்டு வீதியைக் கடக்க முற்பட் டான். அப்போது கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வேகமாக வந்து கொண்டி ருந்த மோட்டார் சைக்கிள் சிறுவனை மோதித் தள்ளி விட்டு அவ்விடத்தில் நிற்கா மல் வேகமாக ஓடித்தப் பியது. வாகனமொன்றில் சிறுவன் சாவகச்சேரி வைத் தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட போது அங்கு தொழிற்சங்க நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த குழந்தை வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர், வைத் திய அத்தியட்சகர் உட்பட அனைத்து வைத்திய அதி காரிகளும் சிறுவனுக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளித்த பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்பு லன்ஸ் மூலம் அனுப்பி வைத் தனர். வரணி இயற்றாலை யைச் சேர்ந்த யோகநாதன் லக்ஷிகன் (வயது 5) என்னும் சிறுவனே காயமடைந்தவரா வார். (த-9)

புரட்சி வெடிக்கும்

ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஓக 18

ஐக்கிய தேசியக் கட்சியி னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஆட்சியி லுள்ள அரசு நிறைவேற்ற வில்லை என்றால் அரசுக்கு எதிராகப் புரட்சியை ஏற்படுத் தப் போவதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.



பொருளாதார வீழ்ச்சி, விவசாயிகளுக்கான நிவார ணம் இன்மை போன்ற கார ணங்களால் நாடு வீழ்ச்சி யான நிலைக்கு செல்கிறது. இந்த மஹிந்த அரசு ஆட்சி யில் இருக்கும் வரையில் இந்த நிலைமை தொடரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஆட்சி யிலுள்ள அரசிடம் வேதன அதிகரிப்பு, நிவாரணம் உள் ளிட்ட பல்வேறு கோரிக் கையை ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்துள்ளது. இந்த கோரிக்கைகள் நிறை வேற்றப்படாத பட்சத்தில், அரசுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபடப் போவதாக அவர் எச் சரிக்கை விடுத்துள்ளார். (த)

அரசியல் நோக்கத்துக்காகவே வைத்தியர் வீடு மீது தாக்குதல்

முன்னிலை சோஷலிசக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக 18

விசேட வைத்திய நிபு ணர் லலந்த ரணசிங்கவின் வீட்டின் மீதான கைக்குண் டுத் தாக்குதல், கல்வி மற்றும் சுகாதார துறையை தனியார் மயப்படுத்தும் திட்டத்தை எதிர்ப்பவர்கள் மீதான அடக்கு முறை என்பவற்றை கண்டிப் பதாக முன்னிலை சோஷ லிசக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் மத்திய அரசியல் குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

விசேட வைத்தியர் வீட் டின் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்ப வத்தில் பொலிஸார் மற்றும் அரசின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது இது அரசியல் நோக்கத்துக்காகச் செய்யப்பட்ட ஒன்று என் பது தெளிவாகிறது.

> மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அரசு பலாத்கார மாகக் கண்மூடித்தனமாகத் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கிறது.

அரசின் புதிய லிபரல் வாத கொள்கைக்கு இடை யூறு ஏற்படுத்துபவர்கள் மீது இவ்வாறான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அரசு பலாத்கார மாகக் கண்மூடித்தனமாகத் தமது செயற்பாடுகளை முன் னெடுத்துச் செல்கிறது. மாலபே வைத்திய கல்லூ ரியை தனியார் மயப்படுத் தும் அரசின் திட்டத்தின் ஒரு படியாகவே வைத்தியர் லலந்த ரணசிங்க வீட்டின் மீதான குண்டுத் தாக்குதலை நாம் காண்கிறோம்.

எனவே சுதந்திர கல்வி, சுகாதாரம் என்பவற்றைப் பாதுகாத்து விரிவுபடுத்த அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்-என் றுள்ளது. (த)

ஈழம் என்பது வெறும் கனவு

மேதானந்த தேரர் கூறுகிறார்

கொழும்பு,ஓக 18

உலகத்தில் எந்த இடத் தில் ஈழம் தொடர்பாக மாநாடு களை நடத்தினாலும் இலங் கையில் ஈழம் என்றொரு நாட்டை உருவாக்குவது என்பது வெறும் கனவால் மாத்திரமே முடியும் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள் இருந்து கொண்டு நாட்டுக்குத் துரோ கம் இழைக்கும் தேசத்து ரோகிகளை நாட்டில் இருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும்.செல்வநாயகத்தின் 50க்கு 50 என்ற கோரிக்கையே பிரபாகரனின் பயங்கரவாதம் வரை வளர்ச்சியடைந்தது. இதனால் இலங்கை மக்கள் மாத்திரமல்லாது வெளி நாட்டு மக்களும் பாதிப்பு களை அனுபவித்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் காரண மாக நாட்டின் ஆயிரக்கணக் கான உயிர்கள் அழிந்தன. பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்தது. தேசிய உரிமைகள் அழிந்தன. இந்தப் பின்னணி யில், நாட்டின் அதிஷ்டமாக ஜனாதிபதி தலைமையில், பாதுகாப்பு செயலாளர் உள் ளிட்டோர் கொடூரப் பயங்கர வாதத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர். எனினும் உயிரிழந்த பயங்கரவாதத்துக்கு மீண்டும் உயிரூட்ட நினைக்கும் தேசத் துரோகிகள் நாட்டில் உள்ள னர் எனவும் அவர் கூறினார். (த)

சுயமாக இயங்க முடியாமையே பதவி விலகுவதற்குக் காரணம்

திலக் கருணாரட்ன கூறுகிறார்

கொழும்பு, ஓக 18

சுயாதீனமாகக் கடமையாற்ற முடியாத காரணத்தினால் பதவி விலகுகின்றேன் எனக் கொழும்பு பங்குச் சந்தையின் தலைவர் திலக் கருணாரட்ன தெரிவித் துள்ளார்.

பங்குச் சந்தையைச் சீரழித்த சிலரினால் எனக்குத் தொடர்ச்சி யாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. நிதி அமைச்சின் ஊடாக எனது இராஜினாமாக் கடிதத்தை இன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பேன்.

பங்குச் சந்தையைச் சீர்குலைக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் தொடர்ந்தும் பதவி வகிப்பதில் அர்த்தமில்லை.

சுயாதீனமாகச் செயற்படக் கூடிய ஓர் பின்னணி உரு வாக்கப்பட வேண்டியது அவசியமானது என திலக் கருணா ரட்ன தெரிவித்துள்ளார். (த)

இலங்கையில் முதலீடு செய்ய சீன மாகாண அரசுகள் திட்டம்

கொழும்பு,ஓக 18

சீனாவின் மாகாண அரசுகள் இலங்கையில் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் சீன மாகாண அரசுகள் இலங்கையில் முதலீடு செய்ய முனைப்புக் காட்டும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷூ ஜியானோவோ தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவைத் தொடர்ந்து சீன மாகாண அரசுகள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருவதா கக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்குப் பயணம் செய்து முதலீடுகளைச் செய்யுமாறு சீன வர்த்தகர்களை ஊக்குவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். சீன அரச நிறுவனங்களைத் தவிர சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களையும் இலங்கையில் முத லீடு செய்ய ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார். (த)

நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத் தீர்த்தத் திருவிழா நேற்று இடம்பெற்றது. பக்தர் ஒருவர் தூக்குக் காவடி எடுத்து வருவதையும் தீர்த்தம் ஆடிய பின்னர் வேல்பெருமான் வீதியுலா வருவதையும் காணலாம்.

150 இந்திய வீடுகளின் கட்டடப் பணிகள் நிறைவு

61 வீடுகளே பயனாளிகளிடம்

யாழ்ப்பாணம், ஓக.18

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்திய வீட்டுத் திட்டப் பணிகளில் 150 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 61 வீடுகளே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் முன்னோடி விட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த முன்னோடி திட்டப் பணிகள் கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் 150 வீடுகள் தெரிவு செய்யப்பட்டன. யாழ்ப்பாண பிரதேசசெயலர் பிரிவில் 40 வீடுகளும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 30 வீடுகளும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 30 வீடுகளும் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைவாக ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டப் பணிகள் முழுமையாக நிறைவடையாத நிலையில் இந்த வருடம் ஜனவரி மாதம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஒரு தொகுதி வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 20 மாதங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது மேற்படி 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 150 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இவற்றில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் முழுவதும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் ஒரு தொகுதியுமாக 61 வீடுகளே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 89 வீடுகளும் எப்போது கையளிக்கப்படும் என்று அரச அதிபரிடம் கேட்டபோது மிக விரைவில் பயனாளிகளிடம் வழங்கப்படும் என்றார்.

இதேவேளை, இந்த முன்னோடி வீட்டுத் திட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் வெடிப்பு ஏற்படுவதாகப் பொதுமக்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

நல்லூர் ஆலயத் தேர்த் திருவிழாவில் இந்த முறை திருட்டுகள் இல்லை

வலி வடக்கு, ஓக. 18

நல்லூர் ஆலயத் தேர்த் திருவிழாவில் இந்த முறை திருட்டுகள் எவையும் இடம்பெறவில்லை என்று நல்லூர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்.

ஆலயத் தேர்த்திருவிழாவில் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் யாழ். குடாநாடு உட்பட வெளிமாவட்டங்களில் இருந்து கலந்துகொண்டிருந்தனர். திருட்டுக்கள் எவையும் இடம்பெறாத வகையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டமையால் திருட்டுகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

இந்தமுறை நல்லூர் ஆலய உற்சவத்தில் கடமைக்கு ஐநூறுக்கும் மேற்பட்ட ஆண், பெண் பொலிஸார் சிவில் உடையிலும் சீருடையிலும் ஆலய உள் வீதி உட்பட வெளி வீதியிலும் கடமையில் ஈடுபட்டனர்.

இவர்களுக்குப் பொறுப்பாக யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எரிக்பெரேரா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ குகனேசன், யாழ். பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா உட்பட பல பொலிஸ் உயர் அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை பொலிஸார் சந்தேகத்துக்கு இடமானவர்களை ஆலயச் சூழலில் இருந்து உடனுக்குடன் வெளியேற்றினர்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-86)

மோ. சைக்கிள்களில் ஒரு பக்கம் கால் போட்டிருக்கத் தடை

தென்மராட்சி, ஓக. 18

தென்மராட்சி பிரதேச கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களின் பின் ஆசனத்தில் பயணிப்போர் இரு கால்களையும் ஒன்றாக வைத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. குறிப்பாக மோட்டார் சைக்கிள் பின் ஆசனத்தில் பயணிக்கும் பெண்கள் ஒரே பக்கமாக கால்களை வைத்துச் செல்வது அதிகரித்துள்ளது.

இனிவரும் காலங்களில் அவ்விதம் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில் ஆயத்தடிப் பகுதியில் அவ்விதம் பயணித்த கர்ப்பிணிப் பெண் டிப்பர் வாகனம் மோதி நிலைதடுமாறி வீழ்ந்து சில்லினுள் அகப்பட்டு உயிரிழந்த சம்பவத்தை அடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

பாடசாலை செல்லாத நிலையில் யாழ்.மாவட்டத்தில் 360 சிறுவர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைக்குச் செல்லாத நிலையில் 360 சிறுவர்கள் இருக்கின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் 65 பேர் சிறுவர் தொழிலாளர்களாகவும் இந்த வருடம் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையிலான முதல் 5 மாத காலப்பகுதிகளுக்குள்ளேயே 360 பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களும், 65 சிறுவர் தொழிலாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களில் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 114 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 56 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 50 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த எண்ணிக்கை குறைவாகும்.

சிறுவர் தொழிலாளர்களில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 41 சிறுவர்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 9 சிறுவர்களும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 8 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 சிறுவர்களும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு, உடுவில் பிரதேச செயலர் பிரிவு, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் தலா ஒவ்வொரு சிறுவர் தொழிலாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மேலும் அந்தப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

சிறுவர் தொழிலாளர்கள்	
கரவெட்டி	41
கோப்பாய்	09
ஊர்காவற்றுறை	08
சண்டிலிப்பாய்	04
யாழ்ப்பாணம்	01
உடுவில்	01
தெல்லிப்பழை	01

நிகழ்வுகள் இன்று

முதியோர் ஒன்று கூடல்

பருத்தித்துறை கிழக்கு முதியோர் சங்கத்தின் ஒன்று கூடலும், விளையாட்டு விழாவும் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை முழுநாள் நிகழ்வாக தும்பளை லூர்த்து மாதா தேவாலய முன்றிலில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு மவுலிஸ் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதியோர்கள் அறிமுகம், அவர்களுக்கான பொழுது போக்கு நிகழ்ச்சிகள், அவர்களுக்கான உணவு வகை பயன்பாடு குறித்த விளக்கமளித்தல் ஆகிய நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெறும்.

இந்தநிகழ்வில் 'முதியோரின் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா ரவீந்திரன், 'கலாசார சீர்கேடும் முதியோர்களும்' என்னும் தலைப்பில் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி எஸ். சுகுணா, 'முதியோர்களின் உணவு' என்னும் தலைப்பில் திருமதி மேரி புளோரன்ஸ், 'முதியோர் உரிமை' என்னும் தலைப்பில் சமூக சேவைத் திணைக்கள மாவட்ட அதிகாரி கா.கிருபாகரன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறும். (ம-8)

கலந்துரையாடல்

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

2012/2013 காலபோக நெற்செய்கைக்கான விதை நெல், உரவகைகள், விவசாயக் கடன் போன்றவை தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் அனைத்து நெற்செய்கையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை கேட்டுள்ளார். (ம-9)

கருத்தரங்கு

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கொழும்பு அரசியல் கல்லூரி நடத்தும் ''அரசியலமைப்புச் சட்டத்தின் உருவாக்கமும் அதில் மக்கள் பங்களிப்பும்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு காலை 9 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள மூத்தி கலர் லாப் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

கடன் வழங்கல்

தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கத்தால் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் கடன் வங்கிகளூடாக வழங்குவதற்கன ஆரம்ப நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

பொதுக்கூட்டம்

ஆதி மயிலிட்டி காசிபூதராயர் ஆலய வழிபடுவோர் சபையின் பொதுகூட்டம் மாலை 4 மணிக்குச் கன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

அரச மருத்துவர்கள் புறக்கணிப்பால் நேற்று வைத்தியசாலைகள் செயலிழப்பு



யாழ்ப்பாணம், ஓக. 18

அரச மருத்துவர் சங்கத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் பணிப்புறக்கணிப்பினால் அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய சிகிச்சைப் பிரிவுகளின் பாதைகள் முற்றாக மூடப்பட்டுள்ளன.

கொழும்பு தெஹிவளை தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் லயந்த ரணசிங்கவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் அரச மருத்துவர் சங்கத்தினர் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிமுதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் அரச மருத்துவர் சங்கமும் இணைந்துள்ளது. கொழும்பு தேசிய வைத்தியசாலை விசேட சத்திரசிகிச்சை நிபுணரின் வீட்டுக்கு கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்தும் யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரனின் வீட்டின் மீது கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் கழிவு ஓயில் ஊற்றி வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்த குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படாததைக் கண்டித்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் வைத்தியசேவைகள் நிறுத்தப்பட்டன.

இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் ச.நிமலன் 'உதயனுக்'குக் கருத்துத் தெரிவிக்கையில்;

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணரின் வீட்டின் மீது கடந்த ஜூன் மாதம் கழிவு ஓயில் ஊற்றப்பட்டு ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து கொழும்பு வைத்திய நிபுணர் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டித்தும், குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யக் கோரியும் அவசர நோயாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம். இன்று காலை 8 மணிக்கு பணிப்புறக்கணிப்பு கைவிடப்படும். எனினும் கொழும்பு தாய்ச் சங்கம் பணிப்புறக்கணிப்பைத் தொடருமாறு பணித்தால் அதனை நாங்கள் தொடர்வது தவிர்க்க முடியாதது எனவும் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் பணிப்புறக்கணிப்பு நடைபெறுவது தொடர்பாக பொதுமக்கள் பலர் அறிந்திருக்காத பட்சத்தில் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வந்து திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

எனினும் கர்ப்பிணிப் பெண்கள், விபத்துக்குள்ளானோர், அவசர நோயாளர் போன்றோருக்கு மட்டும் விடுதிகளில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தன. (10-14-9)

ஆட்சியில் உள்ளவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார். இந்த நாட்டைச் சர்வதேச நாணய நிதியத்துக்கும் உலக வங்கிக்கும் ஈடு வைத்தவர்கள் தான் உண்மையான தேசத் துரோகிகள் என அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் தான் பேசியபோது, இந்த அரசினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல, முழு நாடுமே பாதிக்கப்பட்டுள்ளது என்பதையே வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டுமெனவும் தான் மாநாட்டில் பேசிய போது கூறியதாக அவர் தெரிவித்தார்.

நான் றுகுணுவைச் சேர்ந்தவன் என ஜனாதிபதி கூறும் போது றுகுணு என்பதனால் எதைக் கருதுகின்றாரோ அவ்வாறுதான் வடக்கு-கிழக்கு மக்கள் ஈழம் என்னும் சொல்லை பயன்படுத்துகின்றனர். பலர் ஈழம் என்னும் சொல்லைத் தனிநாட்டைக் குறிக்க பயன்படுத்தினாலும் அதன் உண்மையான கருத்து அதுவல்ல என அவர் கூறினார்.

தற்போதைய ஆட்சியாளர்களின் காட்டிக் கொடுப்பை பற்றி இலங்கை மற்றும் இந்தியாவில் மட்டுமன்றி உலகின் எந்தப் பகுதியிலும் பேசுவேன்' எனவும் அவர் கூறினார். (த)

டெசோ தீர்மானங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைக் குழு சார்பில் ஒரு சர்வதேசக் குழு அமைக்கப்பட்டு இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களைக் கண்டறிந்து போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் தாங்கள் விரும்பும் அரசியல் தீர்வை தாங்களே முடிவு செய்து கொள்ள முழு உரிமை வழங்க வேண்டும் என்று இந்திய அரசு, ஐ.நா. சபையில் தீர்மானமாகக் கொண்டு வரவேண்டும் என்பன உள்ளிட்ட 14 தீர்மானங்கள் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இந்தத் தீர்மானங்களை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனை நேரில் சந்தித்து கருணாநிதியே கொடுக்க வேண்டும் என்று மாநாட்டில் பங்கேற்றோரால் வலியுறுத்தப்பட்டது. உடல்நலம் சரியில்லாததால் கருணாநிதி வெளிநாட்டுக்குப் பயணம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்.

இதனால் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று பான் கீ மூனை சந்தித்து தீர்மானங்களைக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அனுமதி கேட்கப்பட்டு வருகிறது. இன்னும் 10 நாள்களில் பான் கீ மூனை மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து டெசோ மாநாட்டு தீர்மானங்களைக் கொடுப்பார் என அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒபாமாவுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'டெசோ' என்ற பிரிவினைவாத அமைப்பால் நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்தான தீர்மானங்களை ஐ.நாவுக்கு அனுப்பிவைப்பதற்கு தி.மு.க. தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.

இலங்கையை ஆள்வது ஐ.நாவோ அல்லது அமெரிக்காவோ அல்ல என்பதை கருணாநிதி போன்ற அரசியல் பச்சோந்திகள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடும் அந்நிய சக்திகளுக்கு வடக்கு ஒபாமாவுக்கும், கிழக்கு சோனியாவுக்கும் உரித்தான பிரதேசம் அல்ல என்பதைத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றோம் - என்றார்.

நாடு கடந்த தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கச்சட்டத்திலும் அனைத்துலகச்சட்டத்திலும் துறைதோய்ந்த நிபுணனாகத் திகழ்ந்தவர், சளைக்காத ஒரு குடிசார் உரிமைகள் ஆர்வலர் என்று பெயரெடுத்தவர்.

கடந்த நூற்றாண்டின் மிகப்பெரிய சட்டவாக்கச் சாதனைகள் என்று கருதப்படும் வாக்குரிமைச் சட்டம்-1965, சமூக உரிமைகள் சட்டம்-1968 ஆகிய இரண்டையுமே உருவாக்கலிலும் நிறைவேற்றலிலும் முன்னின்று பணியாற்றிச் சரித்திரத்தில் தனக்கென்று ஒரு இடம் பிடித்தவர்.

கலாநிதி பிராயன் செனவிரத்ன, ஒரு சிங்களக் குடிமகனான இவர் இலங்கையில் ஒரு மருத்துவப் பேராசிரியராகத் தொழில் புரிந்தவர்.

கடந்த 20 ஆண்டுகளாக உலகெங்கணும் சென்று பேரினவாத சிறிலங்கா அரசின் கீழ் தமிழர் படும் அல்லல்களைப் புட்டுக்காட்டிக் கொண்டிருப்பவர். இலங்கையின் மனித உரிமைகள் வதம் பற்றி நூற்றுக்கணக்கான கட்டுரைகளை வரைந்தவர்.

இவர்களுடன் கலாநிதி நாகலிங்கம் ஜெயலிங்கம்,சத்யா சிவராமன், நடேசன் இழஞ்செழியன்,ஞானேஸ்வரன்,உஷா சிறீஸ்கந்தராஜா,சுப்பிரமணியம் இராஜரத்தினம் ,ஜெகன் நவரத்னம் மோகன் ஆகியோரும் இந்தச் சபையில் இடம் பெற்றுள்ளனர். (த)

மன்மோகனைச் சந்திக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இந்தியாவின் ஆதரவை இலங்கை அரசு எதிர்பார்க்கிறது. இந்த மீளாய்வுக்கு இந்தியா, பெனின், ஸ்பெய்ன் ஆகிய நாடுகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பொறுப்பாக நியமித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்த மூன்று நாடுகளும் ஆதரித்திருந்தன.

இந்நிலையில், தற்போது இந்தியாவுடன் இருக்கும் இடைவெளியைக் குறைத்து, அதன் ஆதரவைப் பெறுவதற்கு இலங்கை அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக இந்தமாதப் பிற்பகுதியில் பசில் ராஜபக்ஷ தலைமையில் கோத்தபாய ராஜபக்ஷ, லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட குழுவைப் புதுடில்லிக்கு அனுப்பவும் திட்டமிடப்பட்டது.

அந்தப் பயணத் திட்டத்தைப் புதுடில்லி நிறுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அடுத்த மாதம் ஐ.நா. பொதுச்சபையின் ஆண்டுக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேச ஜனாதிபதி மகிந் ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார்.ஆனால் அடுத்தமாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.அவருக்குப் பதிலாக, அமைச்சர் ஒருவரே இந்தியாவின் சார்பில் உரையாற்றவுள்ளார்.

இது ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.மன்மோகன்சிங்கை நியூயோர்க்கில் சந்திக்கும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ரோபர் மாதத்தில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மாவிடம் தான் விரைவில் புதுடில்லி வருவதாக ஜனாதிபதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

புத்தரின் எலும்புகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் தோன்றிய புத்த மதம் சீனா, இலங்கை ஆகிய நாடுகளில் தேசிய மதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஜப்பான், மியன்மார் நாடுகளிலும் புத்தமதம் பரவியுள்ளது. இலங்கை, சீனா, ஜப்பான் வழியாக புத்த மதம் ஆசிய கண்டம் முழுவதும் பரவியது. மரணத்துக்குப் பின் புத்தரின் உடல் கபிலவஸ்து (தற்போதைய பீகார் மாநிலம்) என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த இடத்தைப் புத்த மதத்தினர் புனித இடமாக வழிபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ, இந்தியா வந்திருந்தபோது புத்தரின் சமாதியில் உள்ள அவரது சிதைந்த எலும்புகளை இலங்கைக்கு வழங்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.இதனை ஏற்றுப் புத்தரின் எலும்புகளை இலங்கைக்கு வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

மத்திய பண்பாட்டு துறை அமைச்சர் செல்ஜா, இலங்கைக்குச் சென்று புத்தரின் எலும்புகளை ஒப்படைக்கிறார். நாளை இலங்கையில் ஆரம்பமாகவுள்ள் கண்காட்சியில் புத்தரின் எலும்புகள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

இதுபற்றி மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறும்போது, அண்டை நாடுகளின் இதுபோன்ற கோரிக்கைகளை இந்தியாவெகு அரிதாகவே நிறைவேற்றுகிறது.இலங்கையுடனான நமது உறவு எவ்வளவு நெருக்கமானது என்பதற்குப் புத்தரின் எலும்புகளை எமது நாட்டு அமைச்சர் நேரில் சென்று வழங்குவது நல்ல உதாரணம்-என்றார். (த)

தமிழருக்கு அதிகாரப் பகிர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பம். இதனைச் சரியாக எதிர்கொள்ள வேண்டியது நம் அனைவரினதும் கடமை. கிழக்கில் வெற்றி பெற்று அந்த ஜனநாயகத் தீர்ப்பை துஷ்பிரயோகம் செய்ய அரசு முயற்சிக்கின்றது. அதற்கு நாம் துணைபோகப் போகின்றோமா?

தந்தை செல்வாவின் வழியில் நாங்கள் கண்ணியமான, நிதானமான வழியில் சென்றுகொண்டிருக்கின்றோம். அதன் மூலம் நிலைத்து நிற்கும் நிரந்தரத் தீர்வைப் பெற நாங்கள் விழைகின்றோம்.

இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழு சிபாரிசில் கூறப்பட்டுள்ளது அதிகபட்ச அதிகாரத்துடன் கூடிய அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதாகும். அதனை அடியொற்றி நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசை நடைமுறைப்படுத்த ஒரு செயல்முறைத் திட்டத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என்று ஜெனிவாத் தீர்மானம் கூறுகின்றது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் ஏற்பட்டுள்ள சர்வதேச அழுத்தத்தில் இருந்து விடுபட, கிழக்கு மாகாண சபையை நாம் வெற்றி பெற வேண்டும் என்று அரசின் அமைச்சர்கள் இப்போது பகிரங்கமாகவே கூறுகின்றனர். இதனை நாம் அனுமதிக்கமுடியுமா? சர்வதேச சமூகத்தின் தமிழர்களுக்குச் சார்பான சிந்தனையை நாம் இந்தத் தேர்தல் மூலம் பலப்படுத்தப்போகின்றோமா? அல்லது பலவீனப்படுத்தப் போகின்றோமா?

திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் நாம் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை வெற்றிகொள்ள வேண்டும். இதனை நாம் அடைந்தால் நிச்சயம் மாகாண அதிகாரத்தை நாம் பெற்றுக் கொள்ளமுடியும். அதன் மூலம் சர்வதேசத்திற்கு நாம் தெளிவான ஒரு செய்தியை கூறமுடியும். ஜனநாயக முடிவைத்தவிர பலம் வாய்ந்த முடிவு வேறு ஏதும் இல்லை.

கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஒரே வகையான நிலப்பிரச்சினை, வணக்கஸ்தல பிரச்சினை, கலாசார விடயங்கள் ஆகியன காணப்படுகின்றன.

எனவே, இங்குள்ள முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து செயற்படவே விரும்புவர். மாகாண முறை நிர்வாகம் தமிழர் போராட்டத்தினால் வந்த ஒன்று என்பது முஸ்லிம் மக்களுக்குத் தெரியும். மாகாண முறை மையானது முழுமையானது அல்ல. ஆனால் அர்த்தபுஷ்டியான அதிகாரத்தைக்கொண்டு அது கட்டியெழுப்பப்பட வேண்டும் - என்றார்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
வருடாந்த மகோற்சவம் 2012
முதலாம் திருவிழா கொடியேற்றம்



தேசம் போற்றும் தெல்லை நகர் தேவி
பாவ வினை அகற்றி பரிவுகாட்டும் பத்தினி
நாடி வந்தவர் நலம் காக்கும் நளாயினி
கொடியேறி கோல விழாக் காணும் கொற்றவையே
பாடிப் பரவிப் பக்தர்கள் பணிவர் பன்னிரு நாளும்
-அடியவர்

அனுசரணை:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்,
தெல்லியூர்.
(சி/2508)(6.9)

பணியாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு
ROOMBOY தேவை.
பொருத்தமானவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் எதிர்வரும் 25.08.2012 சனிக்கிழமை காலை 9.00 - 12.00 மணிக்கும் இடையில் சமுகமளிக்கவும்.

தினக்குரல் ரெஸ்ட்,
இல 45, செட்டி ஒழுங்கை, செட்டித்தெரு வீதி, நல்லூர்.

மரண அறிவித்தல்கள்

சுப்பிரமணியம் பூவுலிங்கம் (பூவண்ட மாமா)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.29, கண்ணாபுரம் கொட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பூவுலிங்கம் நேற்று (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், லீலாவதி, செங்கமலம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அபிமன்னன், அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.29, கண்ணாபுரம் கொட்டி,
யாழ்ப்பாணம். (21918)(3.14)

தகவல்:
சகோதரிகள்.

திருமதி கமலாம்பிகை இராசலிங்கம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை இராசலிங்கம் நேற்று (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்- இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் இராசலிங்கத்தின் (ஓய்வுபெற்ற அதிபர், மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, அன்னலட்சுமி, நிமித்தசாது ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனியும், கலாவதி (நகராட்சி மன்றம், சாவகச்சேரி), கலாநிதி (ஜேர்மனி), சுகுணவதி, நீலாவவி, புஸ்பவதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கணேசலிங்கம் (நன்னடத்தை அதிகாரி, வவுனியா) மற்றும் றக்ஷினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கணேசமணி (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) மற்றும் தவரட்ணம் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெரும் தெருக்கள் திணைக்களம், வவுனியா), பூபாலராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஜொனத்தன் (ஜேர்மனி), ஜெசுரன் (ஜேர்மனி), குமரன், Dr. சங்கீதா, சறோன் (கனடா), சௌமியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கமல் பவனம்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி/2352)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

வாக்காளர் அட்டைகள் தபால் நிலையங்களுக்கு

எருவில்,ஓக.18

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத்தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை மாவட்டத்திலுள்ள தபால் நிலையங்களிடம் கையளிக்கப்பட்டன என்று மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அசங்க ரத்னாயக்கா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 19 தபால் நிலையங்களூடாகவும், 29 உபதபால் அலுவலகங்களூடாகவும் இந்த வாக்காளர் அட்டைகள் இன்று சனிக்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளன என்று மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கதிரவெளி, செங்கலடி, துறைநீலாவணை, படுவான்கரை என நான்கு வலயங்களூடாக தபால் நிலையங்களுக்கு வாக்காளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் 347,099 வாக்காளர் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-31)

புதிய கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தி மணிக்கூட்டுக் கோபுர வீதியில் அமைந்துள்ள 4 புதிய கடைகள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு- இல 7, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.
(21921)(3.14) T.P-0772100909, 0778445932

தவறிவிட்டது

15.08.2012 அன்று தெல்லிப்பழையில் நடைபெற்ற வாகன விபத்தின்போது எனது கைப்பை மற்றும் கமரா என்பன தவறிவிட்டது. அதனை கண்டெடுத்தவர்கள் 0777729525 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (சி/2510)(9.14)

தவறிவிட்டது

லிங்கம் சோமசுந்தரம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், பேர்ஸ், முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை, ATM அட்டை என்பன யாழ்நகரப் பகுதியில் இருந்து நல்லூருக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
38, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
விநோதா அழகு நிலையம்(சலூன்)
(21907) (5.6.7) தொ.பே.: 077 678 2201

பெண் வேலையாள் தேவை

வீட்டு வேலை செய்வதற்கு
பெண் வேலையாள் தேவை.
உணவு, தங்குமிட
வசதியுண்டு.
தொடர்பு: 077 231 1915 (18143)(5-8-7)

மரண அறிவித்தல்

திருமதி தங்கமுத்து சுப்பையா

மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து சுப்பையா (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சுப்பையாவின் பாசமிகு மனைவியும் இராசரத்தினம் காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் புஸ்பராணி, யோகராணி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயும் கனகம்மா, தேவகி காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் யோகராஜா, விசித்திரதேவி ஆகியோரின் பாசமிகு மாமியும் உதயசூரியன், உதயகரன் உதயகலா காலஞ்சென்ற ஸ்ரீரங்கராகவன் மற்றும் கயன் இராமஜெயம், தாரணி, சிவகுமார், ஸ்ரீதாரணி காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் ரேகா, லக்ஷன், ஜெனனி, கிருசன், சினேகா, ஜெயா, அருட்செல்வன், சுதாயினி, கிருபாகரன், விஜிதா, கலைச்செல்வன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அஜித்தன், கயன், கோகுலன், தர்சிகன், சாருஜன், நிருசன், நிஷாந்தன், கபீசனா, நகீர்த்தனா, டிலக்சனா, தனுசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2012) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்கும்பான்,
5ஆம் வட்டாரம் (21922)(9.14)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நகராட்சி மன்ற நிர்வாக உத்தியோகத்தரும் எமது சங்க உறுப்பினருமாகிய **திருமதி கலாவதி கணேசலிங்கம்** அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி கமலாம்பிகை இராஜலிங்கம்
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி நகராட்சி மன்ற
ஊழியர் நலன்புரிச் சங்கம் (சி/2351) (5.6.7)

மரண அறிவித்தல்கள்

கந்தையா தம்பிராசா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா நேற்று (17.08.2012) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், தம்பிராசா நேசநாயகியின் அன்புக் கணவரும், உதயகுமாரி, ஜெயக்குமாரி(கனடா), சிவகுமார், சிவந்தினி, சசிகுமார் (லெலிங்கோ லைப் விற்பனை நிறைவேற்று அதிகாரி), கௌசியா, லக்ஸ்மன், கஜீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பட்டுப் பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (21921)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

பொன்னுத்துரை திட வீரசிங்கம்

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் உரும்பிராயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை திடவீரசிங்கம் (17.08. 2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- சின்னத்தங்கச்சி தம்பதியரின் மகனும், நடராசா- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், நல்லம்மாவின் (செல்லம்மா) கணவரும், காலஞ்சென்ற துரேஸ்குமார் (துரேஸ்) மற்றும் மதனகுமார் (மதன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலவதனியின் மாமனும் பங்ஷயாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
ஒஸ்கார்லேன் அருகில். (21923)(3.14)

தகவல்:
மதன்(மகன்)

திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் (இராசாத்தி)

கோப்பாய், காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி சுப்பிரமணியம் கடந்த (15.08.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் முத்துத்தம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு (இரத்தினம்-லையிற்)- நல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை (மகேந்திரம்), காங்கேசன் (கனடா) மற்றும் லோகேஸ்வரி (லண்டன்), சந்திரசேகரம் (கனடா), யோகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுலோசனா (டென்மார்க்), புஸ்பரஞ்சனா (கோப்பாய்), பிரபாகரன் (பாபு - கனடா), பிரேமாகரன் (ராஜன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், மகேந்திரன் (டென்மார்க்), பாலச்சந்திரன் (சண்முகா), பிரபாலினி (கனடா), அகிலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஆதிரை, அனுஷன், ஆஷா, சுதர்சன், செந்துஜன், அபிஷேக், திசாந்த், ஆரணி, ஆரதி, ஆதிஜன், சுஜீவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

திருமதி வயிரமுத்து செல்லம்மா



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவயிரமுத்து செல்லம்மா கடந்த (13.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை வயிரமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், வரதராணி, வரதராசா (31 ஸ்ரீ 3731 மினிபஸ் உரிமையாளர்), செல்வராசா சிவராசா (ஜேர்மனி), யோகராசா (தெல்லிப்பழை ப.நோ.கூ.ச.) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜகம்பீரம், செல்வநாயகி, உமாதேவி, செல்வராணி (ஜேர்மனி), ஸ்ரீதேவி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியும், கதிரமலை, கனகராணி, கனகரத்தினம், நவரத்தினம், செல்வராசா, குணரத்தினம் ஆகியோரின் சகோதரியும், இரத்தினம், வன்னிய சிங்கம், தங்கம், பரமேஸ்வரி, மல்லிகா தேவி, மனோரஞ்சினி ஆகியோரின் மைத்துனியும் வசந்தா - ஜெகதீசன், றோகினி - யுகானந்தன் (அவுஸ்திரேலியா), சர்மிளா, வர்ணன், பர்மியா, சுதர்சன், சுமித்திரன், சுமித்தா (ஜேர்மனி), செந்தூரன், உசாந்தினி, யோகப்பிரியன், யோகனுசன் ஆகியோரின் பேர்த்தியும், லிங்கதா சன், ஜீவதாசன், சுகிர்ததாசன், ஜெயதாசன், யுகானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பிள்ளைகள்.

கஞ்சிட்டி,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

(21878) (45.6.7)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

'ரெசோ'வின் ஆரம்பப் புள்ளி அனைத்துலகை சிந்திக்க வைக்குமா?

ஈழத்தமிழர்களுக்குச் சேரவேண்டிய அரசியல் மற்றும் வாழ்வுரிமைகள் வழங்கப்படவேண்டுமென்று, உலகின் எந்தப் பகுதியைச் சேர்ந்த எவரும் மனித நீதி மற்றும் நியாயம் கருதிக் கருத்துத் தெரிவித்தாலும்-

அதுகுறித்து முதலில் மூக்கில் வியர்ப்பதும் பேயைக் கண்டது போன்று பீதி கொள்வதும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி போன்ற இனவாத அரசியல், சமூக அமைப்புகளே என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

தமிழர்களின் உரிமைகள் குறித்து இலங்கையில் மட்டுமன்றி, உலகின் எந்த நாட்டில், எவரேனும் ஆக்கபூர்வமான கருத்துத் தெரிவித்தால், தமது தலையில் நெருப்பு விழுந்துவிட்டது போன்று, உச்சத்தொனியில் கண்டனம் தெரிவிப்பதற்கு காத்திருப்பவை இந்த அமைப்புகள்.

அந்த வகையில், வரிசையில், தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி கடந்த வாரம் நடத்திய ஈழ ஆதரவாளர் அமைப்பின் (TESO) மாநாட்டையும் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் கண்டு இவை சீறிச் சிவிர்த்துள்ளன. தங்கள் மன ஆவேசங்களைத் தணித்துக்கொள்ள மு.கருணாநிதி, இரா.சம்பந்தன் ஆகிய இருவரின் கொடும்பாவிகளை எரித்ததோடு தரிக்காது, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தையும் முற்றுகையிட்டனர்.

சென்னை மாநாட்டில் பங்குபற்றி உரையாற்றிய புதிய இடதுசாரிக் கட்சியின் தலைவரும், இடதுசாரிக் கோட்பாடுகளை இறுக்கமாகப் பின்பற்றி வருபவருமான கலாநிதி விக்கிரமபாகுவுக்கு இனத்துரோகிப் பட்டம் சூட்டிக் கண்டிக்கவும் இவர்கள் தவறவில்லை.

அத்தோடு-

* இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட போர்க் குற்றங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் மீது, ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*ஈழத் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வாதாரம், இருப்பு என்பன குறித்து, அபிலாசைகள் குறித்து, அவர்களின் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும்-

*தமிழ் மக்களின் பிரதேசங்களில் இருந்து அரச (இலங்கை) இராணுவத்தை அகற்ற வேண்டும்- என்பன உட்பட பதினான்கு தீர்மானங்கள் 'ரெசோ' மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தத் தீர்மானங்கள், ஐக்கிய நாடுகள் சபை, ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச நீதிமன்ற ஆணைக்குழு உட்பட உலகநாடுகளின் பிரசித்திபெற்ற உயர்அமைப்புகள் பலவற்றுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஈழம்வாழ் தமிழ் மக்கள் கடந்த ஆறு தசாப்தங்களாக, தமக்குரிய அரசியல் உரிமைகளை இழந்தவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் சுமார் மூன்று தசாப்தங்களாக நடத்திய அறவழிகளிலான போராட்டங்கள், சுமார் மூன்று தசாப்தங்களாக நடத்திய வன்முறைப் போராட்டங்கள் யாவும் ஒடுக்கப்பட்ட நிலையில்-

இப்போது நிர்க்கதி நிலைமைக்குத் தள்ளப்பட்டு ஜனநாயக அரசியல் அதிகாரங்கள் யாவும் பறிக்கப்பட்ட நிலையில்-

உதவுவார் எவரும் இன்றி அனைத்துலக சக்திகளாவது தமக்கு உதவமாட்டாவா என்ற ஏங்கித் தவிக்கும் நிலையிலேயே உள்ளனர்.

இத்தருணத்தில் தமிழகத்தில் நடத்தப்பட்ட 'ரெசோ' மாநாடு அவர்களின் அரசியல் விடிவுக்கான ஒரு முளையாக அமையக் கூடாதா என்ற ஆதங்கமும் ஏக்கமும் அவர்கள் மத்தியில் உயர்ந்து நிற்கின்றன.

அத்தகு நிலையைத் தவிர்ப்பதற்கு, சமாதான சகவாழ்வை உருவாக்குவதற்கு தென்னிலங்கையின் உயர் அரசியல் தலைவர்களுக்குக் கடுகளவும் விருப்பம் இல்லை.

அதற்கான ஆகப்பிந்திய உதாரணம் இது:

எமது நாடு குறித்து பிற நாடுகளில் விமர்சிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கக்கூடாது. ஈழம் கோருபவர்கள் எம்மிடம் எதிர்பார்ப்பதை நாம் நிறைவேற்றி வழங்கக்கூடாது. இலங்கைக்கு எதிரான விமர்சனங்களுக்குத் துணைபோகக்கூடாது. ஈழம்கேட்போரின் கோரிக்கைக்கு, எதிர்பார்ப்புக்கு நாட்டை நேசிக்கும் எவரும் இடமளிக்கக்கூடாது-என்று இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறுத்து உறுத்துக் கருத்து வெளியிட்டிருப்பதனையே உதாரணம் காட்டுவது பொருத்தம்.

ஜனநாயகம், மக்களின் அரசியல் சுதந்திரம், சமாதான சகவாழ்வு ஆகிய உலகளாவிய கோட்பாடுகளைப் புறந்தள்ளிச் செயற்படும் போக்குத் தொடரும்-

அதன்பால் சிறுபான்மையின மக்களின் பிரித்தெடுக்க முடியாத உரிமைகளை நசுக்கும் நடவடிக்கைகளே மேலோங்கும் பாங்கு தொடரும்-

சிறுபான்மையின மக்கள் பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் ஜனநாயகம் என்ற பெயரில் கிள்ளித் தெளிக்கும் அற்ப சொற்பங்களைப் பெற்றுக்கொண்டு திருப்தி அடையவேண்டும்-

என்ற ஜனநாயகத்துக்கான புதிய 'சித்தாந்தங்களை' வகுப்பதிலும் செயற்படுத்துவதிலும் இலங்கையின் பெரும்பான்மையின அரசு ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என்பது ஆட்சியாளர்களால் 'பிரகடனப்படுத்தப்படும்'சூழமைவில்-

'ரெசோ' மாநாட்டின் தீர்மானங்கள் பதின்நான்கும் ஐக்கிய நாடுகள் சபை, ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச நீதிமன்றம் உட்பட உலகளாவிய சமூக அமைப்புகள் மற்றும் அனைத்துலக நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை, ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினையை உலகளாவச் செய்துள்ளது.

இதனூடாகவே தமக்கு விமோசனமும் அரசியல் விடிவும் கிட்டும் என்று சிறுபான்மையினர் உணரும் நிலைக்கு, நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் செயற்பாடுகள் உந்தித்தள்ளுவதை எவரும் எடைபோட முடியும். கால மாற்றங்களினால் 'ரெசோ' அதற்கான ஆரம்பப் புள்ளியாக மாறும் என்று எதிர்பார்ப்போமாக.

தேசிய பிரச்சினைக்கு விரைவான தீர்வினை அரசு ஏற்படுத்த வேண்டும்

வற்புறுத்துகிறது 'மிரர்' பத்திரிகை

கொழும்பு,ஓக 18

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயத்தை அமைதியான முறையில் வழங்காது போனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் தனி அரசு ஒன்றுக்கான கோரிக்கையை இறுக்கி வலியுறுத்தத் தொடங்குவார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது. எனவே ராஜபக்ஷ அரசு காலத்தை வீணடித்துக் கொண்டிருக்காமல் தேசியப் பிரச்சினைக்கு நீதியும் நியாயமுமான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளது கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லிமிரர் பத்திரிகை. அதன் ஓகஸ்ட் 17 ஆம் திகதிய ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கபட்டுள்ளதாவது;

2012 ஆம் ஆண்டு பாதுகாப்புக் கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பேசுகையில், போர் முடிவடைந்ததன் பின்னர் மீள் கட்டுமானம், மீள் குடியேற்றம், மீள் குடியமர்வு, மீள் ஒருங்கிணைப்பு மற்றும் மீள் நல்லிணக்கம் ஆகிய ஐந்து துறைகளினதும் முக்கிய அம்சங்களில் பெரிய முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக தெரிவித்திருந்தார். வடக்கில் இராணுவத்தின் எண்ணிக்கை 21 ஆயிரமாக குறைக்கப்பட்டிருந்தாலும் அங்கு இராணுவம் அகற்றப்படமாட்டாது என்றார். பாதுகாப்பு நோக்கங்களுக்காக கேந்திரமான இடங்களில் தொடர்ந்தும் இராணுவம் இருந்து வரும். ஆனால் அவர்களின் இருப்பு, சட்டம் ஒழுங்கு செயற்பாடுகளில் அத்துமீறுவதாக இருக்காது. அவை பொலிஸாரால் கையாளப்படும் என்றார்.

இலங்கைக்கு எதிராக புலம் பெயர்ந்தவர்கள் பொருளாதார தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு ஆயத்தமாகி வருகிறார்கள் என்று வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வெளியிட்டிருந்த அச்சங்களுக்கு மத்தியில் இந்த கருத்தரங்கு இடம்பெற்றது. திரு ராஜபக்ஷவும் டாக்டர் பீரிஸும் என்னதான் கூறிய போதிலும் எதிர்தரப்பு மற்றும் சுயேச்சை விமர்சகர்களைப் பொறுத்தவரை மீள் நல்லிணக்க துறைகளில் மிகச் சிறிய அளவிலேயே முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

மிரர் பத்திரிகை மேலும் கூறுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னர் எல்.ரி.ரி.ஈ. சார்பு பிரதிநிதிகளாகச் செயல்பட்டார்கள் என்றும் இப்பொழுது சர்வதேச புலம் பெயர் மக்களின் ஊதுகுழலாக பணியாற்றுகிறார்கள் என்றும் சில அரசுத் தலைவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். அரசுத் தலைவர்கள் எதைக் கூறினாலும் வடக்கிலுள்ள மக்களால் தெரிவுசெய்யப் பட்டவர்கள் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள். எனவே அவர்கள் அந்த மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். வடக்கு மாகாண சபைக்கான தேர் தலை நடத்தும்படி உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து கோரிக்கைகள் வந்த போதிலும் அடுத்த வருடம் செப்ரெம்பர் வரை அங்கு தேர்தலை நடத்தப் போவதில்லை என்கிறது அரசு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல இந்தியா, அமெரிக்கா மற்றும் பல நாடுகளும் கூட வடக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும்படி கோருகிறார்கள். அந்த மக்களுக்கு சுயநிர்ணயத்தை வழங்குவதற்கான முதல் படியாகவே இது இருக்கும் என்பது அவர்களின் கருத்து.

இவ்வாறு தெரிவித்துள்ளது மிரர் பத்திரிகை அதன் ஆசிரியர் தலையங்கத்தில். (ப)

நவக்கை வீதி மதகு சேதம்

யாழ்ப்பாணம், ஓக.18

வேலணை நவக்கை வீதியென முன்னர் அழைக்கப்பட்ட நீர் விநியோக வீதியில் உள்ள மதகு முற்றிலும் சேதமடைந்துள்ளது.

இந்த நிலையில் பொதுமக்கள் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாதுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. வீதி மதகு உடைந்ததில் பக்கத்தில் உள்ள வயல் ஊடாகவே தற்சமயம் வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெறுகின்றன.

மழைகாலத்தில் வயல் வெளிகளில் வெள்ளம் நிறைந்து காணப்படும்.

இந்த நிலையில் மழை காலத்தில் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிடும்.

அதனைக் கருத்தில் கொண்டு மதகைத் திருத்தம் செய்யும் பொருட்டு கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டிருந்த கட்டடப் பொருள்கள் பின்னர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும் இந்தப் பகுதி [illegible] தெரிவித்தனர்.

(ம-7)

ரொட்டிக்கு கறி இல்லாத விவகாரம்

நான்கு பேருக்கு ரூ.50 ஆயிரம் ஆள்பிணை

தென்மராட்சி,ஓக.18

இரவு உணவு வழங்கியதில் எழுந்த கைகலப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று ஆள் பிணையில் செல்லுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விசுவமடுவிலிருந்து லொறியில் வந்தவர்கள் கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள உணவகத்தில் உணவு அருந்துவதற்கு சென்றிருந்தனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட கொத்து ரொட்டிக்கு குழம்பு இல்லை எனத் தெரிவித்ததால் எழுந்த வாக்குவாதம் கைகலப்பாக மாறியது. இதில் காயமடைந்த ஐந்து பேர் கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அழைத்து வரப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வர் நேற்று தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-9)

சனசமூக நிலையங்களுக்கு ரூ.4 லட்சம் பெறுமதியான உபகரணம்

நல்லூர் பிரதேச சபை வழங்கவுள்ளது

யாழ்ப்பாணம்,ஓக.18

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 4 லட்சத்து 50ஆயிரம் பெறுமதியான உபகரணங்களை வழங்கவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களில் இயங்கும் நிலையில் உள்ள 42 சனசமூக நிலையங்களுக்கே உதவிகள் வழங்கப்படவுள்ளன.

சனசமூக நிலையங்களின் தேவைகருதி தளபாடங்கள், திருத்த வேலைக்கான நிதித் தேவைகள், உபகரணங்கள் மற்றும் மின்சார இணைப்பு இல்லாத நிலையங்களுக்கு மின்சார சபையுடன் தொடர்புகொண்டு இணைப்புகளை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

சனசமூக நிலையங்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிதி சபையிலிருந்தே ஒதுக்கப்பட்டுள்ளது.

தமது பிரதேசங்களிலுள்ள சனசமூக நிலையங்களில் உள்ள தேவைகளை சபையிடம் விண்ணப்பித்தால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளமுடியும் என்றும் கூறப்பட்டது.

> நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களில் இயங்கும் நிலையில் உள்ள 42 சனசமூக நிலையங்களுக்கே உதவிகள் வழங்கப்பட வுள்ளன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி பி.ப 3 மணிக்கு நல்லூர் பிரதேச சபை யில் நடைபெறவுள்ளது எனவும் தெரிவித்தார். (ம-13)

மன்னாரில் தங்கியிருந்த இந்தியர்கள் நால்வர் கைது

மன்னார்,ஓக.18

மன்னார் நகரப் பகுதியில் தங்கியிருந்த நான்கு இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மன்னார்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நகரப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்புத் தேடுதலின் போதே நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்தியர்களில் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர்.

மன்னாரிலுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்த போதே இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து ஒரு மாதம் என்றும், மன்னாருக்கு வந்து நான்கு நாள்கள் என்றும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்கள் நால்வரும் தற்போது தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியின் வவுனியா வருகையை முன்னிட்டு பாதுகாப்பின் பொருட்டுப் பொலிஸார் தேடுதல் மேற்கொண்ட போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-12)

சிறுவனைக் காணவில்லை

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் கடந்த புதன்கிழமை தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற சிறுவன் வீடு திரும்பவில்லையெனப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

மூன்றாம் வீதி பரந்தனைச் சேர்ந்த 14 வயதான விமலநாதன் சயிதன் என்ற சிறுவனே காணாமல் போயுள்ளான் என்று பெற்றோரால் கிளிநொச்சிச் செயலக சிறுவர் நன்னடத்தை அலுவலகம், கிராமஅலுவலர் அலுவலகம், பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களில் முறையிடப்பட்டுள்ளது.

(க-16-6)

போக்குவரத்து சீரில்லாததால் கிராம மக்கள் அவலத்தில்

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தானில் இந்த நிலை

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளுக்குச் சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இந்தப்பகுதிகளுக்குச் செல்வோரும், இங்கிருந்து வேறு இடங்களுக்குச் செல்வோரும் சுமார் 600 ரூபா முதல் 800 ரூபா வரை கொடுத்து வாகனங்களை வாடகைக்கு அமர்த்திப் பெரும் சிரமங்களின் மத்தியில் பயணங்களை மேற்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

கிளிநொச்சியில் இருந்து காலை 8 மணிக்கு ஒரு பஸ்ஸும் அதன் பின்னர் மாலையில் ஒரு பஸ்ஸும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. சில நாள்களில் அதுவும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

> பூநகரி மன்னார் வீதியின், ஜெயபுரம் சந்தியில் இருந்தோ சுமார் 600 ரூபா முதல் 800 ரூபா வரை கொடுத்து ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்தி தமது பயணத்கை மேற்கொள்ள வேண்டியநிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் மேற்படி கிராமங்களுக்கு வேறு தேவைகளுக்குச், செல்வோரும் அந்தக் கிராமங்களில் பணியாற்றச் செல்லும் ஆசிரியர்கள், அரச அதிகாரிகள் ஆகியோரும் பஸ் வசதிகள் இன்மையால் கிளிநொச்சி அக்கராயன், அம்பலப் பெருமாள்குளம் சந்தியில் இருந்தோ அல்லது ஏ-32 பூநகரி மன்னார் வீதியின், ஜெயபுரம் சந்தியில் இருந்தோ சுமார் 600 ரூபா முதல் 800 ரூபா வரை கொடுத்து ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்தி தமது பயணத்கை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இந்தக் கிராமங்களில் வாழ்ந்து வருவதால் இவர்கள் கால் நடையாகவே தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள மக்கள் போரினால் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலையில் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் மேலும் மேலும் துன்பங்களையே அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக வீதிகளின் புனரமைப்பு, போக்குவரத்து வகதிகள் என்பன சீராக இடம்பெறாததால் இவர்களின் வாழ்க்கை அவலத்தில் தள்ளப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

தமது அவல நிலையை உணர்ந்து அதிகாரிகள் உதவ வேண்டும் என இங்குள்ள மக்கள் அவசர வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

(க-6)

இப்படியும் ஓர் அவல நிலையா?

இரணைமடுக்குளம் வற்றியதால் பவுஸர் மூலமாக நீரை எடுத்து வந்து தமது நெல் வயல்களுக்கு நீரைப் பாய்ச்சும் முரசுமோட்டை விவசாயிகள். (க-6)

இடநெருக்கடியுடன் இயங்கும் முழங்காவில் மகாவித்தியாலயம்

அக்கராயன் ஓக.18

முழங்காவில் மகாவித்தியாலயம் இடநெருக்கடியுடன் இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது இருந்த கட்டடங்களிலேயே இந்த பாடசாலை தற்போது இயங்கி வருகிறது.

புதிய கட்டடங்கள் உருவாக்கப்படவில்லை. தற்போது ஆசிரியருக்கான விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பாடசாலையில் மாணவர்களின் ஒன்று கூடல் மண்டபம் இல்லாத நிலையும் காணப்படுகிறது.

கிளிநொச்சி நகரில் இருந்து மன்னார் மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள முக்கிய பாடசாலையான இங்கு உயர்தரவகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றைப் போதிக்குமாறு பெற்றோர்கள் விடுத்துவரும் வேண்டுகோள் இது வரை நிறைவேறாமல் உள்ளது.

மாணவர்கள் இந்தப் பாடங்களைக் கற்பதற்கெனப் பூநகரிக்கும் பிற இடங்களும் செல்கின்றனர்.

(க-18)

சமயப்பழக்க வழக்கங்களை பெற்றோர்கள் ஊட்ட வேண்டும்

அருட்திரு ஜெயானந்தன் அடிகளார் அறிவுரை

அக்கராயன்,ஓக.18

சமய, பழக்க வழக்கங்களை பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். இவ்வாறு அருட்திரு மா.ஜெயானந்தன் அடிகளார் தெரிவித்துள்ளார். அக்கராயன் இலங்கை அமெரிக்கன் மிசன் திருச்சபையின் முன்பள்ளியில் பெற்றோர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சமூகச் சீரழிவுகளிலிருந்து சிறார்களைப் பாதுகாத்துக் கொள்ள பெற்றோர்கள் அறநெறிப் பண்புகளைத் தமது பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும்.

அறநெறிப் பண்புகள் சிறார்கள் மத்தியில் குறைந்து வருகின்றன. மதம் என்பது நற்பண்புகளை ஊட்டி விடுவதாக இருத்தல் வேண்டும். சிறார்களை வழிப்பாட்டுத் தலங்களுக்குப் பெற்றோர்கள் அழைத்துச் செல்லவேண்டும். சமய நெறிமுறைகளை பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். சமய நெறி முறைகளில் இருந்து நாம் விடுபட்டுச் செல்ல முடியாது.

சமய வழிமுறைகளைப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் போதுதான் நற்பண்புகள் மிகுந்த நல்ல இளைய சமுதாயம் உருவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

கொக்குபடைச்சான் தபாலகம் மீண்டும் பழைய இடத்தில்

மன்னார்,ஓக.18

மன்னார், முசலிப்பிரதேசத்தில் கொக்குபடைச்சான் உப அஞ்சல் அலுவலகம் கடந்த 22 வருடங்களின் பின்னர் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச அத்தியட்சகர் ஐ.சின்னப்பு தெரிவித்தார்.

கடந்த 22 வருடங்களாக வேறு இடத்தில் இயங்கிய இந்தத் தபாலகம் மக்களின் வசதி கருதி அதே இடத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மன்னார் தபாலகத்தில் தொடர்பாடல் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் சின்னப்பு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மன்னாருக்கு வருகை தந்த தபால் மா அதிபர் ரோஹண அபயவர்தன இந்த அலுவலகத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

மேலும் இந்தப்பிரதேசத் தபால் சேவையின் வருங்கால அபிவிருத்தி மற்றும் முன்னெடுப்புகள் குறித்தும் தபால் மா அதிபர் உரிய உயரதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாணத் துக்கான பிரதி அஞ்சல் மா அதிபர் என். இரத்தினசிங்கமும் கலந்துகொண்டார். (க-17)

இனம்தெரியாதவர்களால் சுடப்பட்ட வர்த்தகர் வைத்தியசாலையில்

முள்ளியவளையில் சம்பவம்

முள்ளியவளை, ஓக.18

தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளையில் இனம்தெரியாதவர்களால் சுடப்பட்டவர் காலில் காயமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமது வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த நகைக்கடை உரிமையாளரான 44 வயதுடைய பாலசுந்தரம் கிரிதரன் என்பவரே சூட்டுக்கு இலக்கானவர் ஆவார்.

சம்பவதினம் இவரது வீட்டுக்கு வெளியே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நின்றவாறு இவரைப் பெயர்கூறி அழைத்துள்ளனர். சத்தம் கேட்டு வெளியே வந்த கிரிதரனின் மகன் தந்தையைக் கூப்பிட்டுள்ளார். அவர் வெளியே வந்ததும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் கால் தொடையில் பலத்த காயமடைந்த கிரிதரன் உடனடியாக முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

> அவர் வெளியே வந்ததும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

பொலிஸார். இந்தச் சம்பவம் தொடர்பாகத் தீவிரமாக விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க- 433-500)

மாடுகள் கூடுகின்ற இடங்களில் தண்ணீர் வசதியை ஏற்படுத்துக

பசுக்கொலைக்கு எதிரான அமைப்பின் நிறுவுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.18

மாடுகள் கூடும் இடங்களில் தண்ணீர் வசதிகளை வேலணைப் பிரதேச சபை மேற்கொள்ள வேண்டும் என்றும் இதற்கு பவுசர் மூலம் தண்ணீர் விநியோகிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பசுக்கொலைக்கு எதிரான அமைப்பின் நிறுவுநர் கே.கங்கைவேணியன் வேலணை பிரதேச சபையிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தீவகத்தில் குடிதண்ணீருக்காக கால்நடைகள் பல்வேறு நீர்நிலைகளைத் தேடி அலைந்து திரிகின்றன.

பல நூற்றுக் கணக்கான கால்நடைகள் இறக்கும் தறுவாயில் உள்ளன. இந்த நிலையில் கால்நடைகளைக் காப்பாற்ற வேலணைப் பிரதேச சபை மாடுகள் கூடும் இடங்களில் பவுசர் மூலம் தண்ணீர் வழங்கி உதவ வேண்டும்.

தற்போது தீவகத்தில் குளங்கள், குட்டைகள், கிணறுகள் யாவும் வறட்சியால் வற்றிவிட்டன. இந்த நிலையில் மழையும் இல்லாத சூழலில் பச்சைப் புல்லும் மாடுகளுக்கு இல்லை.

தாகத்தால் அலையும் கால்நடைகளுக்கு தண்ணீர் வழங்க வேலணை, நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச சபைகளின் தலைவர், செயலாளர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தத் திட்டங்களைப் பிரதேச சபைகள் முன்னெடுக்கும்போது பிரதேச மட்டத்தில் உள்ள சமூக மட்ட நிறுவனங்களான சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளும் இணைந்து செயற்பட வேண்டும்.- என்று தெரிவித்தார். (ம-50)

எழுதுமட்டுவாழ் தெற்கில் பொலிஸ் நடமாடும் சேவை

தென்மராட்சி, ஓக.18

கொடிகாமம் பொலிஸார் எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு மக்களுக்கான நடமாடும் சேவையை நடத்தவுள்ளனர்.

எழுமட்டுவாழ்ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் நடமாடும் சேவை இடம்பெறும்.

நடமாடும் சேவையில் தொலைந்த தேசிய அடையாள அட்டை, காலங்கடந்த பிறப்பு தொடர்பான முறைப்பாடுகள் போன்றவற்றுக்குச் சான்றிதழ் வழங்கலும் இலவச மருத்துவப் பரிசோதனை முகாமும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கலும் இடம்பெறும் என்று எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

சிவில் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும் எனவும் பிரிவு மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-9)

இரு பயனாளிகளுக்கு உழவு இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஓக.18

புங்குடுதீவு தெற்கு, வேலணை வடக்கு, மண்கும்பான் பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூவருக்கு இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நயினாதீவுப் பகுதிக்கும் மூன்று இரண்டு சக்கர உழவு இயந்திரம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாய பெரும்போக உத்தியோகத்தர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டில் வேலணையில் தெரிவு செய்யப்பட்ட இரு பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் விற்பனை நிலையம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் பல லட்சம் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின. நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற இந்தத் தீ விபத்தில் விற்பனை நிலையமும் மேல் தளத்தில் இருந்த இருந்த களஞ்சிய சாலையும் எரிந்துள்ளன. அந்தப் பகுதிகளில் நேற்று முன்தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த வேளையிலும் எவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-13)

அனுமதியின்றி தீவக மாடுகளை வெளியே கொண்டு செல்லத் தடை

யாழ்ப்பாணம், ஓக.18

பதிவு செய்யப்பட்ட மாடுகளே தீவகத்தில் இருந்து வெளியிடங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும்.

இறைச்சிக்காக கால்நடைகளைக் கொண்டு செல்லும்போது அதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.

வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விவசாயக் குழுக் கூட்டம் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மூன்று லீற்றருக்கு மேல் பால் தரும் மாடுகளைத் தீவகத்தில் இருந்து வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லவும் இறைச்சிக்காக அவற்றைக் கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

நல்லூர் தீர்த்த உற்சவத்தில் நூற்றுக்கணக்கான காவடிகள்

யாழ்ப்பாணம், ஓக.18

நல்லூர்க் கந்தனின் தீர்த்த உற்சவத்தை ஒட்டி நேற்றுக்காலை முதல் நூற்றுக்கணக்கான காவடிகள் ஆலயத்தை வந்தடைந்தன. காவடிகள் எடுத்து பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் நேற்றுக் காலை முதல் தூக்குக் காவடி, ஆட்டக் காவடி உட்பட நூற்றுக் கணக்கான காவடிகள் நல்லூர் ஆலயத்தை வந்தடைந்தன. நேற்று மதியம் தாண்டியும் காவடிகளின் வருகை நல்லூரில் காணப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள புலம்பெயர் தமிழர்களும் காவடிகளை எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

காவடிகள் காலை தொடக்கம் நண்பகல் வரை ஆலயத்தை நோக்கி வந்ததால் பிரதான வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் இருந்தும் அதிகளவிலான காவடிகள் நேற்று நல்லூருக்கு வந்து சேர்ந்தன. (த-17)

பெண் சமுர்த்தி அலுவலரிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

வலி வடக்கு, ஓக.18

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் தனிமையில் சைக்கிளில் வந்த பெண்ணின் சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி கழுத்தை நெரித்து திருடிச் செல்லப்பட்ட சம்பவம் பிற்பகல் உடுவில் லவ் லேனில் இடம் பெற்றுள்ளது.

தனிமையாக வந்த பெண் சமுர்த்தி அலுவலரை, மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு இறங்கி மிகவும் துணிகரமாக சைக்கிளை மறித்து அவருடைய கழுத்தை நசித்து அவருடைய கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துள்ளனர்.

இதேவேளை இந்த வீதியில் வந்த மற்றொரு பெண் இதனைப் பார்த்து விட்டு சத்தமிடவே குறிப்பிட்ட இளைஞர்கள் சங்கிலியுடன் தப்பி ஓடினர் என்று கூறப்பட்டது.

இந்தத் திருட்டு சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-86)

இலவச கணினிப் பயிற்சிகள்

வடமராட்சி, ஓக.18

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் பொலிகண்டி விதாதா வள நிலையத்தில் புதிய கணினி வகுப்புக்கள் மூன்று பிரிவுகளாக எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தலா 3 மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படும். இந்தக் கணினிப் பயிற்சியைப் பெற விரும்புவோர் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-8)

நயினை பள்ளிவாசல் கடற்கரை வீதி சேதத்தால் போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம். ஓக. 18

நயினாதீவு தெற்கு பள்ளிவாசல் கடற்கரை வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச சபை இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் ந. கருணாகரகுரு மூர்த்தி தெரிவித்துள்ளார்.

நயினாதீவு தெற்கு பள்ளிவாசல் கடற்கரை வீதி சேதமடைந்துள்ள நிலையில் இந்த வீதியூடான பஸ் போக்குவரத்தும் முற்றாக சீர்குலைந்துள்ளது.

எனவே இந்த வீதியின் அபிவிருத்தியைத் துரிதமாக முன்னெடுத்து பொதுமக்களின் இலகு போக்குவரத்துக்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-50)

முக்கியமான இடங்களில் பாதசாரி கடவைகள்

தென்மராட்சி, ஓக.18

வீதி அகலிப்பு செய்யப்பட்ட சாவகச்சேரி நகர்ப் பகுதியின் முக்கிய இடங்களில் பாதசாரி கடவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி வைத்தியசாலை, பிரதேச செயலகம், டிறிபேக் கல்லூரி ஆகியவற்றின் முன்பாக ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பாதசாரிகள் கடவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ம-9)

மாதகல் மேற்குக் கிராமத்தில் குடியமர்வு நடவடிக்கை இல்லை

யாழ்ப்பாணம், ஓக.18

மாதகல் - பொன்னாலை வீதி மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டு இரண்டு மாதங்களாகின்றபோதும் அந்த வீதியுடன் இணைந்த மாதகல் மேற்குக் கிராம சேவையாளர் பிரிவில் இன்னமும் மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1992 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கைகளின் காரணமாக மாதகல் மேற்கு (ஜே/252) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 20 வருடங்களாக அந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்தப் பகுதியில் மீளக்குடியமர்வதற்காக 269 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன.

இருப்பினும் குறித்த பகுதியை தமது கட்டுப்பாட்டினுள் வைத்துள்ள கடற்படையினர் மக்களிடம் அவர்களது காணிகளை கையளிக்க மறுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மாதகல் மேற்கு கிராம அலுவலர் பகுதியை உள்ளடக்கிய மாதகல்- பொன்னாலை வீதி மக்கள் பாவனைக்காகத் திறந்துவிட்டப்பட்டது. வீதி திறக்கப்பட்டுள்ள நிலையிலும் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

மாதகல் சம்பில் துறைப் பிரதேசத்தில் விகாரையை அண்மித்த பகுதியிலுள்ள தனியார் காணிகளைத் தமக்குத் தருமாறு கடற்படையினர் கோரியிருந்தனர். அந்தக் காணிகள் கடற்படையினருக்கு இன்னமும் வழங்கப்படாத நிலையில் அதில் விகாரைக்கு வருவோருக்கான தங்குமிடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேபோன்று விகாரையின் மறுபக்கத்தில் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களது தனியார் காணிகளைக் கடற்படை முகாம் அமைப்பதற்குக் கடற்படையினர் கோரியுள்ளனர் என்றும் இந்த நிலையில் இன்னமும் அது அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் குறித்த பகுதியில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

நிலக்கரிச் சுரங்க ஊழலால் ரூ. 1.86 லட்சம் கோடி இழப்பு

மத்திய தணிக்கைத்துறை குற்றச்சாட்டு

டில்லி, ஓக.18

இந்தியாவின் 57 நிலக்கரி சுரங்கங்களை 2004-2009 ஆம் ஆண்டுகளில் ஏலம் ஏதும் விடாமல் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கியதில் ரூபா 1.86 லட்சம் கோடி அளவுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக மத்திய தணிக்கைத் துறை (சி.ஏ.ஜி) குற்றம் சாட்டியுள்ளது.

இது தொலைத் தொடர்புத் துறையில் நடந்த ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டால் ஏற்பட்ட ரூபா 1.76 லட்சம் கோடியை விட அதிகமாகும்.

இதுதொடர்பான அறிக்கை நாடாளு மன்றத் தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், 2004-2009 ஆம் ஆண்டு வரை நிலக்கரி சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ததில் மட்டும் ரூ.186 லட்சம் கோடி மத்திய அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் ஜிண்டால் ஸ்டீல் அண்ட் பவர், டாடா நிறுவனமும் தென் ஆபிரிக்காவின் சசோல் நிறுவனமும் இணைந்து ஆரம்பித்த ஸ்டேடர்ஜி எனர்ஜி டெக் சிஸ்டம்ஸ், அனில் அகர்வாலின் நிறுவனங்கள், அதானி குரூப், ஆர்சலர் மிட்டல், எஸ்ஸார் குரூப், லான்கோ ஆகிய நிறுவனங்கள் பெரும் இலாபம் அடைந்துள்ளன.

சுமார் 44 பில்லியன் தொன் நிலக்கரி கொண்ட சுரங்கங்களை ஏலமே விடாமல் மிக மிகக் குறைவான விலைக்கு இவர்களுக்கு மத்திய அரசு ஒதுக்கித் தந்துள்ளது என்று சி.ஏ.ஜி. குற்றம் சாட்டியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் யுரேனியம்

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள சில இடங்களில் யுரேனியம் மற்றும் உலோக மூலக் கூறுகள் இருக்கின்றன என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் அமிருதசரஸ் குருநானக் தேவ் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்ததாக மத்திய குடிதண்ணீர் மற்றும் வடிகால் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 ஆம் ஆண்டு யுரேனியம் கண்டுபிடிப் புக்கான ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வில் பஞ்சாபின் படிண்டா மாவட்டத்தில் உள்ள 22 கிராமங் களில் இருந்து 100 இடங்களில் நிலத்தடி நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றை ஆய்வாளர்கள் பரிசோதித்த போது, அதில் யுரேனியத் தாது இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, பஞ்சாப் மாநில சுகாதாரத்துறை 2000 நிலத்தடி நீர் மாதிரிகளை எடுத்து மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையத்துக்கு சோதனைக்கு அனுப்பியது.

அவற்றில் 1686 மாதிரிகளின் முடிவுகள் தரப்பட்டன. அதில் 261 மாதிரிகளில் யுரேனியம் மற்றும் கதிரியக்கக் கனிமங்கள் மற்றும் கனரக உலோகங்களின் மூலக்கூறுகள் அனுமதிக்கப்பட்ட அளவைத்தாண்டி இருப்பது தெரிய வந்தது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது-என்றார். (வ)

குஜராத் மாநிலம் சபர்மதி ஆற்றில் நடந்த ஒரு படகுப் போட்டியை முதல்வர் நரேந்திரமோடி ஆரம்பித்து வைத்தார்.

அஸாம் கலவரங்களில் தொடர்புடைய 23 வயது இளைஞன் கைது

காணொலி ஆதாரம் சிக்கியது

அஸாம் மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற மோசமான கலவரங் களில் சம்பந்தப் பட்ட 23 வயதுடைய இளைஞன் ஒருவன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸா ரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இதற்கு ஆதாரமாக ஒரு காணொலிப் பதிவு பொலிஸிடம் சிக்கியுள்ளது.

'சலீம் அல்லரக்கா சௌக்கியா அலியஸ் அலி' எனும் பெயருடைய இந்த இளைஞன் கலவரங்களின் போது பொலிஸாரின் துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றி அவர்களுக்கு எதிராகப் பாவிப்பதற்கு முயற்சி செய்தமை வீடியோவில் பதிவாகியுள்ளது. இதை யடுத்து பொலிஸார் நிகழ்த் திய தேடுதல் வேட்டையில் 'ஒஷிவாரா' நகர்ப் பகுதியிலுள்ள ஆனந்த் நகர் பகுதியில் வைத்து மேற்படி இளைஞன் கைது செய்யப்பட்டார்.

இந்த வீடியோப் பதிவில், அன்று கலவரத்தில் ஈடுபட்ட மக்களில் பலர் பொலிஸாரின் துப்பாக்கிகளைச் சூறையாடி வானத்தை நோக்கிச் சுட்டு அவர்களை மிரள வைத் தமை வெளிப்படையாகப் பதியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (வ)

ராம்தேவ் ஆசிரமத்தில் சோதனை

உத்தரகாண்ட் மாநிலத்தில் யோகா குரு பாபா ராம்தேவுக்குச் சொந்தமான திவ்யா யோகா ஆசிர மத்தில் மாநில சுகாதாரத் துறை அதிகாரிகள் 3 மணி நேரம் சோதனை நடத்தினர்.

பாபா ராம்தேவ், இந்தியர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்தை மீட்கக்கோரி மத்திய அரசை தன்னுடைய பல்வேறு போராட்டங்களின் மூலம் வலியுறுத்தி வருகின்றார். இந்தநிலையில் தன் ஆசிரமத்தில் நடைபெற்ற சோதனை, தனக்கெதிரானவர்களின் தூண்டுதல் என கூறியிருக்கிறார்.

சோதனை மேற்கொண்ட மாநில சுகாதாரத்துறை அதிகாரிகள், ஆசிரமத்தில் இருந்து தேன், உப்பு மற்றும் பருப்பு வகைகளின் பொடிகளின் மாதிரிகளை எடுத்துச்சென்றுள்ளனர்.

மேலும் பல்வேறு துறைகளின் மூலம் 100இற்கும் மேற்பட்ட நோட்டீஸுகள் தனக்கு எதிராக அனுப்பப் பட்டாலும் தான் கறுப்பு பணத்திற்கு எதிராக போராடுவதைத் தடுக்க முடியாது என்று உறுதிபட கூறினார். (வ)

வதந்தி பரப்பினால் கடும் நடவடிக்கை

மன்மோகன் எச்சரிக்கை

வடகிழக்கு மாநிலத்தவர்களுக்கு எதிராக வதந்தி பரப்புவோர் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் எச்சரித்துள்ளார். எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் மன்மோகன், வதந்தி பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடகிழக்கு மாநிலத்தவர்களுக்கு எதிராகத் தாக்குதல் வதந்தி பரவுவதை தடுக்க, மத்தியரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அஸாம் கலவரத்தை முன் வைத்து இதர இடங்களில், உணர்ச்சிகளை எழுப்பக் கூடாது. வடகிழக்கு மாநிலத்த வர்கள் மத்தியில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி, நாட்டின் ஒற்று மையைப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்-என்றார். (வ)

கடும் எதிர்ப்பால் 'பேஸ் புக்'ஐ விட்டோடினார் கருணாநிதி

தி.மு.க., தலைவர் கருணாநிதியின், 'பேஸ் புக்' கணக்கு கடும் எதிர்ப்பால் ஒரே நாளில் மூடப்பட்டது.

கடந்த புதன்கிழமை தி.மு.க. தலைவர் கருணாநிதி, 'கலைஞர் கருணாநிதி' என்னும் பெயரில், பேஸ் புக்கில் புதிய கணக்கை ஆரம்பித்தார். ஆரம்பித்த அன்றே சுமார், 2,700 பேர் அந்தப் பக்கத்தில் இணைந்தனர்.

ஆரம்பித்த மறு நாளான நேற்று முன்தினம் மாலை வரை, சுமார் 5 ஆயிரம் பேர், அவருடைய பக்கத்தில் இணைந்திருந்தனர். கருணாநிதியின், 'பேஸ் புக்' பக்கத்தில் 'டெசோ' மாநாட்டு தீர்மானங்கள், கருணாநிதி உரை, அவரது அறிக்கைகள் ஆகியவை வெளியிடப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் காலை முதலே கருணாநிதியின் பக்கத்தில் இணைந்த புதியவர்கள் பலர், அவருடைய அறிக்கைகள், 'டெசோ' மாநாடு, ஈழப் பிரச்சினையில் அவருடைய நிலைப்பாடு, குடும்ப அரசியல் என கருணாநிதி குறித்து கடுமையான எதிர்ப்புக் கருத்துகளைத் தெரிவித்து வந்தனர். அதில், கருணா நிதியை தனிப்பட்ட முறையில் தாக்கி மிகக் கடுமையான பதிவுகள் பதியப்பட்டன. இந்த பதிவுகளுக்கு, இந்த பக்கத்தில் இணைந்து இருந்த, பல தி.மு.க.,வினரும் பதிலடி கொடுத்தபடி இருந்தனர்.

இருப்பினும், ஒரு கட்டத்துக்கு மேல் கருணாநிதியைப் பற்றி கடுமையான விமர்சனங்கள் அதிக மாயின. இதனால், கருணாநிதியை தனிப்பட்ட முறையில், விமர்சனங்களை பதி விட்ட பலர், மாலையில் தடை செய்யப்பட்டனர். பின்னர், மாலை 6 மணியில் இருந்து புதிதாக ஆரம்பிக் கப்பட்ட கருணாநிதியின் 'பேஸ் புக்' காணாமற்போய்விட்டது. (வ)

சொகுசு பஸ் குளத்தில் கவிழ்ந்தது பயணிகள் அனைவரும் தப்பினர்

நாகர்கோவில், ஓக.18

நாகர்கோவிலில் சொகுசு பஸ் குளத்தில் பாய்ந்ததில் 18 பயணிகள் நீரில் மூழ்கினர். பொலிஸார், தீயணைப்புத் துறையினர் அவர்களை உயிருடன் மீட்டனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் இருந்து கல்லடா என்ற தனியார் போக்கு வரத்துக்குச் சொந்தமான 2 அடுக்கு வசதி கொண்ட சொகுசு பஸ் கடந்த புதன் கிழமை இரவு திருவனந்தபுரத்துக்கு புறப்பட்டது. பஸ்ஸில் 15 பயணிகள், சாரதி உட்பட மொத்தம் 18 பேர் இருந்தனர். நேற்று முன்தினம் காலை 5.30 மணிக்கு நாகர்கோவிலை பஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. பயணிகள் அனைவரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

தேரேகால்புதூர் வீதியில் உள்ள வளைவில் திரும்பும் போது பஸ் திடீரென கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரத்தில் இருந்த வேப்பமரத்தில் மோதி குளத்துக்குள் கவிழ்ந் தது. தூங்கிக் கொண்டிருந்த பயணிகள் அனைவரும் ஒருவர் மீது ஒருவர் விழுந்து அலறினர். அந்த வழியாக வாகனங்களில் சென்றவர்கள் விபத்தை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இது குறித்து காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தனர். மாநில நெடுஞ்சாலை ரோந்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். நாகர்கோவில் தீயணைப்பு படையினரும் வந்தனர். பயணிகள் சிலர் பஸ்ஸின் முன் பக்கக் கண்ணாடியை உடைத்ததால் பஸ்ஸுக்குள் தண்ணீர் புகத்தொடங்கியது. பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் சுமார் ஒரு மணி நேரம் போராடி பயணிகளை வெளியே கொண்டு வந்தனர். ஒரு சில பயணிகள் தாங்களாகவே கண்ணாடியை உடைத்து வெளியேறினர்.



விபத்தில் படுகாயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள தனியார் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டனர். குளத்தில் தண்ணீர் குறைவாக இருந்ததால், உயிர்சேதம் இல்லை. விபத்து குறித்து சுசீந்திரம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

அணு உலைகளை தாக்கினால் ஏவுகணை மூலம் பதில் தருவோம்

இஸ்ரேலை எச்சரிக்கின்றது ஈரான்

ஈரான் தற்போது அபிவிருத்தி செய்துவரும் அணுசக்தித் திட்டங்களை எதிர்த்து அதன் அணு உலைகளைக் குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல்களை மேற்கொண்டால் பதிலடியாக இஸ்ரேலின் முக்கிய நகரங்களை நோக்கி தொடர்ச்சியாக 30 தினங்களுக்கு ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துவோம்- இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறது ஈரான்.

இவ்வாறான ஒரு சங்கட நிலைமை உருவாகுவதற்கு இஸ்ரேலின் பிரதமரே பொறுப்பாவார் என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக தனது அணுசக்தித் திட்டங்களை அதிகளவு செறிவூட்டி வரும் ஈரான் சர்வதேச சமூகத்துக்கு இது மக்கள் தேவைக்காக என்றே கூறி வந்தது. இருந்தபோதும் ஈரான் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆசிய ஐரோப்பிய வலயத்தில் ஒரு சக்தி வாய்ந்த அணு ஆயுதங்களைக் கொண்ட நாடாக மாறிவருகிறது என்றும் யுரேனியம் செறிவூட்டல் ஆயுத உற்பத்திக்கே என்றும் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஈரானில் இருந்து வெளி வரும் 'மாரிவ்' பத்திரிகைக்குப் பேட்டியளித்த ஈரானின் சீனாவுக்கான தூதர். இஸ்ரேலின் அழுத்தங்கள் காரணமாக ஈரானுடன் 30 நாள்கள் நீடிக்கக்கூடிய ஒரு சிறு போருக்கு அது முகம் கொடுக்க நேரிடும் என்றும் இதன் மூலம் மிக அதிகளவு உயிர்கள் பலியாகி இழப்புக்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் உயிரிழக்கவுள்ள சில நூறு உயிர்களுக்கு மதிப்புத்தராது இஸ்ரேல் போரில் இறங்க தயாராகவே உள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை வாஷிங்டனில் இருந்து பத்திரிகையாளர்களுக்குப் பதிலளித்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியொன் பனெட்டா 'இஸ்ரேல் இது வரை ஈரானின் அணு உலைகளைத் தாக்குவதற்குத் திட்டமிடவில்லை எனவும் இஸ்ரேலின் பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஈரானின் அணுத் திட்டத்தை அழிப்பதற்கு அல்ல எனவும் இதை அமெரிக்காவின் இராணுவ தலைமை அதிகாரி மார்ட்டின் டெம்ப்சேயும் உறுதிப்படுத்தியுள்ளார்' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்புகள்

22 பேர் சாவு

ஈராக்கில் - பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் தொடர் குண்டுகள் வெடித்தன. இந்தச் சம்பவங்களில் 22 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகம் உள்ள பலுசா பகுதியில் இருக்கும் அல்-கர்மா என்னுமிடத்தில் நடந்த தாக்குதலில் 4 பொலிஸார் இறந்தனர். பலர் பாதிக்கப்பட்டுள்ள அந்தப் பகுதிக்கு உதவிக்காக பொதுமக்கள் உட்பட அவசர மீட்புக் குழுவினர் விரைந்துள்ளனர். பழமைவாத தீவிரவாதிகள் அதிகம் உள்ள கிர்குக் பகுதியில் மட்டும் 4 கார் குண்டுகள் வெடித்துள்ளன.

நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் மாதம் இதுவரை நடந்த தீவிரவாதத் தாக்குதலில் மட்டும் மொத்தம் 153 பேர் உயிரிழந்துள்ளனர். 6 நகரங்களில் ஒரு துப்பாக்கிச் சூடு உட்பட குறைந்தது 12 இடங்களில் குண்டுகள் வெடித்துள்ளன. இதில் அரச படையினரே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். (வ)

குண்டு வதந்தியால் விமானம் அவசரமாக தரையிறக்கம்

அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட ரஷ்ய விமானத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக வந்த தகவலால், அவசரமாக விமானம் ஐஸ்லாந்தில் தரையிறக்கப்பட்டது. ரஷ்யாவின் ஏரோபிளாட் நிறுவன விமானம் 200 பயணிகளுடன் ரஷ்ய தலைநகர் மொஸ்கோ நோக்கிப் புறப்பட்டது.

இந்த விமானத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக வந்த தகவலால், ஐஸ்லாந்தின் ரிக்ஜாவிக் விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

அனைத்து பயணிகளிடமும் சோதனை நடத்தப்பட்டது. விமானத்துக்குள்ளும் சோதனை நடத்தப்பட்டதில் வெடிகுண்டு என்பதெல்லாம் வதந்தி என்பது தெரியவந்தது.

கனடா சென்றிருந்த ஜேர்மன் சான்சலர் ஏஞ்சலா மார்க்கெல், அந்நாட்டு பிரதமர் ஸ்டீபன் ஹாக்கின்ஸை, ஒட்டோவா நகரில் சந்தித்துப் பேசினார்.

மைக்ரோ ஓவனில் பூனையை வைத்து 'சுவிற்சை' போட்டான் சிறுவன்

லண்டன், ஓக.18

பக்கத்து வீட்டுப் பூனையை மைக்ரோ ஓவனில் வைத்து மூடி அதன் ஆழியை (சுவிற்சை) போட்டான் 8 வயதுச் சிறுவன். இந்தப் பரபரப்பான சம்பவம் பிரிட்டனில் நடைபெற்றுள்ளது.

பிரிட்டனின் கென்ட் மாகாணத்தில் உள்ளது ரோசெஸ்டர். இங்கு வசிக்கும் 8 வயதுச் சிறுவன் ஒருவன், மாடியில் வசிக்கும் ஒருவரின் பூனையைக் கடந்த சனிக்கிழமை தூக்கி வந்து தன் வீட்டில் உள்ள மைக்ரோ ஓவனுக்குள் வைத்து கதவை மூடி, ஆழியைப் போட்டான்.

அதற்குள் பூனையைத் தேடிய உரிமையாளர் சத்தம் கேட்டு ஓடோடி மாடியின் கீழே வந்தார். அங்கு மைக்ரோ ஓவனுக்குள் பூனை இருப்பதைப் பார்த்து பதறிப் போனார். உடனே ஆழியை நிறுத்தி பூனையை மீட்டார். அதிர்ஷ்டவசமாக பூனை உயிருடன் இருந்தது.

எனினும், உள் உறுப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று வைத்தியர்கள் கூறினர். பூனையின் வால் பகுதியும் எரிந்திருந்தது. தகவல் அறிந்து விலங்குள் வதை தடுப்புப் பிரிவினர் விரைந்து வந்தனர். ஆனால், 8 வயதுச் சிறுவன் என்பதால், எந்தக் குற்ற நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று கூறினர்.

தெற்கு சூடானில் அகதிகளுக்கு உணவுப் பொருள்கள் விநியோகம்

தெற்கு சூடானில் அகதிகளாக உள்ள 1000 இற்கும் மேற்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை ஐக்கிய நாட்டு உணவு நிறுவனம் வழங்கியது.

சூடானிலிருந்து கடந்தாண்டு தெற்கு சூடான் தனி நாடாகப் பிரிந்தது. அப்போதிலிருந்து இன்று வரை இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் போர் இடம் பெற்று வருகிறது.

இதனால் லட்சக்கணக்கான மக்கள் சூடானிலிருந்து வெளியேறி தெற்கு சூடானின் நீலி பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அந்தப்பகுதியில் பெய்த மழை அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் அகதிகள் பெரும் அவதிக்குள்ளாயினர். நீலியில் மூன்றில் இரண்டு பகுதி வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

அவர்களுக்கு இதுவரை 32 தொன் எடையுள்ள கோதுமை உணவுப் பொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்தது.

மேலும் கூடுதல் விமானங்கள் மூலம் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்று இந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சல்லிஸ் மெஹ்டொனஹ் தெரிவித்துள்ளார். (வ)

களியாட்ட விடுதியில் தீ விபத்து நால்வர் சாவு

தாய்லாந்தின் இரவு களியாட்ட விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் தங்கியுள்ள இந்த விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் பெருமளவானோர் காயமடைந்தனர்.

மின் ஒழுக்கு காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களில் அனேகமானவர்கள் வெளி நாட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து தொடர்பான விசாரணைகளை தாய்லாந்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

தாய்லாந்தில் அடிக்கடி இதுபோன்ற தீ விபத்துக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

கிளின்டனின் மகளும் குதிப்பாரா அரசியலில்

நியூயோர்க், ஓக.18

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மகள் செல்சியா அரசியலில் குதிப்பாரா என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க முன்னாள் அதிபர் கிளின்டன். இவரது மனைவி ஹிலாரி. இவர்களது ஒரே மகள் செல்சியா (வயது 32). 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கடும் முயற்சிகள் மேற்கொண்டார். ஜனநாயகக் கட்சி சார்பில் யாரை வேட்பாளராகத் தேர்வு செய்வது தொடர்பான வாக்கெடுப்பு நடந்த போது, ஹிலாரிக்கும் ஒபாமாவுக்கும் கடும் போட்டி நிலவியது. அப்போது, ஹிலாரிக்கு ஆதரவாக செல்சியா ஆதரவு திரட்டினார்.

எனினும், ஜனாதிபதி வேட்பாளராக ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்டு தேர்தலிலும் வெற்றி பெற்றார். அந்தத் தேர்தலுக்கு பின்னர் செல்சியா அரசியலில் ஈடுபடவில்லை.

> எனக்குத் தெரியவில்லை. 18 வயது நிரம்பிய பின் தேர்தலில் வாக்களித்து வருகிறேன். அரசியலுக்கு வருவேனா என்று இப்போது எனக்குத் தெரியவில்லை என்றார்.

அரசியலுக்கு வருவீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டபோதெல்லாம், இல்லை என்றே கூறி வந்தார். இந்த நிலையில், வோக் என்ற பத்திரிகைக்கு செல்சியா பேட்டி அளித்தார். அப்போது அரசியலுக்கு வருவீர்களா என்று செய்தி யாளர் மீண்டும் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதில் அளித்த செல்சியா, எனக்குத் தெரியவில்லை. 18 வயது நிரம்பிய பின் தேர்தலில் வாக்களித்து வருகிறேன். அரசியலுக்கு வருவேனா என்று இப்போது எனக்குத் தெரியவில்லை. சிலவேளை வரக்கூடும்- என்றார். (வ)

பஸ்ஸை வழிமறித்து துப்பாக்கிச் சூடு

பாகிஸ்தானில் 25 பேர் பரிதாபச் சாவு

பாகிஸ்தானில் பஸ் ஒன்றிலிருந்து இறக்கப் பட்ட ஷியா முஸ்லிம்கள் மீது ஆயுதபாணிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு மாவட்டமான மான்செஹ்ராவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானின் கோட்டை நகரான ராவல்பிண்டியிலிருந்து கில்கிட் பல்திஸ்தான் பகுதியிலுள்ள அஸ்டோர் என்னுமிடத்துக்கு பயணிகளை ஏற்றிக் கொண்டு மூன்று பஸ்கள் சென்றன.

சிலாஸ் நகரத்துக்கு அருகில் வந்தபோது பஸ்களை துப்பாக்கிகளுடன் வழிமறித்த ஒரு கும்பல், அதிலிருந்த பயணிகளைக் கீழே இறக்கி அவர்களின் அடையாள அட்டைகளைச் சோதித்து 25 பேரைச் சுட்டுக்கொன்றனர். வேறு சிலர் மீதும் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாகப் பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த பயங்கரத் தாக்குதலில் துப்பாக்கி ஏந்திய 15 பேர் ஈடுபட்டுள்ளனர். இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

இறந்தவர்கள் அனைவரும் ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படுகிறது. கடந்த முறை நடந்த தாக்குதலில் 12 இற்கும் மேற்பட்ட சிறுபான்மை ஷியா பிரிவினரே கொல்லப்பட்டுள்ளனர்.

இது லஷ்கர் ஈ ஜங்வி எனப்படும் பயங்கரவாத இயக்கத்தின் தாக்குதலாக இருக்கலாம் என்று நம்பப் படுகிறது. ஆனால் இது வரை எந்த அமைப்பும் இந்த சம்பவத்துக்குப் பொறுப்பு ஏற்கவில்லை. (வ)

> இந்த பயங்கரத் தாக்குதலில் துப்பாக்கி ஏந்திய 15 பேர் ஈடுபட்டுள்ளனர். இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

அமெ. கடற்பகுதியில் ரகசியமாக உளவுபார்த்த ரஷ்ய கப்பல்

ரஷ்யாவின் அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்கக் கடற்படையின் அனைத்துக் கண்காணிப்புகளையும் மீறி அமெரிக்கக்கடற்பகுதியில் ஊடுருவி பல நாள்கள் உளவு பார்த்து விட்டு திரும்பிச் சென்றுள்ளது.

ஏராளமான ஏவுகணைகளோடு அமெரிக்காவின் மெக்சிகோ வளைகுடா பகுதியில் உலா வந்த இந்த நீர்மூழ்கிக் கப்பல் அகுலா ரகத்தைச் சேர்ந்த தாக்குதல் கப்பல் ஆகும்.

விளாடிமிர் புடின் மீண்டும் ரஷ்ய ஜனாதிபதியான பின்னர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்த ஊடுருவல் இடம்பெற்றுள்ளது. அது அமெரிக்க கடல் பகுதியை விட்டு வெளியே சென்ற பின்னர் தான் இந்தத் தகவலே அமெரிக்கக் கடற்படை யின் அட்லாண்டிக் பிரிவுக்குத் தெரியவந்துள்ளது.

எனினும் இதை அமெரிக்கா வெளியில் சொல்லாமல் மறைத்து விட்டது. இந்த நிலையில் இந்தத் தகவல் நேற்று முன்தினம் தான் வெளியே கசிந்துள்ளது.

கடந்த மாதம் ரஷ்யாவின் பியர் எச் ரக குண்டு வீசும் விமானம் கலிபோர்னியா அருகே அமெரிக்கவான்பகுதிக்குள் அத்து மீறி நுழைந்தது. இதையடுத்து அமெரிக்க விமானப் படை விமானங்கள் அந்த விமானத்தை நெருங்கியதையடுத்து அது திரும்பிச் சென்றது.

இந்தியா, சீனாவுக்கு தொழில்வாய்ப்புகளை தடுக்க அமெரிக்கா அதிரடித் திட்டம்

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தொழில்வாய்ப்புகள் செல்வதைத் தடுக்க புதிய அமைப்பை அமெரிக்க அரசு ஆரம்பித்துள்ளது.

விரைவில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இது குறித்து வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்ததாவது:-

இதற்காக 'நமில்' என்ற அமைப்பு ஒஹியோ நகரில் அமைக்கப்படும். தனியாருடன் இணைந்து அரசு உருவாக்கும் இந்த அமைப்புக்கு முதல் கட்டமாக 70 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அமெரிக்காவுக்குத் தேவையான உயர் தொழில்நுட்ப உற்பத்திப் பொருள்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதை இந்த அமைப்பு உறுதி செய்யும். இந்தப் பணிகள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போவதைத் தடுத்து, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதோடு, நாட்டின் எதிர்கால பொருளாதாரத்தை வலுவாக்க இந்த அமைப்பு உதவும்.

பாதுகாப்புத்துறை, எரிசக்தித்துறை, வர்த்தகத்துறை, தேசிய அறிவியல் அறக்கட்டளை, நாஸா ஆகியவை இணைந்து முதல் கட்டமாக இந்தத் திட்டத்துக்கு 45 மில்லியன் டொலர்களை வழங்கும்.

மேலும் நாடு முழுவதும் 15 புதிய கண்டுபிடிப்பு மையங்களை ஒருங்கிணைத்து உற்பத்தித்துறைக்கு ஊக்கம் அளிக்க ஒரு பில்லியன் செலவிடப் படும்-என்றார்.

கல்விக் கொள்கையை எதிர்த்து சிலியில் மாணவர் ஆர்ப்பாட்டம்

140 பேர் பொலிஸாரால் கைது

சிலியின் சன்டியாகோ நகரில் 140 இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். நாட்டின் கல்விக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்களே கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதன்போது மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சிலியில் கல்வித்துறை வினைத்திறனாகச் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தி மாணவர்கள் நீண்ட காலமாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் காரணமாக சிலியின் கல்வித்துறை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (வ)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 16.07.1933

மறைவு 19.07.2012

அமரர் சபாபதி இராசதுரை

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 19.07.2012 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சபாபதி இராசதுரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 14.08.2012 கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையில் நடைபெற்றன. இன்று (18.08.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

84 6/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(21833)(2-6-7)

இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்டர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
யாழ்ப்பாணம்

(21787)(6.7.2)

மணமகள் தேவை

வயது 54, யாழ்.இந்து உயர் குலம் சுயதொழில் புரியும் தாரம் இழந்த ஒரு பெண் பிள்ளை பொறுப்பில் உள்ளவருக்கு தகுந்த துணை தேவை. சாதி, சமயம், நிறம் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. வாழ்வு இழந்த அல்லது கைவிடப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு.0719208225

(21820)(2-6-7)

பரதநாட்டிய அரங்கேற்றம்

செல்வி மயூரிகா பத்மநாதன்

அவர்களின் நடன அரங்கேற்ற நிகழ்வு 19.08.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி பத்மநாதன்
147/5,புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

[21825][5-6-7]

நோன்பாளிகள் மீதும் முஸ்லிம்களே அராஜகம்

அடாவடித்தன அரசியலை சரியான வாக்குகள் மூலம் துரத்தியடிப்போம் என்கிறார் மு.கா. வேட்பாளர்

அம்பாறை,ஓக.18

கிழக்குத் தேர்தலில் அரசு முஸ்லிம் முகவர்களைக் கொண்டே அதே முஸ்லிம் நோன்பாளிகள் மீது அடாவடித்தனமான அரசியலை மேற்கொள்கின்றது என்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஜ.எல்.எம்.மாஹிர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோன்புகாலம் என்று கூடப் பார்க்காது நோன்பாளிகள் மீது தமது அடாவடித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டோரை முஸ்லிம் சமூகம் மட்டுமன்றி, முழுச்சமூகமும் தமது வாக்குப்பலத்தால் துரத்தியடிக்கவேண்டும்.

நோன்புகாலம், மாணவர்களின் பரீட்சைக்காலம் என்று கூடப் பார்க்காது தேர்தலை அறிவித்த இந்த அரசு, முஸ்லிம்களை இழிவுபடுத்தியுள்ளது.

நோன்பு காலத்தில் தேர்தலை வைக்கவேண்டாம் என்ற அனைத்துத் தரப்பினரது கோரிக்கைகளையும் புறந்தள்ளிய அரசு, தமது பிரதேச முஸ்லிம் முகவர்களைக் கொண்டு அதே முஸ்லிம் நோன்பாளிகள் மீது அராஜகத்தை மேற்கொண்டு வருகின்றது.

அக்கரைப்பற்றில் அப்பிரதேசத்தின் மு.கா. போராளிகள் மீது மட்டுமன்றி, அப்பாவிப் பொதுமக்கள் மீதும் நோன்பென்று கூடப் பார்க்காது, புனித நோன்பு துறப்பு உணவுகளையும் மிதித்து, நோன்பு துறக்க விடாது தடுத்த செயல் இதுகாலவரை எங்கும் எவரும் செய்திடாத அசிங்கமான செயற்பாடாகும்.

உயர்தரப்பரீட்சை மாணவர்கள் மற்றும் 5 ஆம் தர புலமைப்பரீட்சை என்பன வற்றுக்கு எவ்வித தடைகளும் ஏற்படாத வகையில் நாம் எமது பிரசாரத்தை முன்னெடுக்கிறோம்; முன்னெடுக்கவுள்ளோம்.

> நோன்புகாலம், மாணவர்களின் பரீட்சைக்காலம் என்றுகூடப் பார்க்காது தேர்தலை அறிவித்த இந்த அரசு, முஸ்லிம்களை இழிவுபடுத்தியுள்ளது.

ஆனால், இதனைக்கூட மாற்றுத் தரப்பினர் செய்ய மறுக்கின்றனர் என்றால், மாகாண சபையில் கல்வி, மாணவர் நலன் ஆகியவை தொடர்பில் இவர்கள் எவ்வாறு குரல்கொடுக்கப் போகின்றார்கள்? - என்றார். (ச)

பள்ளிவாசல்கள் தாக்கப்படுவதை வேடிக்கை பார்க்கும் அமைச்சர்கள்

முடிந்தால் அரசைவிட்டு விலகட்டும் என்கிறார் ஐ.தே.க. மட்டு. வேட்பாளர்

எருவில்,ஓக.18

இந்த அரசினால் முஸ்லிம்களின் புனித வழிபாட்டுத்தலமான பள்ளிவாசல்கள் தாக்கப்படுவதை முஸ்லிம் அமைச்சர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தன்மானமுள்ள முஸ்லிம் அமைச்சர்களாக இருந்தால் உடனடியாக இவர்கள் அரசைவிட்டு வெளியேறவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் அரசரட்ணம் சசிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற முஸ்லிம் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசில் இருக்கும் அமைச்சர்கள் இன்னும் மஹிந்த ராஜபக்ஷவின் காலைப் பிடித்துக்கொண்டே இருக்கின்றனர். ஆனால், முஸ்லிம்களின் புனித இடமான பள்ளிவாசல்கள் இந்த அரசால் உடைக்கப்படும் போதும் கூட இவர்கள் பேசாமடந்தைகளாகவே இருந்தனர்.

கடந்த காலங்களைவிட இன்று தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. இந்தத் தடவை நடைபெறும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மூன்று ஆசனங்களை நிச்சயம் பெற்று வெற்றிபெறும்.

இன்று தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களும் இந்த அரசை எதிர்க்கின்ற நிலைமை அதிகரித்துவருகின்றது. நாளுக்கு நாள் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு இந்த நாட்டிலுள்ள வறிய மற்றும் நடுத்தரமான மக்கள் வாழ முடியாத அளவுக்கு இந்த அரசு இன்று மாறியுள்ளது.

எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக ஆதரிக்க வேண்டும் - என்றார். (ச-31)

விபத்தில் வைத்தியர் சாவு

பின்னால் வந்த பிக்கப் வாகனம் இவருடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

எருவில்,ஓக.18

மட்டக்களப்பு, சந்திவெளிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் வைத்தியர் ஒருவர் உயிரிழந்தார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் எஸ். சிவகிரிநாதன் (64 வயது) என்ற வைத்தியரே இறந்துள்ளார்.

வைத்தியர் செங்கலடியிலுள்ள தனது வீட்டிலிருந்து சந்திவெளியிலுள்ள மருத்துவமனைக்குச் சென்றுகொண்டிருந்தபோது பிரதான நெடுஞ்சாலையிலிருந்து சடுதியாகத் திரும்பியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பின்னால் வந்த பிக்கப் வாகனம் இவருடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

விபத்துக்குக் காரணமான வாகனம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)

கடல் ஆமை விற்ற குழு பொலிஸாரிடம் சிக்கியது

மட்டக்களப்பு,ஓக.18

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்பகுதியில் கடல் ஆமைகளை சட்டவிரோதமாக விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த குழவினரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினர் இவர்களை கைதுசெய்தனர்.

கடலில் மிகவும் அருகிவரும் உயிரினமாகவுள்ள இந்தக் கடலாமைகளைப் பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில் இவற்றைப் பிடித்து விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட வியாபாரி உட்பட மூவர் அடங்கிய குழுவினரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இவர்களிடம் இருந்து சுமார் 120 கிலோ எடையுடைய கடலாமை மற்றும் அவற்றினைப் பிடிப்பதற்குப் பயன்படுத்திய பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் வன இலாகா அதிகாரிகளின் பரிசோதனையின் பின்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றாடல் பிரிவுப் பொலிஸாரால் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையைத் தடுக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சுற்றாடல் பாதுகாப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் ஜெயசுந்தர தெரிவித்தார். (ச)

சட்டவிரோத சிகரெட்டுடன் விகாராதிபதி கைது

கண்டி,ஓக.18

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப் பட்ட வெளிநாட்டு உற்பத்தி சிகரெட் தொகையுடன் பிக்கு ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

திவுலகம - கங்கத ஸ்ரீ சுசிமாரம விகாரையின் விகா ராதிபதியே நேற்றுமுன் தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிக்குவிடம் இருந்து 2820 சிகரெட்டுகள் கைப் பற்றப்பட்டுள்ளன.

திவுலகலப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

புல்லுமலை, கோப்பாவெளிப் பகுதியில்

கடும் காற்று வீசியதில் 105 வீடுகளுக்கு சேதம்

மட்டக்களப்பு,ஓக.18

மட்டக்களப்பு, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புல்லுமலை மற்றும் கோப்பாவெளி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வீசிய கடும் காற்றினால் 105 இற்கு மேற்பட்ட வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடும் காற்றுக் காரணமாக புல்லுமலை, கோப்பாவெளி பகுதிகளில் 18 வீடுகள் முழுமையாகவும், 87 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சண்முகராஜ் இன்பராஜன் தெரிவித்தார்.

பிரதேச செயலகம், படையினர், பொலிஸார் ஆகியோர் ஒன்றிணைந்து சேதம் தொடர்பான விவரங்களைத் திரட்டிவருகின்றனர்.

இதேவேளை இடரினால் பாதிக்கப்பட்ட மக்கள் பொதுவான இடமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு சமைத்த உணவும் வழங்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இரவு 7 மணிமுதல் 8 மணிவரை குறித்த பகுதியில் காற்று வீசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

வன்முறையற்ற தேர்தலை நடத்த அனைவரது ஒத்துழைப்பும் தேவை

மட்டு. அரச அதிபர் கோருகிறார்

எருவில்,ஓக.18

வன்முறைகளற்ற ஒரு தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டசெயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தல் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வன்முறைகளற்ற தேர்தலை நடத்திக்காட்டவே நாங்கள் முடிந்தளவு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். பொலிஸ் அத்தியட்சகர் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றார். முறைப்பாடுகள் கிடைத்த உடனேயே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பொருள் சேதமோ, உயிர்ச்சேதமோ இல்லாத ஒரு தேர்தலை ஜனநாயக ரீதியாக நடத்தி முடிக்க தேர்தல் திணைக்களத்துக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும், பொலிஸாருக்கும் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இலக்கங்களை எங்களுக்குத் தெரியப்படுத்தவில்லை.

அதனால் எம்மால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை.- என்றார். (ச-31)

காசாளர் தேவை

களுத்தோட்டை பினான்ஸ் நிறுவனம்
யாழ்ப்பாண கிளைக்கு காசாளராக கடமையாற்ற
உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம்

உங்களுடைய வயது 20 - 22 ஆக இருப்பின் க.பொ.த. உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், கணக்கியல் ஆகிய பாடங்களில் தோற்றியிருப்பின் உங்களுடைய அனைத்து நற்சான்றிதழ்களுடன் (22.08.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எங்களுடைய கிளைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கண்டிப்பாக ஆங்கிலம், சிங்களம் பேசத் தெரிந்தவராக இருக்கவேண்டும்.

தொடர்பு:
இல. 88, ஆஸ்பத்திரி றோட், மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
021 4922 455, 077 769 6991, 077 0638 705

(21841) (45-6.7)

பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக, யாழ்.மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

★ 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.

★ பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

★ பணி நிலையங்கள்:
யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி.

அடிப்படைத் தகைமைகள்:-

★G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

★ 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (*BIO DATA*) விண்ணப்பங்களை 25.08.2012 ஆத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 4386
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(21430) (2-6)

நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

உயரப்புலம் ஜே/132 கிராம சேவை யாளர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி இன்று காலை 8.30 தொடக் கம் 2.30 வரை ஏற்றப்படவுள்ளது என்று ஆனைக் கோட்டை பொது சுகாதாரப் பரிசோதகர் அருந்தவராசா அறிவித்துள்ளார். (3-100)

வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுச்சந்திக்கு அண்மையில் சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் விநாயகர் வீதியில், 02 பரப்புடன் கூடிய நல்ல குடிதண்ணீர் வசதியுள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 2671109

வீடு விற்பனைக்கு

காரைக்கால் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில் சிவகாமி அம்மன் கோயில் அருகில் சகலவசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

(21905) (45.6.7) தொ.பே.: 021 300 7362

வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

37/1, சுண்டிக்குளி விதானையார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் விசாலமான மாடி வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 37/1, சுண்டிக்குளி
(19305)(6-7-45) 077 8222 873.

தவறிவிட்டது

ஏழாலை வடக்கு, ஏழாலை என்னும் முகவரியை உடைய தேவமலர் கனகேந்திரன் ஆகிய எனது 456912338 V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை கச்சேரிக்கும், தட்டாதெருச் சந்திக்கும் தனியார் சிற்றூர்தியில் 14ஆம் திகதி தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழே உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(21849) (5.6.7) தொ.பே.: 077 395 1589

மணமகள் தேவை

* 83இல் பிறந்த 7சூரியனும் செவ்வாயும்,51 பாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 76 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 50 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் சூரியனும், செவ்வாயுமுடைய 20 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.320,கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.: 077 607 0862 (21845) (5.6.7)

BASIC ENGLISH & SINHALA PERSONAL CLASSES

அடிப்படையிலிருந்து கிரமமான பாடங்கள், பயிற்சிகள் ஊடாக இரு மொழிகளும் G.C.E(O/L) வரை கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை விலகியோர், அரச மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எந்த வயதினரும் எந்த திகதியிலும் இணைந்து கொள்ளலாம்.

நேரம்: வெள்ளி தவிர
மு.ப. 8.45 - 10.30, பி.ப. 2.45 - 5.30

TRANSLATION

கடிதங்கள், ஆய்வுக்கட்டுரைகள் இணையத்தளக் குறிப்புகள் உட்பட்ட பிரத்தியேக மொழி பெயர்ப்பு வேலைகள் மூன்று மொழிகளிலும் செய்து தரப்படும்.

T.SAGATHEVAN, B.A.London
Trilingual Tutor/Translator (PVT)
46, பிரப்பரங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3520/077 821 0178 (21839) (5.6.7)

பணியாள்கள் தேவை

யாழ் நகரமத்தியில் இயங்கும் மருந்தகத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியுடை யோர் தேவை. சுயவிவரக் கோவையுடன் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பங்களை அனுப்பவும்.

1. பார்மசி சுப்பவைசர் (ஆண் 40 வயதுக்கு மேல்)
2. Cashier - ஆண்/பெண் -25 வயதுக்கு மேல்
3. Accountant Assistant - (பெண்கள் முன்அனுபவம் உள்ளவர்கள் தேவை.)
4. Computer Operator - பெண்
5. Sales Girls - (சிறுவர் புடைவை வகைகள் வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்கள்))

விளம்பர இலக்கம்:4391
மே/பா. உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். (21817) (5.6.7)

துளிர்கள் நிறுவனத்தின்

இலவச உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவ சான்றிதழ் கற்கை நெறி

பிரிவு :10

கற்கைக் காலம்	: 06 மாதங்கள்
விரிவுரைகள்	: சனி,ஞாயிறு
தகைமை	: G.C.E(O/L)

கட்டணம் இலவசம்

- தன்னைத்தான் அறிதலும், பிறரை அறிந்து கொள்ளலும் என்ற கோட்பாட்டிற்கமைவாக உள ஆற்றுப்படுத்தல் (Counseling) கற்கை நெறிமூலம் உங்களை வளப்படுத்திக் கொள்ள இது நல்லதோர் சந்தர்ப்பம்.
- வயது உங்களுக்கோர் தடையல்ல.
- ஆர்வமுள்ள இருபாலாரும் 30.08.2012 இற்கு முன்பு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்.

இல.30,கம்பஸ்லேன்,
திருநெல்வேலி. (21837) (5.6.7)

பணிப்பாளர்,
துளிர்கள் நிறுவனம்.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17
*
05
*
1965

மறைவு
18
*
08
*
2010

அமரர் வைத்தியகலாநிதி யமுனா மார்க்கண்டு

M.B.B.S, (Sri Lanka) M.D (Sri Lanka) M.R.C.P (UK)

கல்விக்கு தன் வாழ்வை அர்ப்பணித்த கலையரசி
பட்டங்கள் பல பெற்று பாரில் புகழீட்டி
பாங்காக மக்களுக்குப் பரிவுடனே சேவை செய்தாய்
ஆண்டிரண்டு கழிந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
தெய்வத் திருமகளே உள்ளம் கவர் உத்தமி உன்
அன்புக்கு ஈடாக அகிலத்தில் ஏதுமில்லை
இதயம் குடிகொண்ட எழிலரசி யமுனா உன்
திடீர் மறைவைத் தாங்காது கண்கள் கலங்குகின்றோம்
ஏங்கித் தவிக்கின்றோம் உன் இன்முகத்தைக் காண்பதற்கு
வணங்குகின்றோம் அரன் பாதம் உன் ஆத்ம சாந்திக்கு
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
என்றும் உன் நினைவை நெஞ்சில் நிலை நிறுத்தும்

பாலாவோடை, களபூமி,
காரைநகர்.

அப்பா, அம்மா, தங்கைமார்
மைத்துனர்மார்கள், பெறாமக்கள்,
16-4/4, முதலாவது சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை.

(21840) (2-6)

மரண அறிவித்தல்

கந்தையா நவரத்தினம்

(Retired Senior Assessor - Inland Revenue Department)

உசனை பிறப்பிடமாகவும், மீசாலை மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம் நேற்று (17.08.2012) வெள்ளிக்கிழமை மீசாலையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்வநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜநாயகியின் அன்புக் கணவரும், யசோகரன், முரளீகரன், பிரபாகரன், உமாகரன், லதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரிவேணி, விஸ்ணுசிறி, குகாஜினி, கருணா ஆகியோரின் மாமனும், ஓவிகா, ஜீவிகா, சுவாதிகா, நாவலன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குணரத்தினம், செல்வரத்தினம், அரியரத்தினம் ஆகியோரின் சகோதரனும், இரத்தினசிங்கம், ஜெயசிங்கம், தெய்வநாயகி, துவாரகாதேவி, சதாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (20.08.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(பி/ 2394) (45.6.7)

அரசுடன் தொடர்புடைய கொலைகாரர்கள் விடுவிப்பு

இதுதான் தற்போதைய அரசியல் என்கிறார் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி

கொழும்பு,ஓக.18

அரசுடன் தொடர்புள்ள கொலைகாரர்கள் விடுவிக்கப்படுகின்றனர் என்று ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ரி.எம். வரா வெவ குற்றம்சாட்டியுள்ளார்.

அனைத்து நபர்களுக்கும் சட்டம் சமத்துவமாகுவதை உறுதிப்படுத்தும் அரசியல் இயக்கமொன்றுக்கு தலைமை தாங்குவதற்கு நான் தயார் என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அநீதிக்கு எதிரான தேசிய இயக்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து மனிதர்களும் சட்டத்தின் முன் சமமாக விளங்கும் சமூகத்தை உருவாக்குவதே எனது அரசியல் இலட்சியம். இதற்காக எந்தவொரு அமைப்புக்கும் நான் தலைமை தாங்கி, இத்தகைய சமூகத்தை ஏற்படுத்து வேன்.

சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்கும் மக்கள், இன்றைய அரசியலில் பிரவேசிக்க முடியாது.

தற்போது திருடர்கள், கொள்ளையர்கள், போதைப் பொருள் வியாபாரிகள் போன்றோரே அரசியலில் பிரவேசிக்க முடியும்.

18 ஆவது திருத்தச் சட்டத்தின் நடைமுறைப் படுத்தலானது சட்டத்துக்கு கட்டுப்பட்ட சமூகத்திற்கான மிகப் பெரிய தடங்கலாகும்.

17 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களானவை ஜனாதிபதிக்கு இடையூறாகும். ஏனெனில், அவர்கள் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றாற்போல் நாட்டைக் கட்டுப்படுத்த முடியாது.

ஆனால், 18 ஆவது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை நிறுத்துவதற்கு உத்தரவிட தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லை. அந்த உத்தரவும் ஜனாதிபதியினாலேயே பிறப்பிக்கப்படுகிறது.

எவ்வாறு தேர்தல் நடத்தப்பட வேண்டும், எவ்வாறு வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிடும் நிலை விரைவில் வரும் - என்றார். • (ச)

கொழும்பில் காணி சுவீகரிப்பு

அரசின் அறிவித்தலுடனேயே நடவடிக்கை என்கிறது நகர அபிவிருத்தி அதிகார சபை

1,500 குடும் பங்கள் வெளியேற்றப் பட் டுள்ளன. இவற்றில் 450 குடும்பங் களுக்கு மட்டுமே தெமட்ட கொடை யில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு,ஓக.18

கொழும்பு நகரப் பகுதியில் சுமார் 500 குடும்பங்களை வெளியேற்றி, வர்த்தக ரீதியில் பயன்தரக்கூடிய ஏழு ஏக்கர் காணிகளை விசேட செயற்றிட்டமொன்றுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபை சுவீகரிக்கவுள்ளது.

இந்தக் காணிகளை சுவீகரிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை கடந்த மே மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ளார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கொழும்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஹுனுப்பிட்டி, வேகந்த மற்றும் கொம்பனி வீதி ஆகிய பிரதேசங்களிலுள்ள காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன.

இந்தக் காணிகள் விசேட அபிவிருத்தித் திட்டத்துக்காக பொறுப்பேற்கப்படுகின்றன என்று குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளிலிருந்து வெளியேற்றப்படுபவர்களுக்காக ஒரு விசேட வீட்டுத் திட்டத்தை கொண்டுவருவோம் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அரசு கொழும்பிலிருந்து சுமார் 1,500 குடும்பங்களை வெளியேற்றியுள்ளது. இவற்றில் 450 குடும்பங்களுக்கு மட்டுமே தெமட்டகொடையில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வெளியேற்றப்பட்ட பல குடும்பங்களுக்கான சட்ட நிவாரணத்தை தாம் நாடியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். இதனால் தான் 450 குடும்பங்கள் தெமட்ட கொடையில் மீள்குடியமர்த்தப்பட் டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறித்த காணிகளைச் சுவீகரிக்கும் திட்டம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார். எவ்வாறாயினும் குறித்த காணிகள் பொது மக்களுக்குச் சொந்தமானவையாகும்.

இதனால் அவர்களின் சொந்த வதிவிடங்களைப் பறித்துக் கொள்வது சுலபமான விடய மல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

சர்வதேச மிளகு மாநாடு ஒக்.30 இல் கொழும்பில்

இந்தியா, இலங்கை, பிரேஸில், இந்தோனேஷியா, மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய மிளகு உற்பத்தி செய்யும் நாடுகளே இந்த மாநாட்டில் அங்கம் வகிக்கின்றன.

கொழும்பு,ஓக.18

40 ஆவது சர்வதேச மிளகு மாநாடு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தோனேஷியாவுடன் இணைந்து இந்த சர்வதேச மிளகு மாநாட்டை கொழும்பில் நடத்துவற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கை அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

இந்தியா, இலங்கை, பிரேஸில், இந்தோனேஷியா, மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய மிளகு உற்பத்தி செய்யும் நாடுகளே இந்த மாநாட்டில் அங்கம் வகிக்கின்றன. இந்நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் இந்த சர்வதேச மிளகு மாநாடு நவம்பர் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

இந்தோனேஷியாவின் 57 ஆவது சுதந்திர தின நிகழ்வு கொழும்பிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கையிலுள்ள இந்தோனேஷிய மக்கள் கலந்துகொண்டனர்.

மகஸினில் ஹெரோயின்; படையினர் இடமாற்றம்

கொழும்பு,ஓக.18

கொழும்பு, மகஸின் சிறைச்சாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த படையினர் ஹெரோயின், கஞ்சா போன்ற போதைப் பொருள்களைக் கடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த 200 படையினர் அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக முப்படைகளையும் சேர்ந்த 200 படையினர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கைதிகளுக்கு போதைப் பொருள்களை விநியோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)

ஊழியர் சேமலாப நிதி மோசடி; தெளிவுபடுத்த துண்டுப்பிரசுரம்

கொழும்பு,ஓக.18

ஊழியர் சேமலாப நிதியில், பங்குச் சந்தையில் முதலீடு செய்ததால் ஏற்பட்டுள்ள மோசடிகள் குறித்து ஆராயுமாறு வலியுறுத்தி சுதந்திர வர்த்தக வலய சேவையாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு , கோட்டை, மருதானை, நாராஹேன்பிட்டி ஆகிய பகுதிகளில் இது தொடர்பான துண்டுப் பிரசுரம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டது.

இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள தகவலின்படி, ஊழியர் சேமலாப நிதியில் கடந்த வருடம் 16,000 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொது சேவை ஊழியர் சங்கத்தின் செயலாளர் அன்டன் மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மோசடி குறித்து ஆராய நாடாளுமன்ற செயற்குழு அமைத்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும் 21 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு இது தொடர்பான மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

பொதுநலவாய அமைப்பினர் வடக்கு, கிழக்குக்குப் பயணம்

பிரதிநிதிகள் விரும்பினால் அழைத்துச் செல்லத் தயார் என்கிறது அரசு

இலங்கை குறித்து பொதுநலவாய நாடுகள் மத்தியில் மூன்றாந் தரப்பொன்று தவறான பிரசாரங்களைப் பரப்பியுள்ளது.

கொழும்பு,ஓக.18

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நடாளுமன்ற சங்கத்தின் 58 ஆவது மாநாட்டில் கலந்து கொள்ளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று அங்கு தற்போதுள்ள நிலைமைகளைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

வடக்கு, கிழக்குக்குச் செல்வதற்கு மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்தால் அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துகொடுக்கும் என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரகொடி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் 58 ஆவது மாநாடு தொடர்பில் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கைக்கு வருபவர்கள் சிகிரியா, கண்டி, காலி மற்றும் நீர்கொழும்பு ஆகிய நான்கு பிரதேசங்களுள் அவர்கள் விரும்பியதொரு பகுதிக்குச் சுற்றுலா செல்லாம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை குறித்து பொதுநலவாய நாடுகள் மத்தியில் மூன்றாந் தரப்பொன்று தவறான பிரசாரங்களைப் பரப்பியுள்ளது. எனவே, அந்தப் பகுதிகளுக்குச் சென்று உண்மை நிலவரங்களை அவர்கள் ஆராய்ந்தால் அது நாட்டுக்கு உதவியாக இருக்கும். இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டுக்கு பிரிட்டன் எலிசபெத் மகாராணி மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆலோசகர்களாகச் செயற்படவுள்ளனர் - என்றார். (ச-சி)

தருவது வித்தியா

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: அமைதியாகச் செயற்பட்டு, ஆதாயம் தேடிக்கொள்வீர்கள். சக ஊழியர்கள், உங்களின் யோசனைகளுக்கு மிகுந்த ஆதரவு தரலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்று வரலாம். சுகமான அனுபவம் உண்டு.

இடபம்: மனதில் ஓடிக் கொண்டிருந்த சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பீர்கள். அடுத்து நடைபெற உள்ள காரியங்களுக்காக, இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். கலகலப்பாக பேசி, மற்றவர்களை மகிழ்விப்பீர்கள்.

மிதுனம்: வரும் வாய்ப்புகளை நழுவ விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உறவினர்கள், உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன் வருவர். நீங்கள் செல்லும் இடத்தில், உங்களுக்குப் பிடிக்காத ஒருவரைச் சந்திக்கலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக, மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு அலைவீர்கள்.

கடகம்: பிறரை நம்பி எந்தக் காரியத்தையும் செய்வதைத் தவிர்க்க வேண்டும். குடும்பத்தில் சச்சரவுகள் வராமல் இருக்க, நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பழமையான விடயங்களில் நாட்டம் செல்லும். சிலரைச் சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

சிங்கம்: பல நாள்களாக நடைபெறாமல் இருந்த காரியம் ஒன்று நிறைவேறும். திடீர்பயண முயற்சிகளில், முன்னேற்றமான திருப்பங்கள் காணலாம். உறவினர் அனுசரணையாக நடந்து கொள்வர். மற்றவர்கள், உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

கன்னி: எப்படி ஆகுமோ என்று பயந்த காரியம் ஒன்று, விரைவில் முடிவுக்கு வரும். பெற்றோர், உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர். வெளியூர்களில் இருந்து வரும் சிலர், நல்ல செய்திகளைச் சொல்லலாம். உத்தியோகத்தர்கள் நிதியுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

நாளை

ஆவணி- 03 ஞாயிற்றுக்கிழமை 19.08.2012
திதி: துதியை மு.இ. 08.13 வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ. 08.21 வரை
சுபநேரம்: 09.05- 10.35 வரை
ராகு காலம்: 04.35- 06.05 வரை

துலாம்: அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். புதிய வரவுகளால், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களின் மனஸ்தாபங்களுக்கு ஆட்படாமல் இருக்க, அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

விருச்சிகம்: சக ஊழியர்கள், குடும்பத்தினருடன் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். எந்த வேலையையும், மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல், நீங்களே செய்வது நன்மை தரும். மனைவி வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

தனுசு: சிரமம் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே, காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் நாள். அரசு தொடர்பான காரியங்களில் அலைச்சல் இருக்குமே அன்றி, ஆதாயம் கிடைப்பது கடினம். புதிய தொழில் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

மகரம்: பெண்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். இருக்கும் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்து விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். வேலையில் கடுமை காணப்படும். சிலரை சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம்.

கும்பம்: எந்தக் காரியத்தையும், குழப்பம் இல்லாமல் தெளிவாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் நினைத்து நடப்பது கடினமே. சக ஊழியர் ஒருவரின் மூலம் புதிய நண்பர் அறிமுகம் கிடைக்கும்.

மீனம்: நிதி நிலைமையில் முன்னேற்றம் காணும் நாள். தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் விலகுவர். உங்களை முன்னர் விமர்சித்த ஒருவர் இன்று பாராட்டலாம். குடும்பத்தில் சந்தோஷம், குதூகலம் அதிகரிக்கும். உதிரி வருமானங்களைப் பெறலாம்

சுடோக்கு

எண் விளையாட்டு

		8			6	5		7
		4	1		7		3	
			3		5			9
6	4	1						
3		9	4		8	1		6
						4	9	5
4			8		3			
	1		5		4	8		
9		6	7			3		

சுடோக்கின் நேற்றைய விடை

4	2	9	6	3	7	1	5	8
8	3	6	2	5	1	9	7	4
7	5	1	8	9	4	2	6	3
1	7	3	9	4	6	5	8	2
2	4	8	3	1	5	6	9	7
9	6	5	7	8	2	4	3	1
3	8	4	1	6	9	7	2	5
6	1	2	5	7	8	3	4	9
5	9	7	4	2	3	8	1	6

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

மரண அறிவித்தல்

நல்லதம்பி சின்னத்துரை



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் (லண்டன் - EASTHAM) வசிப்பிடமாகவும் மூளாயை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சின்னத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (16.08.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முதலியப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், சுந்தரம்மாவின் அன்புக் கணவரும், சத்தியலிங்கன் (கோணேஸ்), ராஜேஸ்வரி (ராஜி- பேபி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மைதிலி, சுவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், சக்தீசன், சிந்துசன், சுவீசன், சுவேனி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, விசுவலிங்கம், அப்புத்துரை, செல்வம், சின்னத்தங்கம், நாகலிங்கம், மீனாட்சிப்பிள்ளை, ஆசைப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.08.2012) வெள்ளிக்கிழமை மூளாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சத்தியலிங்கன் (கோணேஸ்),
ராஜேஸ்வரி (ராஜி - பேபி) (பிள்ளைகள்),
சுவீந்திரன்.

"துவாரகா" மூளாய் வீதி, சுழிபுரம்.
T.P. Home: 0044 2084 705 148,
Mobil: 0044 7854 553 282,
U.K. Recidant48, Northfield, Eastham, E 62, AJ, London,

(21865) (45.6.7)

5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 42 ஈழ அகதிகள் சென்னையில் கைது

வானில் இருந்த 16 ஆண்கள், 15 பெண்கள், 11 குழந்தைகள் என 42 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சென்னை,ஓக.18

ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கை அகதிகள் 42 பேரை சென்னையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புழல் அருகேயுள்ள ஈஞ்சங்காடு பகுதியில் உள்ள திறந்த வெளி அகதிகள் முகாமில் ஏராளமான இலங்கை அகதிகள் உள்ளனர்.

இவர்களில் சிலர் ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல உள்ளதாக கியூ பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, கியூ பிரிவு ஆய்வாளர் உத்தமராஜன் தலைமையில் பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, வண்டலூர் அருகே இரண்டு வான்களை மறித்து சோதனை செய்ததில் அகதிகள் இருந்தது தெரியவந்தது.

வானில் இருந்த 16 ஆண்கள், 15 பெண்கள், 11 குழந்தைகள் என 42 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், வேளாங்கண்ணிசென்று, அங்கிருந்துபடகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல இருந்தது தெரிய வந்தது.

தமிழகத்தில் வாழ்ந்து வரும் இலங்கை அகதிகளை புதுச்சேரி வழியாக ஆஸ்திரேலியாவிற்கு செல்வதற்கு உதவியதாக 5 தரகர்களை பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அகதிகளிடம் நடத்திய விசாரணையில், இந்திய ரூபா 2 லட்சம் பெற்றுக்கொண்டு தங்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதாக தரகர்கள் கூறியதன் பேரில் தாங்கள் இங்கு வந்ததாக கூறினர். (3)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் 26 ஆம் நாள் திருவிழாவான (பூங்காவனத் திருவிழா) இன்று மாலை 6.30 மணிக்கு நாகம்மா மகாலிங்கத்தின் மாணவர்களின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். வயலின்- அ.கிருஷ்ணாலினியின் மாணவர்கள், தாளவாத்திய அரங்கு-க. கண்ணதாசனின் மாணவர்கள், நடன நிகழ்ச்சி- பாலினி கண்ணதாசனின் மாணவர்கள். (3-14-86)

* * *

நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாநிகழ்த்தும் கந்தபுராணம்பற்றிய தெய்வீகத்தொடர் இசைப்பேருரையில் 'வள்ளி திருமணம்' இடம்பெறவுள்ளது. (3)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு தென்புலோலியூர் பரா ரமேஸ் ''கற்றதனால் ஆய பயன்'' என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ச.லலீசன் 'அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்' என்னும் கருப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து சுதுமலை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக மா.ந. பரமேஸ்வரனின் திருப்புகழ் கச்சேரி இடம்பெறும். (3-7-86)

* * *

மகேஸ்வரன் மணிமண்டபத்தில் மாலை 7மணிக்கு ஜாக்கிரத் சைத்தன்யாவின் ''இந்துவே கந்தனை வந்தனை செய்திடுவாய்'' என்னும் கருப்பொருளில் ஆன்மிக அருளுரை இடம்பெறும். (3-14)

அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

தென்மராட்சி, ஓக.18

தென்மராட்சி கல்வி வலயத்தில் பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கு தகைமையுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை, கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு-I, வகுப்பு 2:I ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் வலயக் கல்வி அலுவலகத்தில் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (3-9)

அந்திமகால சேவையை உருவாக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஓக. 18

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு மன்றத்தின் மற்றொரு சேவையாக அந்திமகால சேவைக்கான வாகனம் கொள்வனவு செய்யப்படல் வேண்டும் என நகராட்சி மன்ற மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் ப.சிறிதரன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் அந்திமகாலச் சேவைக்கான வாகனம் வைத்திருப்போர் அதிக கட்டணம் அறவிடுவதாக தன்னிடம் முறையிடுவதாகத் தெரிவித்த உறுப்பினர் ப. சிறிதரன் மன்றினால் ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்து மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சேவையில் ஈடுபடுத்துவது நாங்கள் மக்களுக்கு ஆற்றும் சேவையாக இருக்குமென கூறினார்.

இதற்கு பதிலளித்த தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை இந்தச் சேவை மக்களுக்கு பயனளிக்கக்கூடியது எனவும் இது தொடர்பாக உரிய தரப்பினருடன்தொடர்பு கொண்ட பின்னர் அடுத்தகூட்டத்தில் பதில் அளிப்பதாகக் கூறினார். (3-9)

5 வீதிகள் புனரமைப்பு

தென்மராட்சி,ஓக. 18

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட 5 வீதிகள் புறநெகும திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

நுணாவில்- கல்வயல் முதலாம் ஒழுங்கை ஆடியம்பிட்டி வீதி, மீசாலை வெள்ளமாவடிப்பிள்ளையார் வீதி, தாளையடி அம்மன் வீதி இரண்டாம் ஒழுங்கை, மீசாலை வங்களா வீதி, சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோயில் வீதி ஆகியவை 42மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

இதே வேளை யுனிசெப் நிறுவனத்தினரால் கோவில் குடியிருப்பு உதயசூரியன் கிராமத்தில் இரண்டு கிணறுகளும் மீசாலை கிழக்கில் ஒரு கிணறும் குழாய்க் கிணறாக மாற்றுவதற்கு முன்வந்துள்ளதாக நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (3-9)

பதின்மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு:07.01.1977 துன்பத்தில்:10.09.1999

குணசிங்கம் ஞானேந்திரன் (குட்டி, கண்ணன்)

(கோபிகா ஆடையக உரிமையாளர், 5/4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்)

வேல் சுமந்த வேலவன்
தேர் வந்து போவதெல்லாம்
உன் மேல் சுமந்த வீதியல்லவா!
ஊர் உருவித் தொழுகின்ற
நந்த வேள் கருணைக்குள்
காணாமல் கரைந்தவன் நீயல்லவா

நீ விட்ட இறுதி மூச்சை
நாம் மட்டு சுவாசிக்கின்றோம்
உன் கால் தொட்ட சுவடுகளில்
தலை வைத்து தூங்குகின்றோம்

உறங்கும் நிமிஷப் பொழுதிலும்
ஒவ்வொரு கவளச் சோற்றிலும்
உயிரின் கணத்தின் துடிப்பிலும்
உறைந்து போனவன் நீயடா!

ஆண்டுகள் பதின்மூன்று தொலைந்தது
இன்னும் – ஆயிரமாயிரமாகட்டும்
மீண்டும் மீண்டும் வாழ்ந்திருப்பாய்
கண்ணா! தோன்றும் ஒவ்வொரு உயிருள்ளும்

(21236) (6-9-7)

40/6, புகையிரத வீதி ஒழுங்கை, நல்லூர்மடம், யாழ்ப்பாணம்.

உனது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரிகள், மச்சான்மார், மருமகள், மருமகன்மார், உறவினர்கள், நண்பர்கள்.

விற்பனைக்கு

நல்லின அல்சேசன் (ஜெர்மன் செப்பேட்) 45 நாள் நிரம்பிய ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6622 313, 021 2230 024

(21841) (4-8-7)

சிங்கள வகுப்பு

சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

தொடர்பு: 077 773 2214

(21535) (25.6.7)

தவறிவிட்டது

104,நாயன்மார் வீதி, விலாசத்தில் வசிக்கும் தேவராஜா பிறேமலதா ஆகிய நான் 16.08.2012 ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவன்று இரவு 9.30 மணியளவில் எனது 7½ பவுண் தாலிக்கொடி எனது வீட்டு ஒழுங்கையில் தாவணிக்குள் இருந்து விழுந்துவிட்டது. அதைக் கண்டெடுத் தவர்கள் தயவு செய்து மேல்குறிப்பிட்ட விலாசத்தின்படி கொண்டுவந்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எடுத்துக் கொடுப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 581 1558

(21870) (5.6.7)

இதய அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர்களான
த.தேவமனோகரன்
த.சிவராசா
ச. தேவமனோகரி
த.றஞ்சிமலர்
ஆகியோரின் அன்புத் தாயார் திருமதி தம்பிப்பிள்ளை இராசாத்தி அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தவர்கள்
அங்கத்தவர்கள்
மாவைக் கந்தன் சிக்கன
கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

(21866) (5.6.7)

பதினைந்தாம் ஆண்டு
மனதை விட்டகலா மகளின் நினைவு

அன்னை மடியில்: 16.12.1980
ஆண்டவன் அடியில்: 02.09.1997

செல்வி கவிதா சின்னையா

திதி:- பிரதமை (18.08.2012 சனிக்கிழமை)

மண்ணின் மடியில் மார்கழி மலர் என மலர்ந்தாய்
கவி எனும் பெயரினைப் போலே
கவி என மனதில் பதிந்தாய்
கனவுகள் சுமந்த உன் கண்கள்
கவனத்தைக் கவரும் உன் சிரிப்பு
கதைகள் உதிரும் உன் இதழ்கள்
காலன் பறித்திட்ட போதும்
எங்கள் நினைவில் என்றும் நீ வாழ்வாய் ராசன்
பிரிவினை என்னும் துயரில்
உருகியே வாடும் உந்தன்
உதிரம் சுமந்திடும் உறவுகள்

(2931) (2-9-7)

கவிதாலயா,
இல.6, பொர்ணாரிஸ் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

அப்பா சின்னையா, அம்மா சரஸ்வதி, அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்.

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 3 இலங்கையருக்கு இந்தியாவில் சிறை

பல வருடங்களாக இலங்கைக்கு இந்தியாவில் இருந்து போதைப் பொருள்களைக் கடத்திய மூன்று இலங்கையர்களுக்கு, இந்தியாவில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு போதைப் பொருள்களைக் கடத்திய குற்றச்சாட்டின் கீழ், 2004 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட சிறிஸ்கந்தராஜா, ரங்கநாதன் பிரபாகரன் மற்றும் என். காண்டிபன் ஆகிய மூன்று இலங்கையர்களினதும் வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, இந்த கடத்தல் நடவடிக்கைகளில் பிரதானமாகச் செயற்பட்டவர் எனக் கருதப்படும் சிறிஸ்கந்தராஜாவுக்கு போதைப்

இலங்கைக்கு இந்தியாவில் இருந்து போதைப்பொருள்களைக் கடத்திய மூன்று இலங்கையர்களுக்கு, இந்தியாவில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பொருள் கடத்தியமைக்கு 10 வருடங்களும், சிறையில் இருந்து தப்பிச் சென்ற குற்றத்துக்காக 10 வருடங்களும் என மொத்தமாக 20 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன் 4 லட்சம் இந்திய ரூபா தண்டப் பணம் அறவிடுமாறும் உத்தரவிடப்பட்டது.

இதேவேளை ஏனைய இருவருக்கும் தலா 10 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (3)

மாதாந்த உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ளவும்

தென்மராட்சி, ஓக. 18

சரசாலை உப அஞ்சல் அலுவலகத்தில் இதுவரை ஓகஸ்ட் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்றும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவை மாதாந்தம் 04ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளுமாறு ஏற்கனவே அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தும் சரசாலை உப அஞ்சல் அலுவலகத்தில் 42 பேர் இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளவில்லையென பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இன்றும் நாளை மறுதினமும் இக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-9)

சந்நிதி ஆலய நிகழ்வுகள்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய முன்றிலில் இன்று மாலை 5மணிக்கு சுப. ஜெயகோபாலசாமி 'ஞானவெளி' எனும் கருப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (8-253)

* * *

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை விசேட ஆன்மிக நிகழ்வுகளை இன்று சனிக்கிழமை இரண்டாம் திருவிழா தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி 13 ஆம் திருவிழாவான சப்பறத் திருவிழா வரை தினமும் முற்பகல் 10 மணிக்கு நடத்தவுள்ளது.

இரண்டாம் திருவிழாவான இன்று வட பிராந்திய சாயி சமித்தியினரால் பஜனை இடம் பெறவுள்ளது. (ம-8)



'தெய்வீக சுக அனுபவம்' நேற்றுமுன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பரதநாட்டிய கலைஞர் அலர்மேல்வள்ளியும், பாடகர் ரி.எம்.கிருஷ்ணாவும் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டிருப்பவர்களையும் அலர்மேல்வள்ளியின் நடன நிகழ்வையும் காணலாம். (3-13)

நல்லூர் கந்தனின் 25 ஆம் நாள் வீதியுலாக் காட்சி



WESTERN UNION MONEY TRANSFER
MMBL Money Master
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. :- 021 222 5392, 2670, Fax :- 021 222 3214

"சூழலை மாசகற்றும் சூக்குமம்"

பூங்காவனத்தன்று பூசிப்போம்
நல்லூரில்
ஆங்கழகுக் காய்வளரும்
பூமரங்கள்– தீங்கான
சூழலை மாசகற்றுஞ்
சூக்குமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி
நல்லூரின் கந்தா
உனைநாடி வந்தவர்க்குப்
பொல்லாதன வெல்லாம்
போகுமே – நில்லாது
துன்பங்கள் நீங்குஞ்
சுகவாழ்வு கைகூடும்
இன்பங்கள் பொங்கும் இனிது.

அமரர்ச சி. இராசரத்தினம் [இறைமணி]

"நல்லூரும் திருப்பரங்குன்றம் ஆகுதே!"

வள்ளியும் தெய்வயானையும்
மணக்கோலத்துடன் நிற்க
நல்லூர் திருப்பரங்குன்றம் ஆகுதே!
பவளம் போன்ற மேனியும்
தாமரைப்பூப்போன்ற சிரிப்பும்
நல்லூரில் தோன்றுதே!
நல்லூரிலே அருளாட்சி செய்யும்
நல்லைக் கந்தனுக்கு
திருமணமாம் என்று உலகே அறியுதே!
தேங்காய்லிக்கஇன்னிசை வாத்தியங்கள் முழங்க
நல்லூரும் திருப்பரங்குன்றம் ஆகுதே!

ச.சுபபிரியன், யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

"ஒருகோடி தமிழ் வார்த்தை வேண்டும்"

அலைபாயும் மனமிங்கு
நிலையாக வேண்டும்– உன்
மதியான பதந்தன்னை
நிதம் காணவேண்டும்
அடித்தாலும் அணைத்தாலும்
நீயாகவேண்டும் – முருகா
என் அறியாமை இருள் நீக்க
ஒளியாக வேண்டும்
தந்தைக்கு உபதேசம் செய்தவனே –
தேவர்குலம் காக்க வந்தவனே
வள்ளி தெய்வயானை மணம் புரிந்தவனே முருகா
நல்லூர் பதியமர்ந்து அருள் தருபவனே

பாவரன், வவுனியா.

அடியவர் குறை தீர்க்கும் நல்லூர் குமரா
ரமணன்
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
இல.84 ஐயவர் கோயிலடி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் .தொ.பே: 021 4923417, 021 222 9296

இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறார்கள் எம் மக்கள்

தமிழரின் வாக்குகளைச் சிதறடிக்கலாம் என்று பகல் கனவு காண்கிறது அரசு என்கிறார் ஜனா

எருவில்,ஓக.18

தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கலாம் என்று மஹிந்த அரசும், அதனுடன் சேர்ந்தியங்கும் குழுக்களும் பகற் கனவு காணுகின்றன. ஆனால், எமது மக்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். அவர்கள் தமிழ்த் தேசிய இலட்சியத்தில் உறுதியாக நிற்கின்றார்கள். கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் இது நிரூபணமாகும் என்று தமிழ்த்

தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மஹிந்த அரசால் திணிக்கப்பட்டது. எனினும், இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில் தேர்தல் காலத் தில் மக்களையும், வேட்பா ளர்களையும் அச்சத்தில் வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்காக மஹிந்த அரசும், அதனுடன் சேர்ந்தியங்கும் குழுக்களும் பல அடாவடித்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

மட்டக்களப்பில் கூட் டமைப்பின் வேட்பாளர் பலருக்கு அச்சுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளது. எனக்கும் இந்த அச்சுறுத்தல் நேரடியாகவும், மறைமுகமாகவும் விடுக்கப்பட்டுள்ளது. எனது சகோதரர் (கோவிந்தன் கருணைநாயகம், அதிபர், மட்டக்களப்பு மாங்காடு மகா வித்தியாலயம்) மஹிந்த அரசின் அடியாள்களின் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந் துள்ளார்.

அதேவேளை, எனது ஆதர வாளர்கள் மற்றும் எனது சக வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல் கள் நடத்தப்பட்டுள்ளன; அச் சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. - என்றார். (ச-31)

தேவை

யாழ்நகரில் பிரபல Tiles விற்பனை நிறுவனத்துக்கு Sales Representatives,Store Keepers தேவை. அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Ranjanas CERAMIC
No,212 Palaly Road, Jaffna
E-mail : Suren@metrohomes.lk
(ச/2393)(2.7.6)

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசையா தங்கச்சியம்மா

உரும்பிராய் மேற்கு, அன்னுங்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தங்கச்சியம்மா (15.08. 2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் பாசமிகு மனைவியும், நாகேஸ்வரி, தங்கலட்சுமி, யோகேஸ்வரன், உதயசூரியன், பிறேமா, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், பற்குணராசா, பாலசிங்கம், மஞ்சுளா, ஜெந்தி, ஸ்ரீமோகன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமி யும், பிருந்தா, பிரியா, தட்சனா, பிரித், சர்மிளா, சுரேகா, ரஜீவ், வித்தியா, பிரதீபன், கேம்சன், யோன்சன், அபிராமி, டினேஸ், டிலானி, பிரதீஸ், மதுசன், டிலக்சன் ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (20.08.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காகப் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னுங்கை, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (21874)(2.7.6)

தகவல்
குடும்பத்தினர்.

திருமதி நடராசா சரஸ்வதி

71, அரச வீதி, நல் லூரைப் பிறப்பிட மாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி - நடராசா (16.08. 2012) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பொன்னுச்சாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், Dr. தர்மலிங்கம் நடராசாவின் மனைவியும், லண் டனில் வசிக்கும் Dr. வசந்தி, சாந்தி, Dr. ரஞ்சினி ஆகியோரின் தாயும், Dr. இராமநாதன், கதிர்காமநாதன் ஆகியோரின் மாமியும், காலஞ் சென்றவர்களான கனகசபாபதி, இராசதுரை - மாணிக்கம் மற்றும் Dr.கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெய்சன்,Dr.குமரன், ரதி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
56, அரச வீதி,
நல்லூர். (21873)(2.7.6)
Dr.பொ.கனகலிங்கம்
(சகோதரன்)

கார் விற்பனைக்கு

TOYATA Vitz, 2007 model கார் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 136 2202
(ஏ/2399)(5-6-7)

வீடு வாடகைக்கு உண்டு

உயரப்புலம், ஆனைக்கோட்டை பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 352 6969
(21881)(5-6-7)

அலுவலகப் பணியாளர் பதவி வெற்றிடம்

ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனியில் அலுவலகப் பணியாளர் ஒருவர் தேவை. எதிர்வரும் 20.08.2012 திங்கட்கிழமை பகல் 10-12 மணிக்குள் சமுகமளிக்கவும். தொடர்பு: 077 580 0857
முகாமையாளர்,
ஜனசக்தி இன்சூரன்ஸ், 165,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (21882)(5-6-7)

வீடு காணி விற்பனைக்கு

கொக்குவில், சபாபதி ஒழுங்கையில் 4 பரப்பு 9குளி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 532 9104, 236 5633
(ஏ/2379)(5-6-7)

வாகனம் ஓட்டும் சாரதி தேவை

நிறுவனம் ஒன்றிற்கு வாகனம் ஓட்டும் சாரதி தேவை.
தொடர்பு: 077 072 0512
(ஏ/2400)(5-6-7)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
26.12.1949

மறைவு
19.07.2012

ஐயாத்துரை லோகேஸ்வரன்

(Bsc (Hons), Msc (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - லண்டன்)

எங்கள் உள்ளங்களில்
நீங்கா நினைவுகளை விட்டு விண்ணுலகம் சென்ற அன்புத்தெய்வத்துக்கு நினைவுப்பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பிரதான வீதி,
சங்கானை.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(21576) (45.6.7)

31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் மாதாவாய் — விண்ணில் தேவதையாய்

17 மே 1951 — 20 மே 2012

அமரர். திருமதி. P. தவமணி

20.07.2012 அன்று எமது குடும்ப தலைவியின் பிரிவுச் செய்தி கேட்டதும் எம்முடன் இருந்து பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசி மற்றும் அனுதாபம்தல் மூலமாகவும் எமக்கு ஆறுதலையும் அனுதாபங்களையும் தெரிவித்து எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஊடகத்துறை சக நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 19.08.2012 அன்று காலை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

டெல்வின் "B"
இறக்குமதி
071-4114998
077-9360661
072-8482169

நன்றியுடன் : கணவர் - இரா. புத்திரசிகாமணி
(சிரேஸ்ட ஊடகவியலாளரும்,
உதயன் பத்திரிகை நாடாளுமன்ற செய்தியாளரும்)
மற்றும் குடும்பத்தினர்

(ச/2281)(2.7.6)

மரண அறிவித்தல்

தம்பாபிள்ளை ஜெயசிங்கம்

சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் இல.8, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாபிள்ளை ஜெயசிங்கம் (பாட்டா) 15.08.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வரத்தினம் (நல்லூர்) அவர்களது அன்புக் கணவரும் நஞ்சி, பாமினி, காலஞ்சென்ற மோகன் மற்றும் விமலன் காலஞ் சென்ற நகுலன் மற்றும் அநுரா,சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மபாலன், கமல நாதன், மாலா, பபா, ஜொய்சி ஆகியோரின் அன்பு மாமனா ரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத் துறை துண்டி மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஏ, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை. (21877)(5-6)

தகவல்:
திருமதி ஜெ.செல்வரத்தினம்(மனைவி)

4 வது நளின் காட்சியறையின்

ஆண்டு ஆரம்ப தினத்தை முன்னிட்டு...

3rd Generation mother board களை அறிமுகம் செய்த நாங்கள்

Intel 71 Chipset mother board கொண்ட கணனிகள்

மிக குறைந்த விலையில்...

மெகா அதிரடித்தள்ளுபடி 18.08.2012 இல் இருந்து 22.08.2012 வரை....

எம்மிடம் வாங்கும் கணனிகளுக்கு

FREE Multi Dongle Huawei and Headphone

- Lap Tops i3,i5,i7
- Branded PC i3,i5
- Atom,Dual core Pc

No	Process	M/Boad	Gen	H.D.D	Ram	DVD	Casing	Monit	UPS	Price
Nit01	Atom	Asus	2nd	160GB	2GB	Samsung	ATX	19"	650w	43800/=
Nit02	Dualcore	intel 61	2nd	500GB	2GB	Samsung	ATX	19"	650w	54800/=
Nit03	i3	intel 61	2nd	500GB	4GB	Samsung	ATX	19"	650w	64500/=
Nit04	i5	intel 71	3rd	500GB	4GB	Samsung	ATX	19"	650w	73000/=
Nit05	i7	intel 71	3rd	500GB	4GB	Samsung	ATX	20"	650w	96000/=

எமது நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த வாடிக்கையாளர்கள், அன்பர்கள், விநியோகஸ்தர்களுக்கு எமது உள்ளம் கனிந்த நன்றிகள். மேலும் எமது நிறுவன வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

NALIN Information Technologies Pvt Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES

195/2, Parameswara Junction, Jaffna.

web - www.nit.lk T.P: 0212221121 / 0212220838

மரண அறிவித்தல்



கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்

(மலையான் குளம் சுந்தரம்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை பாலசுந்தரம் (15.08.2012) புதன்கிழமை நெடுந்தீவில் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் நெடுந்தீவின் கோன் ஓங்கும் மண்டிப்பதியின் வம்சாவளியாளரும், காலஞ்சென்றவர்களான மலையான்குளம் கணபதிப்பிள்ளை- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மலையான்குளம் வேலுப் பிள்ளை- சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல் யம்மையின் ஆருயிர்க் கணவரும், இராசலிங்கம் (பிரான்ஸ்), நவரத்தினராசா (கனகராயன் குளம்), தனலட்சுமி (பிரான்ஸ்), சிவசோதி (நெடுந்தீவு), குணரட்ணம் (நீதிமன்றம்-மல்லாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொலின் (ரமணி- பிரான்ஸ்), மகேஸ்வரி (கனகராயன்குளம்), பரமேஸ்வரதாஸ் (பிரான்ஸ்), இந்திரபாலன் (நெடுந்தீவு), விஜயலதா (லண்டன்), கருணகலாதேவி (ஆசிரியர் -யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், தர்மரட்ணத்தின் (லண்டன்) அன்புப் பெரிய ஐயாவும், சுபோதினி-நிமலதாஸ் (பிரான்ஸ்), நிலோஜினி - எமில்டன் (பிரான்ஸ்), வேஜினி (பிரான்ஸ்), அருணோதயன் (லண்டன்), தினேஸ் (பிரான்ஸ்), அபியதர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஆதித்தியா, அபினையா ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, யாதவராயர், தங்கம்மா, மீனாட்சி மற்றும் யோகம்மா, கனகம்மா (முன்னாள் விவசாய திணைக்களம்- இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதாஸ் (குருத்துவ மாணவன் -கண்டி), ஜெகதாரணி - பிரதீபன் (சதொசா- கிளிநொச்சி), நவதர்சன் (அபிவிருத்தி உதவியாளர் கச்சேரி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு அத்தைமாமாவும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, தங்கம்மா, குட்டிப்பிள்ளை, கந்தையா (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்), காமாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, மாசிலாமணி (முன்னாள் மருந்து கலவை உதவியாளர்) மற்றும் ஜெயமணிபூரணம் ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்றவர்களான இராமநாதர், கந்தையா, மருதலிங்கம், சோமசுந்தரம் மற்றும் குணரட்ணம் (முன்னாள் கடதாசிக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு சகோதரிகளின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நெடுந்தீவு மேற்கு 1ஆம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெடுந்தீவு மேற்கு ஆத்தான்கரை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

நெடுந்தீவு.

(21917)(3.14)

தடைசெய்யப்பட்ட வலைகளால் மீன்கள் அழிவடையும் அபாயம்

நெளுக்குளம், ஓகஸ்ட் 18

வவுனியாவிலுள்ள குளங்களில் தடைசெய்யப்பட்ட வலைகள் பயன்படுத்தப்படுவதால் மீன்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில மீனவர்கள் தங்கூசி வலை, வீச்சுவலை, இழுவைவலை மூன்றரை அங்குலத்துக்கும் குறைவான கண்ணுள்ள வலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வருவதால் பெருமளவு மீன்கள் வீணாக அழிவடையும் நிலை தோன்றியுள்ளது.

நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டங்களை மேம்படுத்தும் வகையில் பல மில்லியன் ரூபா செலவிலான செயற்பாடுகள் வவுனியாவில் இடம்பெற்று வருகின்றன. குளங்களில் பல லட்சம் ரூபா பெறுமதியான மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

இவை உரிய வளர்ச்சியை அடைந்ததும் பல மில்லியன் ரூபா பெறுமதியான மீன்களைப் பிடிக்க முடியும்.

ஆனால் சில மீனவர்களின் தவறான செயல்களால் மீன்கள் அழிவடையும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வவுனியாக் குளங்களில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர் பா.நிருபராஜ் தெரிவித்துள்ளார்.

மீன் இனங்களைப் பாதுகாப்பதற்காகவே இந்த நடைமுறை வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியினால் குளங்களிலுள்ள மீன்கள் அழிவடையும் நிலையில் சில மீனவர்களின் தவறான செயற்பாடுகளால் நிலைமை மேலும் மோசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தடைகளை மீறி மீன் பிடிப்போரின் வலைகளும், அவர்கள் பயன்படுத்தும் வாகனங்களும் பறிமுதல் செய்யப்படுவதோடு வழக்கும் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரியவருகின்றது.

(க-402)

கடைக்காரரை ஏமாற்றிய ஆசாமி தங்கநகையுடன் ஓட்டம்பிடித்தார்

அகப்பட்டார் அவரது மதுபானக் கூட்டாளி

வடமராட்சி,ஒக்.18

கடையில் நகைகளை வாங்குபவர் போல் பாசாங்கு செய்த ஆசாமி ஒருவர் நகைகளைத் தூக்கிக்கொண்டு மாயமானார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் 11 மணியளவில் நெல்லியடி பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள நகைக் கடை ஒன்றில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளைக்கு அருகில் உள்ள குறித்த நகைக் கடைக்குச் சென்ற இரு இளைஞர்களில் ஒருவர் ஒரு பவுண் தங்கச் சங்கிலியும், அரைப்பவுண் மோதிரமும் தமக்குத் தேவை எனக் கூறி 90 ஆயிரம் பெறுமதியான நகைகளையும் அவற்றிற்கான ரசீதையும் பெற்று காற்சட்டைப் பொக்கற்றுக்குள் வைத்துவிட்டு, பின்பொக்கறில் பணத்தை எடுப்பது போல நடித்துக்கொண்டு கடையை விட்டு வெளி நோக்கி ஓட்டம் பிடித்தார்.

அவரைக்கண்டு உடன் வந்திருந்த அவரது நண்பரும் அவருக்குப் பின்னால் ஓடவே இங்கு ஏற்பட்ட சலசலப்பில் நண்பரான இளைஞர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டுநையப்புடைக்கப்பட்டு நெல்லியடிப்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர் எனவும் திருடியவரை தனக்குத் தெரியாதென்றும் நெல்லியடியில் உள்ள மதுபான சாலையில் அடிக்கடி சந்திப்பதால் அவருக்கும் தனக்கும் நட்பு ஏற்பட்டதாகவும் நகை வாங்க வேண்டியிருப்பதால் கடைக்கு தன்னுடன் வருமாறு அழைத்தமையால் தான் வந்ததாக பிடிப்பட்ட இளைஞர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து விசரணைகளை மேற்கொண்டுவரும் நெல்லியடிப்பொலிஸார் தங்க நகையுடன் தலைமறைவான இளைஞர்களைத் தேடிவருகின்றனர்.(16-8)

உலக மனிதாபிமான தினம் இலங்கையிலும் அனுஷ்டிப்பு

மனிதாபிமான பணிகளின் போது உயிர் நீத்த மனிதாபிமான பணியாளர்களுக்காக சர்வதேச மனிதாபிமான தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்தமுறை கொழும்பிலுள்ள ஐ.நா.அலுவலகம் மற்றும் கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய அலுவலகங்களிலும் இந்த தினம் அனுஷ்டிக் கப்படவுள்ளது.

ஈராக்கின் பக்தாத் நகரில் மனிதாபிமான பணியாளர்களின் அலுவலகத்தின் மீது குண்டு வீசியமையால் இவர்கள் கொல்லப்பட்டனர். இதனை நினைவு கூரும் முகமாக கடந்த 2008ஆம் ஆண்டு முதல் உலக மனிதாபிமான தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இருப்பினும் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுவது தொடர்பில் மக்களுக்கு பெருமளவில் விளக்கமின்மையால் இதனை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்ப்பதற்காக சமூக வலைத்தளங்களினூடாகவும் இந்த வருட மனிதாபிமான தினம் தொடர்பில் அதன் இணையத் தளத்தில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது.

www.whd-iwashere.org என்ற இணையத் தளத்தில் பதிவு செய்வதன் மூலம் மனித நேய தினத்தைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் சர்வதேச மனிதாபிமான தினம் நாளை கொண்டாடப்படாதெனவும், கொழும்பிலுள்ள ஐ.நா. வளாகத்தில் இலங்கைக்கான ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி சபைனோ நண்டி தலைமையில் எதிர்வரும் 21ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. (16-5)

முன்னாள் போராளிகளுக்கு முச்சக்கர வண்டிகள்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டோரில் யாழ். மாவட்டத்தில் உள்ளோருக்கு புனர்வாழ்வு சிறைச்சாலை மறுசீர் அமைச்சினால் முச்சக்கர வண்டிகள் வழங்கப்படுவதற்கான திட்டங்களை மேற்கொண்டுள்ளதாக புனர்வாழ்வு மீளாய்வுக் குழு பொறுப்பதிகாரி மேஜர் கெகத்குமார் தெரிவித்தார். யாழ்.மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டோருக்கான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைவாக புனர்வாழ்வு சீறைச்சாலை மறுசீர் அமைச்சர் சந்திரசிறி கஜதீர இத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளார்.

முதற்கட்டமாக முச்சக்கர வண்டி வழங்கும் திட்டத்தினை யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எலைன்ஸ் கம்பனியினூடாக வழங்கப்படும் இந்த முச்சக்கர வண்டிகளானது முற்கட்டணம் எதுவுமின்றி இலவசமாக வழங்கப்படும். பின் 4 வருடம் தொடக்கம் 6 வருடத்துக்குள் மொத்தப் பணத்தினையும் செலுத்த வேண்டும்.

தரப்படும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ததன் பின்னர், பொருத்தமானவர்களை தேர்ந்தெடுத்து முச்சக்கர வண்டிகள் வழங்கப்படும்.

முதற்கட்டமாக 25 பேருக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தார். இந்த நிகழ்வில் புனர்வாழ்வு மீளாய்வுக் குழு உயர் மட்ட முகாமைத்துவ பணியாளர் ஆர்.செல்வராஜா மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பலர் கலந்துகொண்டனர். (16-13)

ஜனாதிபதி வவுனியா வருகை நேற்று பலத்த பாதுகாப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகையை முன்னிட்டு வவுனியா நகரப்பகுதியில் பாதுகாப்புக் கெடுபிடி அதிகரித்துக் காணப்பட்டது ஆங்காங்கே கறுப்பு உடையணிந்த பீல்பைக் உறுப்பினர்கள் நிறுத்தப்பட்டிருந்ததால் மக்கள் அச்சத்துடன் நடமாடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

வடமாகாண அபிவிருத்தி தொடர்பான முக்கிய மாநாடு நேற்று வவுனியா செயலக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது . இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கமநல மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன, சிறுவர் மகளிர் விவகார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, சிறுகைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உட்பட பல உயர்மட்டத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இதனால் வவுனியா செயலகப் பிரதேசம் உட்பட அனைத்துப் பகுதியிலும் ஆயிரக்கணக்கான பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

செயலகத்தில் இடம்பெறும் கூட்டத்திற்கு சென்ற உயர் அதிகாரிகளின் வாகனங்கள் எவையும் செயலகத்தினுள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை.அனைத்து அதிகாரிகளும் உடற்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் வருகையையொட்டி செயலகப் பகுதிக்குள் பொதுமக்கள் எவரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் செயலகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்பட்டன.

போக்குவரத்தில் ஈடுபட்ட அரச, தனியார் பஸ்களும் செயலகத்துக்குஅண்மையிலுள்ள பஸ்தரிப்பிடங்களில் நின்று பயணிகளை ஏற்றவோ இறக்கவோ அனுமதிக்கப்படவில்லை. இதனால் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய பலர் நீண்டதூரம் நடந்து செல்லவேண்டியதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பொதுமக்கள் பலரும் முணுமுணுத்தபடி பயணங்களை மேற்கொண்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை வவுனியாவைச் சேர்ந்த அரச ஊடகத்துறையினரைத் தவிர வேறு எந்த ஊடகவியலாளரும் கலந்துரையாடலுக்கு அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

விசேட ஹெலி மூலம் வவுனியா யோசப் விமானத் தளத்தில் வந்திறங்கிய ஜனாதிபதியும் அவரது குழுவினரும் அங்கிருந்தே திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-400, 402)

தெல்லிப்பழை ஆலயத்தில் சுகாதார ஒழுங்குகள்

அளவெட்டி, ஓக.18

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலைச் சுத்தம் செய்து நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

திருவிழாக் காலங்களில் ஆலய வளாகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதார ஒழுங்குகள் குறித்தும் அவற்றைத் தொடர்ச்சியாகப் பேணுவது குறித்தும் சுகாதார வைத்திய அதிகாரிகள், பரிசோதகர் குழுவினர் ஆராய்ந்ததோடு திருவிழாக்காலங்களில் தெல்லிப்பழை வைத்தியசாலை ஊடாக நடமாடும் வைத்திய சேவை ஒன்றை நடத்துவது தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

(10-36)

மரண அறிவித்தல்

திருமதி வேலுப்பிள்ளை தங்கரத்தினம்

வட்டுக்கோட்டை மேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கரத்தினம் நேற்று (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் வைத்திலிங்கம் மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும் மகேந்திரன், சொர்ணபுஸ்பம், மகாதேவர் (ஜேர்மனி -முன்சன்) காங்கேசர் (இ.மி.ச. சுன்னாகம்) அருளானந்தர் (பிரதேசசபை வட்டுக்கோட்டை) இராஜலக்சுமி ஆகி யோரின் அன்புத் தாயும் நடேஸ்வரி காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் நகுலராணி(ஜேர்மனி) உமா(பிரதேச செயலகம்-சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற வரதன் மற்றும் றமணன்-கஜனி காலஞ்சென்ற சிறிபவாணி-பவானி மற்றும் தனுசன்-கிரியா, சுதாகரன், யசோதரன், நாகலோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.08.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருஞானசம்பந்தர் வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. (21920)(9.14)

தகவல்:
குடும்பத்தினர்,
பூட்டப்பிள்ளைகள்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வவுனியா சுந்தரபுரம் அத.க. பாடசாலை மாணவிகள், அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களுடன். (ங-400)

இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணி

சிவானந்தா விளையாட்டுக்கழகம் எதிர் இமையாணன் விளையாட்டுக்கழகம்

பி.ப. 4.30 மணி

சுடர்ஒளி விளையாட்டுக் கழகம் எதிர் சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழகம்.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு.

ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் எதிர் விண்மீன் விளையாட்டுக் கழகம்.

* * *

அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இடையிலான கிரிகெட் போட்டி இன்று சனிக்கிழமை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது. (ங-23)

போராடி வென்றது ஆவரங்கால் இந்து

யாழ்ப்பாணம்,ஓக.18

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுயாழ்.மாவட்ட நீதியிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை புத்தூர் வளர்மதி சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து அணி பலத்த போராட்டத்தின் மத்தியில் வென்றது.

இந்தப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது. மூன்று செற்களைக்கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி முதலாவது சுற்றினை 25:22 என்ற புள்ளி அடிப்படையில் தனதாக்கிக்கொண்டது. வீறுகொண்ட மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி தனது அதிரடியான ஆட்டத்தின் மூலம் இரண்டாவது சுற்றினை 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டது.

இரண்டு அணியினரும் ஒவ்வொரு சுற்றுக்களை வெற்றிகொண்டதினால் மூன்றாவது சுற்றில் எந்த அணி வெற்றி பெறப்போகிறது என்ற எதிர்பார்ப்பு பார்வையாளர்களிடம் உண்டானது. மூன்றாவது செற்றில் இரு அணியினரும் தமது அதிரடியான ஆட்டத்தின் மூலம் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். இறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 25:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ங-23)

சென்.மேரிஸ், சென். நீக்கிலஸ் நாமகள் தொடரில் கலக்கின



யாழ்ப்பாணம்,ஓக.18

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென்.மேரிஸ், சென். நீக்கிலஸ் அணிகள் வெற்றியீட்டின.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகஅணி மோதிக்கொண்டது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி அபாரமாக ஆடிய போது ரெட்ரேஞ்சர்ஸ் அணி திறமையாக விளையாடத் தவறியது. இதனால் 3:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக நாவாந்துறை சென். மேரிஸ் அணி வெற்றியடைந்தது. தொடர்ந்து இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி மாவத்தை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் அபாரமாக ஆடிய ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது . (ங-23)

அச்சுவேலி ஸ்ரார் அபாரம் பாரதி வீழ்ந்தது இலகுவில்

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 25:23, 25:13 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

கே.கே.எஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெறவிருந்த ஆட்ட நேரத்தின்போது கே.கே.எஸ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மைதானத்திற்கு சமுகம் தராமையினால் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ங-23)

மன்னார் பிரிமியர் லீக் இன்றுமுதல் ஆரம்பம்

மன்னார் பெரியகடை ஸ்டார் விளையாட்டுக் கழகம், ஈகிள் விளையாட்டு கழகம் ஆகிய இரு அணியினரும் இணைந்து மன்னார் மாவட்டத்தின் கிரிக்கெட் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு இரண்டாவது முறையாக நடத்தும் மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

மொத்தமாக 40 போட்டிகளை கொண்ட இந்தப் போட்டியில் மன்னார் மாவட்டத்தின் முன்னணி அணிகளான ஸ்டார் ஈகிள், சென்.விக்டறிஸ், சென்.அன்ரனிஸ், சென். ஜோசப், இந்து முன்னணி, யங்ஸ்டார், ஏசியன் மற்றும் கிறீன் பீல்ட் ஆகிய அணிகளும் கிளிநொச்சி மாவட்ட அணியும் இதில் களமிறங்கவுள்ளன. (ங-23)

வலைப்பந்தாட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.18

கொழும்பில் இடம்பெறவிருக்கும் 8 ஆவது ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது பங்குபற்றுமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவி திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (ங-23)

உதயதாரகை வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஓக.18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டமொன்றில், மனேகரா விளையாட்டுக்கழகமும் வல்வை 'பி' விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இந்த ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல்கணக்கில் வல்வை 'பி' அணியை வீழ்த்தியது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை 'ஏ' அணி மோதிக் கொண்டது.

இதில் வல்வை 'ஏ' அணி 4:3 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது. (ங-23)



வட மாகாண விளையாட்டு விழாவில் கடற்கரை கரப்பந்துப் போட்டி நேற்றுமுன்தினம் காலை முல்லைத்தீவு கடற்கரையில் இடம்பெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மன்னார் மாவட்ட அணியினருக்கு வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளார் சி.அண்ணாதுரை வெற்றிக்கிண்ணம் வழங்குகின்றார். (ங-23)

ஊவாவை ஊதித்தள்ளியது வயம்ப

எஸ்.எல்.பி.எல் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மஹேல தலைமையிலான வயம்ப அணியும், கண்டம்பி தலைமையிலான ஊவா அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஊவா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

ஊவா அணியுடனான ஆட்டத்தில் வயம்ப அணி சகல துறை ஆட்டத்தை வெளிப்படுத்தி 20 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

எஸ்.எல்.பி.எல் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மஹேல தலைமையிலான வயம்ப அணியும், கண்டம்பி தலைமையிலான ஊவா அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஊவா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய வயம்ப அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. ஆரம்பத்தில் தடுமாறிய வயம்ப அணி முன்வரிசை இலக்குகளை வேகமாகப் பறிகொடுத்தது. ஊவா அணியின் சார்பில் ஜேக்கப் ஓரம் ஆரம்பத்திலிருந்தே பந்து வீச்சில் மிரட்ட வயம்ப அணி தடுமாறியது. பின்வரிசை வீரர்களின் உறுதியாக அதிரடி ஓட்டக் குவிப்பின் மூலமே 147 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் கம்ரான் அக்மல் 36, மிலிண்ட சீறிவர்தன 28, வீரவத்தன 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஓரம் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஊவா அணி சீரான இடைவெளியில் தொடர்ந்து இலக்குகளை இழந்து கொண்டேயிருந்தது. பின்வரிசையில் ஓரம், சீக்குகே பிரசன்ன இருவரும் சிறிது நேரம் போராடிய போதும் வெற்றியிலக்கை அடைய முடியவில்லை. இறுதியில் 18.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது. துடுப்பாட்டத்தில் ஓரம், முனவீர இருவரும் 19 பந்துகளில் 26 ஓட்டங்களையும், சீக்குகே பிரசன்ன 10 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சத்துரங்க குமார 33 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். [5]

இனி ஓட மாட்டேன்

லண்டனில் எந்தவிதமான ஓட்டப் பந்தயத்திலும் நான் மீண்டும் கலந்துகொள்ளப் போவதில்லை என்று உலகின் அதி வேக மனிதரான ஜமைக்காவின் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள வரிமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டால் மாத்திரமே தாம் மீண்டும் போட்டிகளில் கலந்துகொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வரிமுறைகளால் அனுசரணை மற்றும் விளம்பர வருமானங்களில் பாதிப்புக்கள் ஏற்படுவதாக உசைன் போல்ட் கூறியுள்ளார். எனினும் லண்டனில் தமக்கு அதிகளவான இரசிகர்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் உசைன் போல்ட் மொத்தமாக மூன்று தங்கப் பதக்கங்களை சவீகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

கால அவகாசம் கோரியது இலங்கை

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான அணிகளை அறிவிப்பதற்கு மேலதிக கால அவகாசத்தை வழங்குமாறு இலங்கைக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை உட்பட இன்னும் சில நாடுகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான அணிகளை அறிவிப்பதற்கான இறுதித் தினம் இன்றாகும். இதுவரை ஆஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகள் தங்களது அணிகளை அறிவித்துள்ளன.

இந்த நிலையில் இலங்கையில் தற்போது ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் தொடர் தற்போது தான் ஆரம்பித்துள்ள நிலையில் இலங்கை அணியைத் தெரிவுசெய்வதற்கு மேலதிக காலம் தேவைப்படுவதாகவும் அதை வழங்குமாறும் இலங்கைக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்திருந்தது.

அதேபோல் இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் 3 ஆவது ஆட்டம் நடை பெற்றுவருவதன் காரணமாக இன்று அணியை அறிவிக்க வேண்டி ஏற்படுமாயின் ஆட்டத்தின் நடுவே அறிவிக்க வேண்டி ஏற்படும் என்பதால் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையும் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தது.

இன்னும் சில நாடுகளும் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்ததன் காரணமாக இந்தக் கோரிக்கையை ஏற்று அணிகளை அறிவிக்க வேண்டிய இறுதி நாளாக எதிர்வரும் 24 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 18 ஆம் திகதி முதல் இலங்கையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [5]

விருதுக்குப் பரிந்துரை

ஐரோப்பாவின் சிறந்த உதைபந்து வீரருக்கான 'பல்லான் டி ஆர்' விருதுக்கு பார்சிலோனாவின் லயோனல் மெஸ்சி, ரியல் மாட்ரிட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

'பல்லான் டி ஆர்' விருது ஒருங்கிணைக்கப்பட்ட 'பிபா பல்லான் டி ஆர்' விருது என்று மாற்றப்பட்ட நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் சிறந்த ஐரோப்பிய உதைபந்து வீரருக்கான 'பிபா' விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருதினை கடந்த 2011 ஆம் ஆண்டு நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி பெற்றார்.

இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டுக்கான இந்த விருதுக்கு பார்சிலோனாவின் லயோனல் மெஸ்சி, ரியல்மாட்ரிட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, பார்சிலோனா களத்தடுப்பாளர்களான அன்ட்ரஸ் இனியஸ்டா, சேவி ஹெர்னான்டஸ் ஜூவான்டஸ், பிளேமேக்கர் அன்ட்ரூ பிர்லோ ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து பேரில் இருந்து ஒருவர் இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட உள்ளார். இதனை ஐரோப்பாவின் சிறந்த 53 விளையாட்டு பத்திரிகையாளர்கள் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்ய உள்ளனர். எதிர்வரும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி மொனாக்கோவில் சம்பியன்ஸ் லீக் 2012-13 பருவகாலத்துக்கான அட்டவணை வெளியிடப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியின் போது சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்படும் வீரருக்கு விருது வழங்கப்பட உள்ளது. (5)

விலகினார் நடால்

ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரிலிருந்து விலகிக் கொள்வதாக ஸ்பெய்னின் ரபேல் நடால் அறிவித்துள்ளார். உலகின் மூன்றாம் நிலை வீரரான ரபேல் நடால் முழங்கால் உபாதை காரணமாகவே விலகிக் கொண்டுள்ளார்.

ரபேல் நடாலின் விலகல் தொடர்பான செய்தியை ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் ஏற்பாட்டாளர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

அவரது முழங்காலில் காணப்படும் உபாதை காரணமாக ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதையும், ஸ்பெய்ன் சார்பாக ஒலிம்பிக்கில் ஸ்பெய்ன் தேசியக் கொடியை ஏந்தும் கௌரவத்தையும் ரபேல் நடால் கைவிட வேண்டி ஏற்பட்டது.

இந்த நிலையில் இவ்வாண்டு இடம்பெறவுள்ள ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் தொடரில் பங்குபற்றும் உடற் தகுதியைக் கொண்டிருக்கமாட்டார் என்ற காரணத்தினால் அந்தத் தொடரிலிருந்து விலகிக் கொள்வதாக ரபேல் நடால் அறிவித்துள்ளதாகத் தெரிவித்த ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் சுற்றுத்தொடரின் பணிப்பாளர் டேவிட் புருவர், அடுத்தாண்டுத் தொடரில் அவர் பங்குபற்றுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் சம்பியன் பட்டம் வென்ற ரபேல் நடால், எப்போதும் இந்தத் தொடரில் தனக்கு ஆதரவு கிடைத்து வந்த நிலையில் இவ்வருடத் தொடரில் பங்குபற்ற முடியாது போயுள்ளமை குறித்து வருத்தமடைவதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் தொடர் நியூயோர்க்கில் எதிர்வரும் ஒகஸ்ட் 27 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 9 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (5)

டெக்கான் சார்ஜஸ் கொடுப்பனவுகளை வழங்குக

இந்தியன் பிறிமியர் லீக்கில் விளையாடும் டெக்கான் சார்ஜஸ் அணி அதன் வீரர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி முன்னர் வீரர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குமாறு டெக்கான் சார்ஜஸ் அணி உரிமையாளர்களுக்கு ஐ.பி.எல் நிர்வாகப் பேரவை அறிவித்துள்ளது. கடுமையான நடவடிக்கையை தவிர்ப்பதற்கு வங்கிகளுடான நிதி பிரச்சினைகளையும் டெக்கான் சார்ஜஸ் அணி நிர்வாகம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.(5)

அடிப்படை உடல் பரிசோதனை.

கிரமமான உடல் பரிசோதனைகள்
பாரிய நோய்களை முற்கூட்டியே
இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.

*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes
Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & Lava Hospitals

Member of Lava Holdings Pvt Ltd
Reg No:PV74170
கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com

ராவல்பிண்டி எக்ஸ்பிறஸ் பயிற்சியளிக்கத் தயார்

பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான சொய்ப் அக்தர், பாகிஸ்தான் தேசியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராகச் செயற்படத் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி தற்போது பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளர் ஒருவரின்றிக் காணப்படும் நிலையில் சிறந்த பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளர் ஒருவரைக் கண்டுபிடிக்குமாறு 3 பேர் கொண்ட செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே சொய்ப் அக்தர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராகச் செயற்படத் தான் தயாராக உள்ளதாக தெரிவித்த சொய்ப் அக்தர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தன்னைத் தொடர்பு கொள்ளுமாயின் தான் தனது சேவையை தான் நாட்டுக்கு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தன்னுடைய நாட்டுக்காகச் சேவை செய்வது பெருமையானது என்று தெரிவித்த சொய்ப் அக்தர், இளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உதவுதன் மூலம் அந்தச் சேவையை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார். தனது நாடு தனக்கு வழங்கியவற்றிற்கு நன்றிக் கடனாகச் செயற்பட பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளர் பதவி தனக்கு உதவும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சார்பாக 46 டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய சொய்ப் அக்தர் 178 டெஸ்ட் இலக்குகளையும், 163 ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் பங்குபற்றி அவர் 247 இலக்குகளையும், 15 'ரி-20' சர்வதேசப் போட்டியில் பங்குபற்றி 19 இலக்குகளையும் அவர் கைப்பற்றியுள்ளார். (5)

புதிய பிரிவுகள், கணனி மையம் கல்வியங்காட்டில்
Per Course 1000 Rs Discount

9 Diploma Course fee Free
ஆறுமாதங்கள் இரண்டு வருடங்கள் பூரண அறிவிற்காக உத்தரவாதம்.
*Ms office *Hardware *Networking *DTP *Accounting *Multimedia *Web Design *English *Singalam

Kids Course
4 வயது தொடங்கி 10 வயது வரையுள்ள அறிவுத்திறனை வெளிக்கொண்டுவரும் வகையில் கல்வி மட்டுமல்லாது பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் வகுப்புகள்

Network Engineering-USA
MCSE,MCP,MCTS,MCITP
Authorized Training Partner
& Testing Centre in JAFFNA
>கணனிப் பொறியியலாளர் கற்கைநெறி.
>Microsoft-USA வழங்கும் சான்றிதழ்.
>வருமானம் கூடிய வேலை வாய்ப்புக்கள்
>இலங்கை அரசாங்கம் வழங்கும் 60$ Scholarship
ICTA ஊடாக Exam Free $5

243,Adiyapatham Road
Facebook : MCAI CAMPUS
Qualified Lecturers panel, 12 Years Experience
மேலதிக விபரங்களுக்கு
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society

விரிவுரைகள் ஆரம்பம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான 1ம், 2ம், 3ம், கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் 19 ஞாயிறு காலை 8 மணிக்கு இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். 2012 உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை மேலதிகமாக பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், BIT கற்கை நெறி. தொ.பே.772395895

மரண அறிவித்தல்

சரவணமுத்து சுப்பிரமணியம்

(கெமிக்கல் மணியம் - முன்னாள் உத்தியோகத்தர் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

விடத்தற் பளையைச் சேர்ந்த சரவணமுத்து சுப்பிரமணியம் நேற்று (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதிக் கிரியைகளுக்காக மு.பகல் 11 மணிக்கு விடத்தற்பளை சம்பா வெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
(சு.கணேசதாஸ்-மகன்)

விடத்தற்பளை, பிருகுவில். (21919)(9.14)

PHYSICS

* A/L. - 2013 - * A/L. 2014 வகுப்புக்கள் நடைபெறுகின்றன விரைவில் வினாவிடை வகுப்பு ஆரம்பிக்கப் படும் Personal Class, Group Class ஆகவும் கற்கலாம்.

Mr. M. ஸ்பெல்மன் (B.Sc)
18 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்
(21835)(9-8) (பெரிய கோயில் அருகில்)

காணி விற்பனைக்கு

கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் (கிழக்கு) சேர்ச் லேனில்100m அருகில் வளங்களுடன் கூடிய 2½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
உரிமையாளர்- 0785675241
0787402347

யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Hardware and Software Repairing)
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் மிகக்குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி!!!
குறிப்பு:- இக் கற்கை நெறியை நீங்கள் கற்பதன் மூலம் ஒரு போன்செப் ஒன்றை சுயமாக ஆரம்பிக்க முடியும்.
(21868) By :- Selvathashan, M.Sc in ICT
மேலதிக விபரங்களுக்கு :-
UNI - ICT CAMPUS (PVT) LTD
No:83,Palaly Road, Kantharmadam,Jaffna
T.P :- 021 321 6433 / 0777 110 862

45 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 08 ★ 04 ★ 1957

மறைவு 05 ★ 07 ★ 2012

அமரர் தர்மலிங்கம் கனகலிங்கம்

(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி, சுன்னாகம்)

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கணேசா வாசா
லைமன் லேன், லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்

குடும்பத்தினர்
தயாளன் (மகன்)
சம்பத் வங்கி சுன்னாகம்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

Batch I: 18-08-2012	Batch II:19-08-2012	Batch III 20-08-2012
09.00 - 12.00	03.00 - 5.00	09.00 - 12.00

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
2 Months

IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சீயாக்க செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074

தேவை

யாழ்.நகரிலுள்ள அலுவலகம் ஒன்றிற்கு (பீயோன்) பெண் சிற்றூழியர் தேவை. க/பொ/த சா/ தர சித்தியுடன், யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும். கடமை நேரம் 8.30 - பி.ப 4.30 வரை சனி, ஞாயிறு விடுமுறை.

0778418344

கணினி மலிவு விற்பனை

HP DUAL CORE Full Set
(LCD Monitor)

அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும்
Free: Web Cam/ 4GB Pendrive
ஒரு வருட உத்தரவாதம் 28,750/=

St.Antony's.com
187, K.K.S. Road Jaffna.
222 4865/ 0750698608
(சத்திர சந்திக்கு அருகில்)
Digital Camara, Computer Repair

இன்று மட்டும் அதிரடி விலை

மங்களா காட்சியறையின் நல்லூர் உற்சவ பணிமனையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில் வீட்டுத்தளபாடங்கள் 20% - 40% விசேட விலைக் குறைப்பு உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்.

Mangala
நல்லூர் உற்சவகால பணிமனை
சந்தியா மல்ரி கோட்பாட் எதிரில்
பருத்தித்துறை வீதி.

காசு இல்லையே என்று கவலையை விடுங்கள். சிறிய முற்பணத்துடன் உங்களுக்கு தேவையானவற்றை பதிவு செய்து கொள்ளுங்கள். மேலதிக விவரங்களுக்கு மங்களா உற்சவகால பணிமனையை நாடுங்கள்.

(ச/8505)(3.6.7) மங்களா காட்சியறை

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தேச பக்தி இல்லாதவனுக்கு வேறு எதிலும் பக்தி இருக்க முடியாது.
-பைரன்-

வார வசந்தம்

01

உதயன் 18 ஒகஸ்ட் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

புலக் காட்சியும் நிறுவன முகாமையும்



■ நடேசு தயாளன்

புலக்காட்சி என்பது ஒருவரது ஆளுமையுடன் தொடர்புடையது. ஒவ்வொருவரும் நிகழ்வுகளையும் பொருள்களையும் நோக்கும் விதம் வேறுபாடுடையது. குறித்த நிகழ்வு தொடர்பான அபிப்பிராயம் இலக்குகளானது ஆளுக்காள் வேறுபாடுடையது. இதன் காரணமாகவே புலக் காட்சியானது முக்கியத்துவமுடையதாகவுள்ளது. இதுவோர் உளவியல் காரணிகளாகவுள்ளதோடு மனித நடத்தையிலும் தாக்கம் விளைவிப்பதாய் உள்ளது.

வெளிச் சூழலில் இருந்து கிடைக்கப் பெறும் தகவலின் அடிப்படையில் இடம் பெறும் தொடர் செயற்பாடாக இது விளங்குவதோடு பெறப்படுகின்ற தகவல்களானது பெற்று ஒழுங்கமைக்கப்படுவதோடு கருத்துள்ள செயற்பாடாக எமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. இந்த அர்த்தமுள்ள தகவல்களானது தீர்மானங்களை தருவதோடு செயலுருவாக்கத்துக்கும் உதவுகின்றது. தனது சூழ்நிலைமைகள் தொடர்பான புலனுணர்வும் அது தொடர்பிலான வியாக்கியானமும் வழங்குவதான செயலொழுங்குமே புலக்காட்சியாகவுள்ளது இன்றி எந்த வித நடத்தையும் இடம்பெறுவதில்லை.

புலக்காட்சியின் இயல்புகளாவன

1.சிக்கார்ந்த செயலொழுங்கு. ஏனெனில் ஒரு செயலொழுங்கினை பலர் நோக்குகின்ற போதிலும் காண்பதில் வேறுபாடு நிலவுகின்றது.

2.இதுவோர் உளச் செயற்பாடாகும். இதன் காரணமாகவே உயர்வுகள், செயற்பாடுகள், அசைவுகள், வடிவங்கள் எல்லாம் குறிப்பிடத்தக்கனவாயுள்ளன.

புலக்காட்சி பற்றிய தெளிவு இருப்பதனூடாக மக்களுடைய தேவைகளை இனங்காண முடியும். ஏனெனில் மக்களுடைய புலக்காட்சியானது அவர்களுடைய தேவைகளில் செல்வாக்குச் செலுத்துவதாயுள்ளது. புலக்காட்சி பற்றிய தெளிவினைப் பெற்றுக் கொள்வதன் ஊடாகவே மனித நடத்தைக் கோலங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

புலக்காட்சி தொடர்பான செயலொழுங்கானது பின்வருமாறு அமைந்து காணப்படும்.

1.பெற்றுக் கொள்ளல்
2.தேர்ந்தெடுத்தல்
3.ஒழுங்கமைத்தல்
4.வியாக்கியானங் கூறல்
5.பரிசோதித்தலும் மீள் செயற்படுத்தலுக்குத் தூண்டுதலும்

சுற்றாடலில் தூண்டுதலானது தொடர்ச்சியான போராட்டமாக அமைவதற்கு தகவல்கள், இலக்குகள், செயற்பாடுகள், மனிதர்கள் போன்ற அம்சங்கள் செல்வாக்குச் செலுத்துவதாயுள்ளன. புலக்காட்சிக்கான உள்ளீடாக பொருள்கள், செயல்கள், மக்கள் என்பன அமைந்து காணப்படுகின்றன.

புலக்காட்சி தொடர்பான உள்ளகக் காரணிகளாக கற்றல், ஊக்குவிப்பு, ஆளுமை, இயல்பு, உணர்திறன் எல்லை, நுண்ணறிவு, இயலுமை, முன் அனுபவம் எதிர்பார்க்கைகள், ஆர்வ நிலை என்பன விளங்குகின்றன.

புலக்காட்சி தொடர்பான புறக் காரணிகளாக அளவு (பெரிது, சிறிது, உயரம், கட்டை), செயற்பாடுகள் இயற்கை, திரும்பச் செய்தல், கூறியது கூறல், அந்தஸ்து நிலை, தீவிரத் தன்மை என்பன செல்வாக்குச் செலுத்துவதாயுள்ளன.

தனியாள் ஒருவரைப் பொறுத்தவரையில் செயல் அல்லது இலக்கு அல்லது நபர் செயற்படும் தளம் என்பன தொடர்பிலான பின்னணி நிலவரம் புலக்காட்சி பெறுவர் தொடர்பில் தாக்கம் செலுத்துவதாயுள்ளது. தெளிவு செய்தல் தொடர்பான உணர்வும் தகவல்களை ஒழுங்கமைத்தல் தொடர்பான உணர்வும் வியாக்கியானத்துக்குட்பட வேண்டியதாகும். புலன்களுக்குக் காட்சிக்குள்ளான விடயம் வியாக்கியானத்துக்குட்படல் புலக்காட்சியின் ஒரு பகுதியாகும். இவை மனிதர்கள் முடிவுக்கு அல்லது தீர்வுக்கு வருவதற்குத் துணையாகின்றன.

புலக்காட்சியைப் பெறுபவரைப் பொறுத்தவரையில் தேவையும் ஊக்கமும் முன் அனுபவங்கள், நிகழ்கால உளவியல்,சூழல் நம்பிக்கைகள், எதிர்பார்க்கைகள், நிலைமைகள் மனப்பாங்குகள் என்பன தாக்கம் செலுத்துவதாய் இருக்கும். புலக்காட்சி பெற்றவரின் தோற்றம் பால் தொடர்பாடல் திறன் நடத்தைப் பாங்கு என்பனவும் கூடிய தாக்கமுடையதாய் இருக்கும். புலக்காட்சியில் தாக்கத்தினை உண்டு பண்ணக்கூடிய ஏனைய விடயங்களாக பௌதிக சமூக ஒழுங்கமைப்பு, மேலதிகாரி அலுவலகத்திலுள்ள நிலை நம்பகத் தன்மை என்பன விளங்குகின்றன. உள்ளக வெளியக காரணிகளானது தெரிவுசெய்யப்பட்ட புலக்காட்சிகளின் மீது செல்வாக்குச் செலுத்துவதாக இருக்கும்.

நிறுவனங்களில் புலக்காட்சி என்ற விடயத்தினை நோக்கின் நிறுவனத்திலுள்ளோர் ஒருவர் இன்னொருவரை மதிப்பிடுபவர்களாகவே உள்ளனர். முகாமையாளர்களானவர்கள் தமது சகபாடிகளது செயற்பாடுகளை மதிப்பீடு செய்ய வேண்டும். அவர்கள் எவ்வாறு வேலை செய்கின்றார்கள் என்பதனை நோக்குவதற்காக இது அவசியமாகும். ஓர் புதிய நபர் நிறுவனத்துள் நுழையும் போது அவர் ஏனையவர்கள் தொடர்பாக மதிப்பீடு செய்தலவசியமாகும். புலக்காட்சிக்குத் தயாரற்ற நிலையானது வினைத்திறனான தொடர்பாடற் செயற்பாட்டுக்கு தடைகளைத் தோற்றுவிப்பதாகவே அமையும் .

புலக்காட்சிச் செயலொழுங்கின் செயலாற்றுகையானது முக்கியத்துவமுடையதாகும். ஊழியரது எதிர்காலமானது செயலாற்றுகையின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது. ஊழியரது தரங்கணிப்புத் தொடர்பான செயற்பாடானது புலக்காட்சியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். ஊழியர்களது எதிர்காலமானது அவரது தரணங்கணிப்புடன் நெருங்கிய தொடர்புடையது. ஊதிய ஏற்றம்,பதவி உயர்வு, பதவியில் தொடர்தல் என்பவற்றுடன் தரங்கணிப்பானது நெருங்கிய தொடர்புடையது. ஒரு ஊழியர் சிறப்பானவர் சிறப்பற்றவர் என்பது தொடர்பான வெளிப்படுத்துகையும் புலக்காட்சியின் வெளிப்படுத்துகையாகவே இருக்கும்.

ஊழியரிடல் தொடர்பான நேர்முகப் பரீட்சை ஒன்றின் போது புலக்காட்சியினூடான தனது மனப்பதிவுகளூடாகவே நேர்முகப் பரீட்சையாளர்கள் தமது நேர்முகப் பரீட்சையினை முன்னெடுக்கின்றனர். வேறுபட்ட நேர்முகப் பரீட்சையாளர் வேறுபாடான மதிப்புகளை வழங்குவதோடு வேறுபட்ட முடிவுகளை வழங்குகின்றார்கள். வேலைவாய்ப்பு தொடர்பான நேர்முகப்பரீட்சையானது முக்கியமான உள்ளீடாகவும் அங்கு இடம்பெறும். தெரிவானது புலக்காட்சி செயலொழுங்காகவுமுள்ளது. அந்தப் புலக் காட்சியானது வேலைச் சக்தியின் எதிர்காலத் தரத்துக்கு உதவுவதாகவும் இருக்கும்.

புலக்காட்சியினூடாகப் பெறப்படும் பொதுவான மனப்பதிவானது அவரது மதிப்பீட்டாளரிடம் அவர் தொடர்பான செயலாற்றுகை தொடர்பில் நோக்கும் போது தாக்கம் செலுத்துவதாக இருக்கும்.

நிறுவனம் தொடர்பான புலக்காட்சி ஊழியர்கள் விடுமுறையினைப் பெறுவதிலும் செல்வாக்குச் செலுத்துவதாக இருக்கும்.

ஊழியர் வரவின்மையும் ஊழியரது நிறுவனம் தொடர்பான புலக்காட்சி ஒளிப்பானாகவும் அமைந்திருக்கும். இங்கு தனது வேலை முகாமைத்துவம் தொடர்பான நிலைகளை ஒவ்வொரு தனியாளும் எவ்வாறு தனது புலக்காட்சிக்கேற்ப விரிவுபடுத்துகின்றார்களோ அதற்கேற்றதாகவே லீவு பெறல் அமைந்திருக்கும். வேலை தொடர்பான திருப்தி ஊழியரிடம் ஏற்படுத்தப்படுவதில் புலக்காட்சி தொடர்பான நிலையும் முக்கியத்துவமுடையதாகும். இந்த நிலையில் நிறுவனம் தொடர்பான நேரான புலக்காட்சிகளை ஏற்படுத்துவதற்கு முகாமையாளர்கள் முனைய வேண்டும்.

நிறுவனம் தொடர்பான சிறந்த புலக்காட்சியை பெற்றுக்கொடுக்க வேண்டுமானால் முகாமையாளர்கள் ஊக்கல் செயலொழுங்கு தொடர்பில் கூடிய கவனமுடையவராக விளங்குதல வசியமாகும். இதற்காக ஊழியர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள் பயிற்சித் திட்டங்களைத் தயார்படுத்தல் மிக அவசியமாகும். இதனூடாக ஊழியர்கள் தமது வேலையில் ஈடுபாடு கொள்வதோடு தமது பொருளாதார நிலையிலும் மேன்மையடைய முடியும்.

நிறுவன முகாமையாளரான ஒவ்வொரு ஊழியரும் தொழில் தொடர்பான எத்தகைய எண்ணப்பாட்டினை கொண்டிருக்கிறார்கள் என்பது தொடர்பான விடயத்தில் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். நடைமுறை நிலைமைக்கும் தான் எதனை அவதானிக்கின்றார்கள் என்பதற்கும் இடையிலான தொடர்பினை நோக்க வேண்டியது அவசியமாகும். ஊழியரது வேலைத் திருப்தி தொடர்பிலும் முகாமையாளர்கள் நோக்குதல் அவசியமானதாகும். அவர்களுக்கான அனுகூலங்கள் தொடர்பில் அவர்களது மனப்பாங்கு நடத்தை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். வேலைத் திருப்தி ஊழியரிடம் ஏற்படுமிடத்து நிறுவனத்தினது செயற்பாடானது நேர்த்தன்மையாக மாறும்.

நிறுவன முகாமையாளர்களானவர்கள் தமது சக ஊழியர்களது புலக்காட்சி பற்றிய பூரணமான புரிந்துணர்வு உடையவர்களாக இருப்பதன் மூலமே அவர்களுடன் ஆரோக்கியமான உறவுக் கோலத்தினைக் கட்டியெழுப்ப முடியும்.

எனவே நிறுவன முகாமையாளரானவர்கள் நிறுவனத்தினை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு புலக்காட்சி முகாமைத்துவம் தொடர்பான அறிவுடையவர்களாக விளங்குதல் அவசியமாகும்.

உங்கள் கைரேகைகளின் பலன்கள்

சூரிய ரேகை அல்லது அதிர்ஷ்ட ரேகை (தொடர்ச்சி)

1.மணிக்கட்டுக்கு மேலேயிருந்து சூரியரேகை உற்பத்தியாகி நேரே சூரிய மேட்டுக்குச் சென்றிருந்தால், படிப்படியாய் ஏற்படும் மிகுந்த சாமர்த்தியத்தையும் கம்பீரத்தையும் குறிக்கும். இதனால் அநேக நன்மைகளை அடைவர். சூரிய ரேகை மணிக்கட்டிற்கு மேல் உற்பத்தியாகி புத்தி ரேகைக்குக் கீழே நின்று விடுமாயின் சாமர்த்தியமிருந்தும் பலனிராது.

2.சூரியரேகை புத்திரேகைக்கு அடியில் உற்பத்தியாகி இருதய ரேகையைக் குறுக்கிட்டிருந்தால், அந்தக் கால அளவிலுள்ள கஷ்டங்களை நீக்கி மிக்க உதவி புரிவதாகும்.

3.சூரியரேகை இருதயரேகைக்கு மேல் சூரிய மேட்டிலிருக்குமாயின் செல்வாக்கு, செல்வம், புகழ் முதலியன உண்டாகும். விதிரேகையும் சூரியரேகையும் சரியொத்து தனித்தனியே அந்தந்த கிரகமேடுகளை நோக்கிச் செல்லுவதில் ஒன்றின் குற்றங்குறைகளை அடுத்துள்ள மற்றரேகை சீர்திருத்திக்கொள்ளும்.

4.விதிரேகை அமையாதவிடத்து சூரியரேகை மாத்திரம் இருந்தால், முயற்சி இல்லாமலே சாமர்த்தியத்தால் வாழ்க்கை நடைபெறும். சூரியரேகை சிறிது காலம் தோன்றிப் பிறகு மறைந்து இடைவெளியாய் மீண்டும் சென்றிருகுமாயின், விட்டுப் போன கால அளவில் சாமர்த்தியம் அடங்கியிருப்பதாகவே கருதவேண்டும்.

5.சூரியரேகை ஆயுள்ரேகையிலிருந்து சந்தர்ப்பரேகையைப் போல் உற்பத்தியாகி கிரமமாய் சூரிய மேட்டுக்குச் சென்றிருந்தால், நல்ல அதிர்ஷ்டத்தைக் குறிக்கும். சூரிய ஆதிக்கருக்குள்ள விசேட குணங்களும் பலன்களும் வாழ்வில் கலந்து தோன்றும். ஆயுள் ரேகையின் கிளை சூரியமேட்டை நோக்கிச் செல்வதைப் பொதுவாய்ச் சந்தர்ப்பரேகையெனச் சொல்வோம்.

6.இந்தப் படத்தில் சூரியரேகை போன்ற விதிரேகையின் கிளை, சூரிய மேட்டை நோக்கிச் சென்றிருப்பதைக் காண்க. இது அதிர்ஷ்டரேகையன்று. சந்தர்ப்பரேகையேயாம். என்றாலும் வாழ்க்கையில் நல்ல லாபமுண்டாகும்.

7.சந்திர மேட்டிலிருந்து சூரியரேகை உற்பத்தியாகி சூரியமேட்டுக்குச் சென்றிருந்தால், மொழி அபிமானத்தைக் குறிக்கும். சந்திரமேடு மனோராஜ்யத்தைக் குறிப்பதால் கற்பனை செய்து, கவியோ, கதையோ இயற்றும் வல்லமையுடையவராவர். விரல் முனைகள் கூராயும் மிருதுவாயும் இருந்தால் கவி பாடுவதிலும் படிப்பதிலும் இன்பமாய் காலம் கழிப்பர். விரல்கள் கோணியும், முடிப்புமாயிருந்தால் நூல்கள் முதலியன எழுதி வெளியிடுவர்.

சூரியரேகை, புத்தி இருதய ரேகைகளுக்கு மத்தியில் அதாவது மேல் செவ்வாய் மேட்டிலிருந்து உற்பத்தியானால் மிக்க அடக்கமுடையவராய் எதிலும் கலவாமல் நெருங்கி வருவோரைத் தடுத்தும், தன் காரியத்தில் கண்ணாயிருந்தும் வெற்றியும் கீர்த்தியும் பெறுவர்.

சூரியரேகை கிரமமாய் உற்பத்தியாகி அதன் எல்லை வழியே சூரியமேட்டையடைந்தால், அதற்குரிய சகல பலன்களையும் அடைவர் என்று கூறத் தகும். இந்த ரேகை உற்பத்தியிலும் எல்லையிலும் மாறுதல் ஏற்படும் போது சிறிய குற்றமுள்ளதாகிறது. இதில் சந்தர்ப்பரேகைகள் அப்போதைக்கப்போது தோன்றும் போது சந்திரமேட்டை அனுசரித்தே பலனை அறியவேண்டும். சந்திர சூரிய மேடுகளைக் கைக்கொள்ளாதவைகளைச் சந்தர்ப்ப ரேகையாகவே கருதவேண்டும்.

8.சூரியரேகை மனம் அழுந்தி நிற்கும் சக்தியைக் குறிக்கிறது. எல்லா மேன்மையான குணங்களும், வெற்றி, புகழ், கீர்த்தி முதலியவைகளுமுண்டு. எதையும் உற்பத்தி செய்யக்கூடிய வல்லமையைக் கொடுக்கும். மிக்க அன்புடையவராய் ஓவியத்தில் தலை சிறந்து நிற்பர். இதர கிரக ஆதரவில் பல துறைகளிலும் நிபுணராயிருப்பர். பொருள் சேகரிப்பதில் கருத்துடையவராயிருப்பர். ஆசிரியராயிருப்பர். பதிப்பாளருமாவர்.கலைகளை ஆராய்ந்து விஞ்ஞானம் பேசுவர். *(தொடரும்)*

குடும்ப வாழ்க்கை பலவீனமடைகிறதா?

> திருமணத்திற்குப் பிறகு கணவனை மாற்றிவிடலாம் என்று மனைவியும், மனைவியை மாற்றி விடலாம் என்று கணவனும் கருதிக் கொள்வது ஒரு தவறான அணுகுமுறையாகும். மனித குணங்களில் சிலவற்றை மாற்றிவிட முடியும், ஆனால் இயல்பை எவரும் மாற்றிவிடமுடியாது.

■ **களஞ்சியன்**

மண வாழ்க்கை துன்பத்தை மட்டுமே தரும் குடும்பங்களுக்கு விவாகரத்து ஒரு நோய் நிவாரணி என்று எழும் கோஷங்களை ஐரிஸ் மருத்துவர் டொனாச்சா ஓ ஹோதா கடுமையாக எதிர்க்கிறார். நோயை விடக் கொடுமையான தீர்வு தான் நோய் நிவாரணியா ? என்று அவர் எதிர்க்கேள்வி விடுக்கிறார்.

அலுவலகங்களின் சுமையை குடும்பங்களுக்குத் தூக்கிச் செல்வதும், அலுவலக அழுத்தங்களை குடும்பத்திலுள்ளவர்கள் மீது காட்டுவதும்கூட உறவு விரிசலுக்குக் காரணமாகி விடுகின்றன. குடும்பம் என்பது சோகங்களை அடுக்கி வைக்கும் சரக்கு அறையோ, எரிச்சல்களை எறிந்து விளையாடும் இடமோ அல்ல.

குடும்பம், அலுவலக அழுத்தத்தைக் குறைக்க வேண்டுமே தவிர அலுவலக அழுத்தம் குடும்பத்தைச் சிதைக்கக் கூடாது. இன்றைக்கு மென்பொருள் துறையினரிடையே அதிகரித்து வரும் மணமுறிவுகளுக்கு இதுவே பிரதான காரணம்.

ஜாதகப் பொருத்தம், சாதிப் பொருத்தம் பார்க்கும் நமது திருமணங்கள் பெரும்பாலும் தம்பதியரின் இயல்புகளைப் பார்ப்பதில்லை. திருமணத்திற்குப் பிறகு கணவனை மாற்றி விடலாம் என்று மனைவியும், மனைவியை மாற்றிவிடலாம் என்று கணவனும் கருதிக் கொள்வது ஒரு தவறான அணுகுமுறையாகும்.

மனித குணங்களில் சிலவற்றை மாற்றிவிட முடியும், ஆனால் இயல்பை எவரும் மாற்றி விட முடியாது.

மணமுறிவு என்பது மிகவும் அரிதாக இருந்த காலம் மலையேறிவிட்டது. பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆயிரம் பேருக்கு ஐந்து முதல் ஏழுவரை இருந்த இந்த மணமுறிவு, இன்று பல மடங்கு உயர்ந்திருக்கிறது.

மணமுறிவு நிகழ்வதில் ஸ்வீடன் நாடு முதலிடத்தைப் பிடிக்கிறது. இங்கு சுமார் அறுபத்து நான்கு சதவீதம் திருமணங்கள் மணமுறிவில் முடிகின்றன. பெலாரஸ் மற்றும் உக்ரைன் நாடுகளும் ஏறக்குறைய அதே இடத்தில் இருக்கின்றன.

பின்லாந்தில் சுமார் 56வீத திருமணங்களும், அமெரிக்காவில் சுமார் 53வீத திருமணங்களும், கனடாவில் 45வீத திருமணங்களும், பிரான்ஸ் நாட்டில் சுமார் 43வீத திருமணங்களும், சிங்கப்பூரில் சுமார் 10வீத திருமணங்களும், ஜப்பானில் சுமார் 27வீத திருமணங்களும் மணமுறிவில் போய் முடிகின்றன.

அமெரிக்க திருமணங்கள் 5 முதல் 8 ஆண்டுகள் வரை மட்டுமே சுமுகமாக செல்கின்றன. அமெரிக்காவில் மணமுறிவு அதிகமாக இருப்பதைப் போல மறுமணமும் அதிகமாகவே இருக்கிறது.

மணமுறிவு செய்பவர்களில் சுமார் 80 வீதத்தினர் மறுமணம் செய்து கொள்கிறார்கள். முக்கால் வாசி மணமுறிவு வழக்குகளில் பெண்களே விண்ணப்பிக்கிறார்கள் என்கிறது சமீபத்தில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று.

[தொடரும்]



மோனியா!!

மகாத்மா காந்தி குட்டிப்பிள்ளையாக இருக்கும் போது, விளையாடுவதில் பிரியம் அதிகம். எனவே, அவர் தன்னுடைய சகோதரர்களுடன் சேர்ந்து விளையாடுவார். காந்திஜியை அவருடைய பெற்றோர் ''மோனியா'' என்று செல்லமாக அழைப்பர்.

காந்திஜி தன் சகோதரர்களுடன் சிறு குழந்தைகள் விளையாடும் சாதாரண விளையாட்டுக்களான ஓடிப் பிடித்து விளையாடுதல், ஒளிந்திருந்து விளையாடுதல், மரத்தில் ஏறி விளையாடுதல் ஆகிய விளையாட்டுக்களையே பெரும்பாலும் விளையாடுவார். அவர் அப்படிச் செய்யும்போது, மிகவும் உற்சாகமாகக் காணப்படுவார். அவர் சகோதரர்களுக்கும் காந்தி வந்துவிட்டாலே உற்சாகம்தான். ஏனென்றால், காந்தி சோனியாக இருந்தார். எனவே, அவரைக் கீழே தள்ளிவிடுவதும், அடித்து விளையாடுவதும், அவரை அழச் செய்வதிலும் பிரியம் அதிகம். விளையாட்டு என்றால் எல்லாமும்தான் இருக்கும் என்று காந்திஜி கருதியதால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை.

ஒரு நாள் காந்திஜி விளையாடும் போது மரம் ஒன்றில் ஏறிக் கொண்டார். அவரைத் தேடி வந்த சகோதரன், அவர் ஒளிந்து கொண்டிருந்த இடத்தைக் கண்டுபிடித்தவுடன் உற்சாகத்துடன், ''இதோ மோனியா, அவனைக் கண்டுபிடித்துவிட்டேன் அவன் அவுட்!'' என்று கூறிக் கொண்டே காந்திஜியின் கையைப் பிடித்து இழுத்துக் கீழே போட்டுவிட்டார். உடனே மற்றவர்கள், ''மோனியா அவுட்டாகி விட்டானா, எப்போதும் இந்தப் பயல்தான் முதலில் அவுட்டாவான்,'' என்று கூறியவாறே நாலு மொக்கு மொக்கிவிட்டு, எங்களைக் கண்டுபிடிடா பார்க்கலாம், என்று ஓடி ஒளிந்தனர்.

அன்று காந்திஜிக்கு மரத்திலிருந்து கீழே விழுந்ததால், உடலெல்லாம் நல்ல அடி. அத்துடன் மற்றவர்கள் உதைத்து விட்டுச் சென்ற உதைகளும் சேர்ந்து கொள்ள வலியினால் துடித்தார். அவர் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. மோனியா, ஆட்டத்துக்கு வருகிறாயா இல்லையா என்று குரல் கொடுத்தனர் மற்ற சிறுவர்கள். ஒருவாறு வலியை சமாளித்துக் கொண்டு மீண்டும் ஆட்டத்தைத் தொடர்ந்தார். இப்படி ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல காந்திஜி விளையாடும் நாளில் எல்லாம் நிகழ்ந்தது.

இப்படி இவர்கள் நம்மைத் தள்ளிவிட்டார்களே! அடித்து உதைத்து விட்டார்களே! பதிலுக்கு நாமும் ஒரு நாள் இவர்களை இப்படிச் செய்ய வேண்டும்! வலி என்றால் என்ன என்று உணரச் செய்ய வேண்டும் என்றெல்லாம் பழி உணர்ச்சி காந்திஜியிடம் இல்லை. எப்போதுமே காந்திஜி அடிபடுபவராக இருப்பாரே தவிர, அடி கொடுப்பவராக இருக்கமாட்டார். அம்மாதிரி வாய்ப்பு வந்தால்கூட அவர் அவர்களை அடிக்கமாட்டார். மனம் நோக பேசமாட்டார்.

ஆனால், எல்லாவற்றையும் தன் அன்னையிடம் சென்று ஒன்றுவிடாமல் கூறி வருந்துவார். ''என் சகோதரர்கள் வேண்டுமென்றே இப்படிச் செய்கின்றனர்'' என்று கூறுவார். இதைக் கேட்ட அத்தாயுள்ளம் பரிதவிக்கும்.

''இச்சிறுவன் ஏன் இப்படி இருக்கிறான். எல்லாக் குழந்தைகளும் தம்மை அடித்தவனைத் திருப்பத் தாக்கிவிட்டு, தம் அன்னையிடம் சென்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி அத்தாய்க்கும், அடிபட்டவனுடைய தாய்க்கும் பெரும் சண்டையை மூட்டி விட்டுவிடும். இவனோ, இதுவொன்றும் செய்யாமல் மண்ணாக அங்கே நின்றுவிட்டு, தன்னிடம் வந்து புகார் கூறுகின்றானே'' என்று ஆதங்கப்பட்டாள்.

பின்னர் மகனை அழைத்து, ''மகனே மோனியா! நீ சாதுவாக இருப்பதால்தான் அவர்கள் உன்னை அடிக்கிறார்கள்! யார் உன்னை அடித்தது அண்ணன்தானே! அவன் உன்னை விட ஒன்றிரண்டு வயதுதானே மூத்தவன். அவனை உன்னால் அடிக்க முடியாதா? உன் அண்ணன் அனாவசியமாக உன்னை அடித்தான் என்றால், நீயும் அவனைத் திருப்பியடிக்க வேண்டியதுதானே! என்னிடம் வந்து சொல்லுவதை விட நீயே உங்கள் விளையாட்டில் இப்படிச் செய்து கொள்வதுதானே நியாயம்!'' என்று கூறினார்.

''அம்மா, அவன்தான் பெரியவன். என்னை அடித்து விட்டான். அவன் அடித்துவிட்டான் என்ற உண்மையைச் சொன்னதற்கு காரணம் என்னவென்றால், உடம்பிலே ஏது இந்தக் காயம் என்று நீ கேட்டாய் அதற்காக சொன்னேன். அண்ணன் என்னை அடித்து விட்டான் என்று நான் உன்னிடம் கூறினால், நீ அவனை ஏன் நான் அடிக்கவில்லை என்று கேட்கிறாய். நீயே எனக்குப் பிறரை அடி என்று கற்றுக் கொடுக்கலாமா? அவன் என்னை விட வயதில் பெரியவன். ஆகவே அடித்தான். நான் அவனை விட இளையவன். அடி வாங்கினேன். அவ்வளவுதான். என் அண்ணனை நான் ஏன் அடிக்க வேண்டும் என்று சொல்கிறாய்?'' என்று திருப்பிக் கேள்வி கேட்டார்.

''மோனியா, மோனியா, நீங்கள் இருவரும் சகோதரர்கள். அதிலும் சிறுவர்கள். எனவே, நீங்கள் அடித்துக் கொள்வதில் ஒன்றும் தவறு இல்லையே,'' என்று அம்மா கூறினார்.

''அம்மா, அண்ணன் என்னைவிட வயதில் மூத்தவன். ஆகையினால் அவன் என்னை அடித்தால் தவறு இல்லை. ஆனால், நான் அவன் தம்பி, நான் திருப்பி அடிக்கக் கூடாது. அது தவறு. நீ நியாயமாக என்ன சொல்ல வேண்டும்?

நீ என்னிடம் திருப்பி அடி என்று சொல்வதற்குப் பதிலாக, அண்ணனை அழைத்து இனிமேல் தம்பியை அடிக்கக் கூடாது என்று சொல்லக் கூடாதா?'' என்று கேட்டார். இதைக் கேட்ட காந்திஜியின் அன்னை அவருடைய சாத்வீக குணத்தை கண்டு பெருமையடைந்தார்.

நண்பர்கள்

★ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் நல்வழி காட்டுவதற்கும் சிறந்த நண்பர்களின் நட்பு மிக மிக அவசியமானதாகும்.

★நீங்கள் நண்பர்களை கவனத்துடன் தேர்வு செய்ய வேண்டும். நண்பனாக ஏற்றுக் கொண்ட பிறகு அவன் மீது சந்தேகப்படுதல் சிறந்த பண்பாகாது.

★மனிதர்களை சாதி, மத வேறுபாடு இன்றி அன்பு கொண்டு அணைத்து, ஆதரித்து, இதயத்தால் ஒன்றுபடுத்துவதே நட்பு ஆகும்.

★சிறந்த நட்பு என்பது இரும்பு மனதைக்கூட மெழுகுபோல் மென்மையானதாக மாற்றி விடும். சாதிக்கவே இயலாத காரியத்தை விட நல்ல நண்பனின் உதவியால் நீங்கள் தடைகளைப் பொடியாக்கி சாதிக்க முடியும்.

★அன்பாகப் பேசி நண்பர்களாக நடிப்பவர்களுடன் நீங்கள் அறியாமல் நட்புக்கொண்டால் அது படமெடுத்தாடும் பாம்புடன் பழகுவதுபோல் ஆகிவிடும்.

★நாம் நண்பன் என்று பழகியும் அவன் எம்முடன் நட்புகொள்ளாவிட்டால் அது பொய்யான நட்பு ஆகும்.

அரசகேசரி. ஆர்த்திகா
தரம் 11
யா/கனகரட்ணம் ம.ம.வி.

தமிழ் மொழி

நம் மொழி முன் மொழி
முதன்மை மொழி
அம் மொழி நல் மொழி
தொன் மொழி
கல்தோன்றி மண் தோன்றா
முன் வந்த தென் மொழி
உச்சரிக்கும் போதே
நாவினிக்கும் தேன் மொழி
இம் மொழி செம் மொழி
செந்தமிழ் மொழி

இ.இந்துசாந்
யாழ்.மத்திய கல்லூரி

யானை

யானை யானை
அழகர் யானை

அழகரும் சொக்கரும்
ஏறும் யானை

கட்டிக்கரும்பை
முறிக்கும் யானை

குளத்துத் தண்ணீரை
கலக்கும் யானை

குட்டி யானைக்குக்
கொம்பு முளைச்சுதாம்

பட்டணமெல்லாம்
பறந்தோடிப் போச்சுதாம்!

ஔவையாரின் ஆத்திசூடி

★அறம் செய விரும்பு– நீ தருமத்தை [கடமையைச்] செய்ய ஆவல் கொள்.
★ஆறுவது சினம்– கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.
★இயல்வது கரவேல்– உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்கு ஒளிக்காது கொடு.
★ஈவது விலக்கேல்– ஒருவர், மற்றவர்க்கு கொடுப்பதை வேண்டாமென்று தடுக்காதே
★உடையது விளம்பேல்– உன்னிடத்திலுள்ள பொருளை அல்லது இரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.
★ஊக்கமது கைவிடேல்– எப்போதும் முயற்சியைக் கைவிடக்கூடாது.
★எண் எழுத்து இகழேல்– கணித, இலக்கண நூல்களைத் தினமும் தவறாமல் நன்கு கற்க வேண்டும்.
★ஏற்பது இகழ்ச்சி– இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக் கூடாது.
★ஐயம் இட்டு உண்– யாசிப்பவர்கட்கு பிச்சையிட்டுப் பிறகு உண்ண வேண்டும்.
★ஒப்புரவு ஒழுகு– உலக நடையை அறிந்துகொண்டு, அத்தோடு பொருந்துமாறு நடந்துகொள்.
★ஓதுவது ஒழியேல்– நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக் கொண்டிரு.
★ஔவியம் பேசேல்– ஒருவரிடமும் பொறாமை கொண்டு பேசாதே.
★அஃகஞ் சுருக்கேல்– அதிக இலாபத்துக்காக, தானியங்களை குறைத்து அளந்து விற்காதே.

சிறுவர் பாடல்

மு. ரகுபாலன்

பூமியைப்போல தாய் வேண்டும்
தமிழைப் போல மொழி வேண்டும்
இயற்கை போல நண்பன் வேண்டும்
குயிலைப் போல பாடவேண்டும்
மயிலைப்போல ஆடவேண்டும்
குதிரையைப் போல ஓடவேண்டும்
மீனைப் போல நீந்த வேண்டும்
யானையைப் போல பலம்பெற வேண்டும்
டொல்பின் போல ஆபத்தில் உதவவேண்டும்
தேனீக்கள் போல சுறுசுறுப்பு வேண்டும்
எறும்பைப் போல சேமிக்க வேண்டும்
பசுவைப்போல பிறர் பசி போக்க வேண்டும்
நாயைப் போல நாட்டை காவல் செய்யவேண்டும்
மரத்தைப் போல நிழல் தரவேண்டும்
பறவைகள் போல சுதந்திரம் வேண்டும்
புறாக்களை போல சமாதானமாக வாழ வேண்டும்
கடவுளைப்போல உயிர்களிடம் அன்பு வேண்டும்

உலகில் விசேட பெயர்களால் அழைக்கப்படுபவை

★ நைல்நதியின் கொடை - எகிப்து
★ சீனாவின் துயரம் - குவாங்கோ நதி (மஞ்சள் நதி)
★ ஐரோப்பாவின் தொட்டில்/விளையாட்டு மைதானம் - சுவிற்சலாந்து
★ ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி
★ இருண்ட கண்டம் -ஆபிரிக்கா
★ உலகின் கூரை- திபெத்
★ ஆயிரம் ஏரிகளைக் கொண்ட நாடு- பின்லாந்து
★ ஆறுகள் இல்லாத நாடு- சவூதி அரேபியா
★ உலகின் சக்கரைக் கிண்ணம்- கியூபா
★ நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு - நோர்வே
★ சூரியன் உதிக்கும் நாடு - ஜப்பான்
★ யுத்தம் இல்லாத நாடு - சுவிற்சலாந்து
★ புனித பூமி - ஜெருசலேம்

ம. காவியா
தரம் 7
யா/வேம்படி உயர்தரப்பாட சாலை

புதிய பூகோளமும் அதன் சவால்களும் ஈழமும் தமிழகமும்

■ இந்திரன்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

தமிழகத்திலிருந்து கவிதை எழுதுபவர்கள் மட்டுமின்றி, புலம்பெயர்ந்து மிகவும் வசதியில் வாழும் கவிஞர்களும் கூட பரிசோதனைகளில் ஈடுபடத்தான் செய்கிறார்கள். இந்தப் பரிசோதனை என்பது எந்த அளவுக்கு அவர்களது தற்கால வாழ்க்கையின் பூகோளத்தை விசுவாசிக்கிறதோ, அந்த அளவுக்கு அந்தக் கவிதை சிறக்கிறது.

இந்த இடத்தில் முத்துலிங்கத்தின் கவிதைகளை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். முத்துலிங்கம் உலகில் மேலை நாடுகளில் மட்டுமின்றி பல்வேறு மூலை முடுக்கு நாடுகளிலும் கூட வாழ்ந்தவர் என்ற வகையில் அவரது கதைகளில் ஒரு பறவைப் பார்வை புவியியல் (Hybrid Geography) வந்துவிடுகிறது.

ஆனால் அக்கதைகளின் மொழி என்பது இன்றைக்கும் தமிழ் அடையாளத்தைத் துறந்தவை அல்ல. இந்த வகையில்தான் தமிழ்க் கவிதைகளில் பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறபோது, அவை அந்தப் படைப்பாளியின் பூகோளத்தையும், அந்தப் பூகோள வாழ்க்கையையும் அந்தரங்க சுத்தியுடன் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்.

இந்த இடத்தில்தான் தமிழகத்துக் கவிஞர்களைக் காட்டிலும் கூடுதலான சவால்களை ஈழத்துக் கவிஞர்கள் சந்திக்கிறார்கள். பிரான்ஸ் ஃபனான் தனது The Wretched of the Earth புத்தகத்தில் சொன்னது போன்று, தமிழ்க் கவிஞர்கள் தங்களது வாழ்க்கையில் புதிய பூகோளத்தைச் சந்திக்கிறபோது தங்களது சொந்தப் பண்பாட்டையும், மொழியையும் ஒரு மீள் கண்டுபிடிப்புக்கு உள்ளாக்க வேண்டிவருகிறது.

இத்தகைய சுமை ஜேர்மனிய, பிரெஞ்சு, டச்சு, ஆங்கிலக் கவிதைகளுக்கு இல்லை என்பதால் அவர்கள் வேறு பல புதிய விவரங்களைக் கவிதையில் கையாள முனைந்து நிற்கிறார்கள். இதனால் அக் கவிதைகள் புதிய பரிமாண விஸ்தீரணங்களைப் பெற்று விடுகின்றன.

பியர் பால்லோ பசோலினி என்கிற இத்தாலிய கவிஞரை எடுத்துக்கொண்டால், அவர் பாலியல் சிக்கல்களைத் தன் கவிதையின் கருப்பொருள்களாக்குகிறார். போர்த்துக்கீசிய பெண் கவிஞர் சோஃபியா டிமெல்லோ கிரேக்கப் பிராணிகளை மறு உயிர்ப்படையவைப்பதில் முனைகிறார்.

இரண்டாம் உலகப் போருக்கு பிறகான பிரெஞ்சுக் கவி யுவே பெரனபாஸ் கவிதையை ஒரு ஆன்மிக அனுபவமாகக் கருதி செயற்படுகிறார். ஆனால் இன்றைய தமிழ்க் கவிஞனின் முன்னால், அவனது புதிய பூகோளம் பற்றிய சிக்கல் விசுவரூபம் எடுத்து நிற்கிறது.

சங்க காலத்தில் பூகோளம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வரையறுக்கப்பட்ட பூகோளமாக இருந்தபோது அந்த நிலங்களின் அடிப்படையில் தனது கவிதையின் அழகியலைக் கட்டி எழுப்பிய தமிழ்க் கவிஞன், இன்று தனது பூகோளம் தன் கண் முன்னாலேயே சிதறி நிற்பதைக் காண்கிறான். இன்றைக்கு இலங்கைத் தமிழர்களின் நிலத்தைப் பிரிவது என்பதும் உறவுகளைப் பிரிவது என்பதும் மிகப்பெரிய யதார்த்தமாக விசுவரூபமெடுத்து நிற்கிறபோது தமிழ்க் கவிதை இன்றைக்குச் சங்க காலக் கவிதைகளோடு தொடர்பற்ற ஒரு புதிய கவிதையியலையும், அழகியலையும் கோரி நிற்கிறது. இந்தப் புதிய பூகோளம் பற்றிய சவாலைத் தமிழ்க் கவிஞர்கள் சந்திக்கிறபோது அவர்கள் தமது மொழிக்குள் கட்டப்பட்டிருக்கும் ஒரு பூகோளத்திற்குள் ஒரு முரணைச் சந்திக்கிறார்கள். இதிலிருந்துதான் இன்றைய தமிழ்க் கவிதைக்கான ஒரு புதிய வாசல் திறக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புதிய பூகோள சவால்தான் தமிழ்க் கவிதையைத் தேங்கிப் போகாமல் ஜீவ



நதியாகப் பிரவாகமெடுக்கச் செய்யப் போகிறது என்று நான் கருதுகிறேன்.

■ சு.குமரேசன்



இருபதாம் நூற்றாண்டில் கட்டப்ப
அரண்மனை! என்ற தனித்தன்
புதுமையாகவும், அதேநேரம் மாறா
பெருமையோடும் இளமை துள்ளக் காட்சி
மைசூர் அரண்மனை. கதிரவன் மறையும்
மஞ்சள் தேய்த்துக் குளித்த புதுப்பெண்ணை
ரம்மியமான ஒளிவிளக்குகளோடு மின்னு
னையைக் காண ஆயிரம் கண்கள் வேண்டு

'இந்தியாவுக்குச் சுற்றுலா வரும் வெளிநா
மைசூர் அரண்மனையைப் பார்க்காமல்
மாட்டார்கள். உலகிலேயே அதிகமான பய
கவர்ந்து இழுக்கும் அரண்மனைகளில் மு
இந்த மைசூர் அரண்மனைக்குத் தா
பெருமிதத்தோடு சொல்கிறார், சுற்றுலா
சோமசேகர். அவர் சொல்வது உண்
ஏனென்றால் இந்தியாவில் தாஜ்மகாலுக்கு
அதிக சுற்றுலா பயணிகள் (ஆண்டுக்கு 2.70
வந்து ரசிக்கும் இடம், மைசூர் அரண்மனை
சுற்றுலாப் புள்ளிவிவரம்.

ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதத்தி

தற்கொலை விருப்பங்களும் தூண்டும் காரணங்களும்

கடந்த முப்பது வருடங்களில் இந்த தற்கொலை விகிதம் முப்பது மடங்கு அதிகரித்திருப்பதாக ரஷ்ய இணையத் தளம் ஒன்று தெரிவிக்கிறது.

■ இணையவன்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

பதின்ம வயது துடிப்புடனும், உற்சாகத்துடனும் செலவிட வேண்டிய வயது. இந்த வயதில் தற்கொலை செய்யவேண்டும் எனும் எண்ணம் ஏன் இவர்களுக்கு வருகிறது என்பதற்கு உளவியலாளர் பல்வேறு காரணங்களைச் சொல்கின்றனர்.

முதலாவதாக, எங்கும் நிறைந்திருக்கும் பதின்ம வயதுக் காதல். அவ்னோ, அவளோ இல்லையேல் வாழ்க்கை இல்லை என நினைக்கும் முட்டாள்தனமான பாலியல் ஈர்ப்புகள் தற்கொலைக்குத் தூண்டுகின்றன. பெரும்பாலும் பெண்கள் இத்தகைய வசீகர வலையில் சிக்கித் தற்கொலையே தீர்வு என முடிவெடுத்து விடுகின்றனர்.

இரண்டாவதாக பெற்றோருடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் பதின்ம வயதினரை சட்டென உணர்ச்சி பூர்வமான முடிவுக்குள் தள்ளி விடுகின்றன. தனக்குத் தண்டனை தந்த பெற்றோரைத் தண்டிக்கவேண்டும் எனும் உணர்வு நிலை உந்துதல் தற்கொலைக்குத் தூண்டுகிறது.

மூன்றாவதாக சகவயதினரின் கேலி, கிண்டல், படிப்பில் ஏற்படும் தோல்வி, இயலாமை என சிறு சிறு பலவீனங்கள் தற்கொலைக்குத் தூண்டுகின்றன.

நான்காவதாக, இறப்புக்குப் பின் வாழ்க்கையில் ஏதோ மிக மிக அதிக சந்தோசமும், சுவர்க்கமும் இருக்கின்றன எனும் நம்பிக்கை. அது என்னதான் இருக்கிறது என்பதை அறிய வேண்டுமே எனும் ஆவல் பதின்ம வயதினரின் ஆர்வக் கோளாறு தற்கொலைக்குத் தூண்டுகிறது.

இந்த இணையத் தளங்களில் சென்று தற்கொலை செய்வதாகச் சொன்னால் மனம் மாற வாய்ப்பே தராமல் கூடவே நின்று சாவதை உறுதிசெய்து விடுகின்றனர். குறிப்பாக குழுவினராக தற்கொலை செய்ய நினைப்பவர்கள் இடையில் விட்டு விலக வாய்ப்பு மிக மிகக் குறைவு. காரணம் மற்ற தற்கொலை விரும்பிகளின் கட்டாயம்! கடந்த முப்பது வருடங்களில் இந்தத் தற்கொலை விகிதம் முப்பது மடங்கு அதிகரித்திருப்பதாக ரஷ்ய இணையத் தளம் ஒன்று தெரிவிக்கிறது.

நவீனயுகம் பல்வேறு வசதிகளைச் செய்து தருகிறது, அவை நன்மையின் பாதையிலும், தீமையின் பாதையிலும் தடங்களைப் பதித்துக் கொண்டே செல்கிறது. தண்ணீர் விடுத்து பாலை எடுக்கும் சங்ககால அன்னப் பறவை போல தீமை விடுத்து நல்லதை எடுக்க வேண்டியது அவசியம்.

பதின்மவயதுப் பருவம் என்பது மதில் மேல் அமர்ந்திருக்கும் பூனையைப் போன்றது. அது சரியான திசையில் குதிப்பதும், குதிக்காததும் குடும்பத்தினரின் அரவணைப்பையும், வழிகாட்டுதலையும் பொறுத்தது.

தாய் வீடு

'இந்தியாவுக்குச் சுற்றுலா வரும் வெளிநாட்டவர்கள், மைசூர் அரண்மனையைப் பார்க்காமல் திரும்பவே மாட்டார்கள். உலகிலேயே அதிகமான பயணிகளைக் கவர்ந்து இழுக்கும் அரண்மனைகளில் முதல் இடம் இந்த மைசூர் அரண்மனைக்குத்தான்' என்று பெருமிதத்தோடு சொல்கிறார்

நடைபெறும் தசரா பண்டிகை (விஜய தசமி திருவிழாவின் பத்தாம் நாள்) உலகப் புகழ்பெற்றது. அப்போது அரச கும்பாபிஷேகம், அரச தரிசனம், பல்லக்கு யாத்திரை, யானை வலம், மல்யுத்தப் போட்டி, நடனப் போட்டி, கச்சேரி அரங்கேற்றம், அரச தர்பார் என்று ஏராளமான கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெறுகின்றன.

இந்த தசரா நிகழ்ச்சியை மகாராஜா குடும்பமே நடத்தி வந்தது. 1965 இற்குப் பிறகு கர்நாடக அரசு, இதனை அரசு விழாவாகக் கொண்டாடி வருகிறது. மாநில முதல்வர்கள் முதல் ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அதிபர்கள் வரை பலரும் வருகை தந்து இருக்கிறார்கள்.

இந்த மைசூர் அரண்மனை, உடையார் சாம்ராஜ்யத்தின் தலைநகராக (1399- 1947) இருந்தது. உடையார்களின் சாம்ராஜ்யம் தனித்து இயங்கியது என்றாலும், விஜயநகரப் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்டதாகவே இருந்தது. மைசூர் அரண்மனையின் உண்மையான பெயர் 'அம்பா விலாஸ்' அம்பா என்றால் கன்னடத்தில் அன்னை என்று பொருள். மைசூர் மகாராஜாவின் ஆளுகைக்கு உட்பட்ட மக்களுக்கு இதுதான் தாய்வீடு என்பதைப் பறைசாற்றும் விதமாகவே பெயர் வைக்கப்பட்டதாம். அம்பா விலாஸ் அரண்மனையை மும்முடி கிருஷ்ண ராஜ உடையார் 1912 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கினார். இதைக் கட்டி முடிக்க 15 ஆண்டுகள் ஆனது. என்றாலும் 1940 ஆம் ஆண்டுதான் தோட்டம், கல்யாண மண்டபம், கோயில் என அரண்மனைக்கு முழு வடிவம் கிடைத்தது. அரண்மனையின் மொத்தப் பரப்பளவு 72 ஏக்கர். அதில் அரண்மனைக் கட்டடம் உள்ள பகுதி மட்டும் எட்டு ஏக்கர்.

மைசூரின் கிழக்கு, மேற்குப் பகுதியைச் சுட்டும் வகையில் அரண்மனையின் கிழக்கு மற்றும் மேற்கில் இரு கோபுரங்களை உடையார் நிறுவினார். அதில் ஆக்ரோஷ சிங்கங்களையும், அழகிய மயில்களையும், கம்பீர யானைகளையும் காணமுடிகிறது. அரண்மனைக் கோபுரம் 146 அடி உயரம் கொண்டது. மைசூரின் எந்த மூலையில் இருந்து பார்த்தாலும் காட்சி தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அரண்மனை உட்புறம் உள்ள கோயில்

ஆக்ரோச சிங்கம்

பக்கத்துக் கட்டில்காரர்

தொல்புரம். சி.கர்காமநாதன்



நாங்கள் எல்லோரும் கூடிய மட்டும் பல விடயங்களில் 'அவதானமாக' இருக்கின்றோம். முற்கூட்டியே எச்சரிக்கை உணர்வுடன் பாதுகாப்பாக இருக்கப் பிரியப்படுகின்றோம். பிரச்சினைகளைத் தவிர்த்து, தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்குப் படாமல் இருக்க நினைகின்றோம். நாம் வாழும் காலத்தில் எமக்குப் பக்கத்தில் இருப்பவர் சரியாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். பக்கத்தில் இருப்பவர் ஆணோ, பெண்ணோ, நண்பரோ, உறவினரோ எல்லாம் சரியாக அமையவேண்டுமென்பதே எல்லோரினதும் விருப்பமாகும்.

பஸ் பயணங்களில்கூட எமக்கு அருகில் இருப்பவரிடம் உடனேயே சிரித்துக் கதைக்கத் தொடங்கமாட்டோம். கொஞ்ச நேரம் அவரது நடவடிக்கையினை அவதானித்த பிறகே, அவருடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற பச்சை சிக்னல் கிடைத்த பிறகே பேச்சினைத் தொடங்குகின்றோம். இது எல்லா மனிதர்களுக்கும் பொதுவான விடயம். வேலைத்தளத்தில்கூட நாம் எல்லோரிடத்தும் மனம் திறந்து கதைப்பதில்லை. எமக்குப் பிடித்தமான, விருப்பமான மனிதரை இனம் கண்டு அவருடன் மாத்திரம் எமது தனிப்பட்ட விடயங்களைக் கதைக்கின்றோம். பல வருடமாக ஒரே தெருவில் வசித்தாலும், இப்போதும் சிலரோடு நாம் கதையாமல் இருந்து வருவதை அவதானிக்க முடியும். அவர்களை நாம் நேரில் பார்க்கும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தாலும் கதையாமல் கொள்ளாமல் விலகியே இருந்து வந்துள்ளோம். ஏன் இவ்வாறு நடக்கிறது? அந்த மனிதரோடு ஏன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போனது? இருவருக்கும் ஏன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய ''ஈர்ப்புச் சக்தி'' இல்லாமல் போனது? ஏன் அந்தப் பிடிப்பு ஏற்படாமல் போனது? யோசிக்க வேண்டிய விடயம்.

புதிதாக வீடு மாறி போகும் போது நாம் முதலில் விசாரிப்பது, நாம் தெரிவு செய்த வீட்டுக்கு பக்கத்தில் இருக்கும் அயலட்டை பற்றித் தான். ஆக்கள் என்னமாதிரி? எந்தப்பகுதி ஆக்கள்? பழகக் கூடிய ஆக்களா? எம்மோடு ஒத்து வருவார்களா? வீட்டுக்காரர் குடிப்பழக்கம் உள்ளவரா? என்பவற்றை விசாரித்த பின்னரே தெரிவு செய்த வீட்டில் இருப்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பிக்கின்றோம். எனவே பக்கத்தில் இருக்கும் மனிதர்கள் மனிதர்களுக்கு முக்கியமான விடயமாக தென்படுகின்றார்கள்.

நாம் சில சமயங்களில் எதிர்பாராத சூழ்நிலையில் வைத்தியசாலையில் தங்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. வந்த நோய் குணமாவதற்கு வைத்தியரின் ஆலோசனைப்படி வைத்தியசாலை விடுதியில் தங்க வேண்டிய நிலை வந்து விடும். உங்களுக்கும் இதேபோல வைத்தியசாலை விடுதியில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கலாம். ஒருக்காலும் என்ன நோய் வந்தாலும் நான் வைத்தியசாலைக்குப் போகமாட்டேன் என்று யாரும் வீர வசனம் பேச முடியாது.

நான் கொஞ்ச வருடத்துக்கு முன்னர் விடுதியில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தங்கி நின்றால்தான் நோயினைக் குணமாக்கலாம் என்ற நிலை. விடுதியில் தங்குவதற்கு அனுமதி பெற்று, மருத்துவத் தாதியர் எமக்கு ஒரு கட்டிலைக் காட்டி விடுவார்கள் எமக்குச் சிகிச்சை முடியும் வரை அந்தக் கட்டில் தான் எனது அரண்மனை, வசந்த மாளிகை, தாஜ்மஹால் எல்லாம். கட்டில் அமைந்துள்ள இடம் எமக்கே பிடிக்காமல் விட்டாலும், நாம் எமக்குப் பிடித்த மாதிரி மாற்றிக் கொள்ள வேண்டியதுதான். எமக்குப் பிடித்தமான வீட்டினை தெரிவு செய்வது போல் வைத்திய சாலைக் கட்டிலைத் தெரிவு செய்ய முடியாது.

அடுத்த விடயம் முன்னர் கூறியது போல் அயலட்டையை விசாரிப்பது போல் எமது கட்டிலுக்குப் பக்கத்தில் இருக்கும் கட்டில் காரர்களை எமது விருப்பத்துக்கு ஏற்ற மாதிரி மாற்றிக் கொள்ள முடியாது. அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் .இது இயற்கை விதி.

விடுதியில் தங்கி நிற்கும் நாள்கள் அற்புதமானவை. எமக்கு வலது, இடது பக்கங்களில் இருக்கும் கட்டிலுக்கு உரியவர்கள் எம்மைப்போல வேறுபட்ட நோய் காரணமாக சிகிச்சைக்கு வந்தவர்கள். எந்த ஊர், பிறப்பு, வளர்ப்பு, சாதி, குடும்ப விவரம் எல்லாம் அறிந்தாலும் பல விடயங்களில் 'ஊரில் இருப்பதைப் போல் நாம் அலட்டிக் கொள்வதில்லை. அவர் பணக்காரன், நான் ஏழை, நான் இந்தத் தொழில், அவர் அந்தத் தொழில் என்பது பற்றிக் கவலைப்படுவதில்லை. அந்த நேரத்தில் எனக்கும் அவருக்குமான உறவு. கலைத்துவமானது.

எனக்கும் பக்கத்து கட்டில்காரர்களுக்குமான உறவு விசித்திரமானது. உரிமை எடுத்துக் கொள்கிறோம். சுடுதண்ணீர் தொடங்கி தேயிலை, பால்மா, சீனி எல்லாம் பரிமாறப்படும். நான் இயலாது இருந்தால் எனக்கு உணவு, சுடச்சுட தேநீர் தயாராக்கி வைத்திருப்பார். எனக்கு உணவு தாமதமாகும் போது தனது உணவில் பகிர்ந்து கொடுப்பார். நான் போடும் மருந்துகளை அவராக ஞாபகம் வைத்து என்னைப் போடச்செய்வார். வெளியில் செல்லும் நபர்களிடம் பத்திரிகை வாங்கி வைத்து விடுவார்.

நான் பயப்படும் நேரங்களில் என்னை ஆறுதல் படுத்துவார். இந்த உறவு எப்படி நடக்கின்றது? இப்படி சக மனிதர்களிடம் பரிவும் அக்கறையும் காட்டுவதற்கு றோலும், வடையும், ரீயும் கொடுத்து ஏதாவது பயிற்சிப் பட்டறை செய்கிறார்களா? சக மனிதரின் அருமை எமக்கு நோய் வரும்போதுதான் தெரிகின்றதா? அந்த நேரம்தான் எமக்கு ஞானக் கண் திறக்கிறதா? அந்த விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் எல்லா மனிதர்களும் பக்கத்து கட்டில்காரர்களுடன் உறவினை ஏற்படுத்தி தங்களை பீடித்திருக்கும் நோயினை விரட்டுகிறார்கள்.

என்ன செய்வது எமது துரதிர்ஷ்டம் எமக்கு பக்கத்து கட்டில்காரர் நன்றாக அமைந்தாலும் எமக்கு பக்கத்து நாட்டு உறவு நன்றாக அமையவில்லையே? பக்கத்துக் கட்டிலை மாற்றினாலும் பக்கத்து நாட்டை மாற்ற முடியாதே?

கவிதையும் காலமும்

■ ஆனந்த்

(கடந்தவாரத் தொடர்ச்சி..)

கவிதையின் முறைபாடு அடிப்படையில் நனவு மன அமைப்பை மட்டும் சார்ந்ததல்ல. அதன் எல்லைகளுக்கு அப்பாலும் கவிதையின் முறைபாடு இயங்குவதால் சில நேரம் கவிதை வரிகள் சுயேச்சைபூர்வமாக மனத்தில் தோன்றுதல் மிகவும் அரிதானதல்ல. சில சமயம் முழுக்கவிதையுமே இவ்வாறு நனவு மனத்தின் முயற்சியின்றி வெளிப்படக்கூடும். தேவையெனத் தோன்றினால் நனவு மனம் சில சொற்களையோ, வரிகளையோ மாற்றிவைக்கலாம். ஆக கவிதை, மொழியின் அமைப்புக்குள் வந்துவிடுகிறது.

மொழி என்பதும் காலத்தின் விளைவு, சேகரிப்பு, காலப்பிரக்ஞையின் இயக்கவிதியில் மொழியின் அங்கம் மைய முக்கியத்துவம் வாய்ந்தது. படிமங்களும் பிம்பங்களும் ஒரு வகையில் மொழி அமைப்பின் அங்கமே. ஒரு தளத்தில் மொழியே மனமாக செயல்படுகிறது.

எழுதி முடிக்கப்பட்ட கவிதை இப்போது வாசகனுக்குக் கிடைக்கிறது. பிரதியோ அல்லது அச்சிடப்பட்ட புத்தகமோ அன்றாட கால அமைப்பில் உள்ள உலகில்தான் இருக்கிறது. ஆனால் வாசகன் கவிதையைப் படிக்கும்போது அவன் மனத்திற்கும் கவிதைக்கும் இடையில் ஏற்படும் உறவு ஒரு புதிய அமைப்பாக உருக்கொள்கிறது. அவனுடைய உடலும் புத்தகமும் பௌதிக உலகின் அங்கமாக இருந்த போதிலும் மனதளவில் அவன் பிரக்ஞை அந்த பௌதிக உலகிலிருந்து விடுபட்டு வேற ஒரு கட்டுக்கோப்பில் அமைகிறது.

கவிதையின் சொற்களும், ஓசையும், பொருளும் அவன் மனத்தின் எழுப்பும் பிம்பங்களும் ஒரு பிரத்யோக வெளியில் இயக்கம் கொள்கின்றன. அந்த உலகில் கால கதி வெறும் வரிசைத் தொடர்ச்சி அல்ல. இயக்க பூர்வமான கால – இட அமைப்பு அது.

சம்பவங்கள் நிகழும் விவரணைக் கவிதையாக இருக்கும் பட்சத்தில் அந்த நிகழ்வுகளின் காலம் ஏது? எந்த வெளியில் அவை நிகழ்கின்றன? பிரக்ஞையே ஒரு காலம் – இடம் கட்டுக்கோப்பை உருவாக்குகிறது. கவிதை படித்து அதன் அதிர்வுகளும் அடங்கிய பிறகு அந்தக் கட்டுக்கோப்பு பிரக்ஞையிலேயே அலைகள் நீரில் அடங்குவது போல் அடங்கிக் கலந்துவிடுகிறது.

கவிதை வாசகனின் பிரக்ஞைகளின் புதிய உலகக் கட்டுக்கோப்புகளை ஏற்படுத்துகிறது. அந்த உலகங்கள் பிரக்ஞையில் நிலைக்கும் வரை அவனது இருப்புணர்வு அந்த உலகங்களில் ''வாழ்ந்து'' அனுபவம் கொள்கிறது.

ஓர் உண்மையான கவிஞனுக்கு மேற்சொன்ன எல்லா விடயங்களும் அறிவுபூர்வமாக இல்லாது போனாலும் உணர்வுபூர்வமாகத் தெரியும். அறிவுபூர்வமாக நிறைய விஷயங்கள் அறிந்த கவிஞர்கள் இருக்க முடியும். ஆனால் அவர்களுக்கும் அடிப்படையானது உணர்வு பூர்வமான, நேரிடையான தெரிதல்தான். பிரக்ஞையின் பல தளங்களைப் பற்றிய உள்ளுணர்வு தான் கவிஞனை ஆழத்தில் இயக்குகிறது. அறிவுத் தளத்திலேயே இன்று ''காலம்'' என்னும் கருத்துருவம் மிகவும் பரிச்சயமாகிக் கொண்டிருக்கிறது. நிறைய புதிய கவிஞர்களும் காலம் என்னும் பொருள் பற்றி புதிய கோணங்களில், புதிய வெளிச்சங்களைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்கள். காலம் பற்றிய புதிய படிமங்கள் நவீன கவிதைகளில் உருவாகியிருக்கின்றன.

காலத்தின் சார்புநிலை பற்றியும் கால நீட்சியின் அனுபவம் வெவ்வேறு மனநிலைகளில் வெவ்வேறாகத் தோற்றம் கொள்வது பற்றியும் ஆழமான படிமங்கள் பல வந்திருக்கின்றன. கவிதை விமர்சன உலகத்திலும் இன்று புதியதாகத் தோன்றியிருக்கிற ''கட்டுடைத்தல் விமர்சனம்'' என்பதும் கவிதை அமைப்பில் கட்டுக்கோப்பை ஆராய்கிறது. காலம் என்பது நிகழ்வுகளின் வரிசையாகக் கொள்ளப்படுவதால் ''முன் – பின்'' என்பது காலம் என்பதில் முக்கியமான கூறு ஆகும். ஒரு குறிப்பிட்ட வரி கவிதையில் எத்தனையாவது வரியாக இருக்கிறது என்பது அந்த வரியின் பொருளை மட்டுமல்லாமல் அதன் தொடர்பாக மற்ற வரிகளின் பொருளையும் அதனால் கவிதையில் முழுப்பொருளையும் நிர்ணயிக்கிறது. கவிதை வரிகளில் நிகழ்வு வரிசையும் ஒரு காலவரிசையே. வரிகளை இடம் மாற்றிப் போட்டு வரிசையை மாற்றிப் பார்த்தால் புதிய கட்டுக்கோப்புகளும், புதிய பிரதிபலிப்புகளும், புதிய எதிரொலிகளும் வெளிப்படுகின்றன.

புறவயமான கடிகார காலத்தின் தயை தாட்சண்யம் அற்ற ஒரு திசை ஓட்டம் ஒரு புறமும், ஆக்கபூர்வமான இயக்கபூர்வமான அகவயமான காலம் இன்னொரு புறமும் மனித வாழ்வில் ஓட்டத்தின் இரு கரைகளாக இருக்கின்றன. நிகழ்வுகள் நடந்தவை, நடப்பவை, நடக்கப் போகும் நிகழ்வுகள் என்று மூன்றாகப் பிரிவடைந்திருப்பது ஒரு முறைப்பாடு. இதன்படி ஒரு குறிப்பிட்ட கணத்தில் ஒரு நிகழ்வு மட்டுமே நிகழ முடியும். மற்ற நிகழ்வுகள் அதன் முன்னும் பின்னுமாக அமைக்கப்பட்டிருக்கும்.

அனைத்து நிகழ்வுகளும் ஒரே கணத்திலேயே உடனிகழ்வாக நிகழ்வதாகக் கொள்வது இன்னொரு முறைப்பாடு. இதன்படி இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் அமைப்பு ஒரு புத்தகத்தைப் போல் மொத்தமாக, முழுமையாக பிரித்து பக்கங்களைப் போல் முன்னோக்கியோ பின்னோக்கியோ பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

கவிதையின் இயக்கம் முழுப்பிரக்ஞையின் இயக்கமாக இருப்பதால் காலத்தின் இயக்கமாகவும் இருக்கிறது. மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு முறைப்பாடுகளும் கவிதையின் உட்கூறுகளிலும் கருத்துத் தளத்திலும் வெளிப்படுகின்றன. கவிதைக்கும் காலத்துக்கும் உள்ள உறவு பல பரிணாமங்களில் இயங்குகிறது. இந்தக் கட்டுரையில் ஒரு சில கோணங்களில் மட்டுமே இந்த விஷயம் ஆராயப்பட்டிருக்கிறது.

(முற்றும்)

சேவையால் உயர்ந்த செம்மல் அமரர் நயினை மு.நா.நடராசா

ஆரம்பத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக தன் அரச பணியைத் தொடங்கியவர் அமரர் நயினை மு.நா.நடராசா. தெற்கே கதிர்காமத்தில் தொடங்கிய அவரது அரச பணி வடக்கே குறிகாட்டுவான் வரை வளர்ந்து நீடித்தது. அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றதும் சமூகப் பணியிலும், அறப்பணியிலும், ஆன்மிகப் பணியிலும், தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

நயினாதீவு கணேச சனசமூக நிலையத்தில் தொடங்கிய சமூகப்பணி கூட்டுறவுச் சங்கம் வரை வளர்ந்து பிரஜைகள் குழு வரை உயர்ந்து உள்ளது. தீவகம் யாழ்.குடாநாட்டோடு துண்டிக்கப்பட்டிருந்த காலம், ஒரு சோதனைக்காலம், மிகவும் நெருக்கடியான இடர்கள் மிகுந்த இந்தக்கால கட்டத்தில் இந்தத் தீவக மக்களுக்காக துணிச்சலுடன் இவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க சேவைகளை ஒருபோதும் மறந்துவிட முடியாது.

தீவகம் அடைபட்டிருந்த காலப்பகுதியில் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாகத்தில் பொருளாளர் பதவியை வகித்து பெரிய திருப்பணிகளை முன்னெடுத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் 1998ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தை திறம்படச் செய்து முடிப்பதில் முன்னின்று உழைத்தவர். நித்திய அன்னதானப் பணியை கும்பாபிஷேகத்துடன் ஆரம்பித்து வைத்து அதில் சிறிது தளர்வும் தொய்வு ஏற்படாத வகையில் வளர்த்தெடுப்பதில் அறங்காவல் சபையுடன் சேர்ந்து உந்துசக்தியாக இருந்து வழிநடத்தியவர்.

நீத்தார் நயப்புரை

நயினாதீவு செம்மனத்தம்புலம் ஸ்ரீ வீரகத்திவிநாயகர் ஆலய நிர்வாகத்தில் தலைமைப் பொறுப்பேற்றிருந்தபோது ஆலயம் பொலிவுபெற அழகிய கோபுரத்தை அமைக்கும் முயற்சியில் நிர்வாகத்தினருடன் இணைந்து நின்று அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வெற்றிகண்டவர்.

இவரிடம் இருந்த பேச்சாற்றல், விவாதிக்கும் திறன், தக்கரீதியாக எதையும் நிரூபித்துக்காட்டும் ஆற்றல் என்பவற்றால் அரங்குகளில் பட்டிமன்றம், வழக்காடு மன்றம் என்பன போன்ற நிகழ்வுகள் பொழிவு பெற்றன. இந்தப் பணிகளுடன் இறுதிக் காலத்தில் யாழ்.சைவபரிபாலன சபையின் நிறைவேற்று அதிகாரியாக இருந்தவர். சபையினால் இறுதியாக நடத்தப்பெற்ற சைவமகா நாட்டுக்கான ஆரம்ப ஏற்பாடுகளை எல்லாம் செய்து முடித்து தன்பணியைப் பூரணப்படுத்திக் கொண்டார்.

அவரது வாழ்நாளின் அளப்பரிய சேவைகளை கௌரவித்து நயினை, ஸ்ரீ கணேச சனசமூக நிலையம், 'கணேசதீபம்' என்ற கௌரவப்பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

நயினை நா.யோகநாதன்.

மருத்துவத்துறையை உலுக்கும் போலிகளின் படையெடுப்பு

■ வலையவன்

(கடந்தவாரத் தொடர்ச்சி..)

மருந்துகளும், உலக அளவில் சுமார் 15 ஆயிரம் பேரை உயிரிழக்கவும் வைத்த மருந்துகளும் இன்றும் இந்தியச் சந்தையில் அச்சமின்றி உலவுகின்றன. இவை சர்வதேச அரங்கில் நிராகரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

நவால்ஜின், டி கோல்ட், விக்ஸ் ஆக்சன் 500, நிம்சுலைட், அனால்ஜின் போன்ற சர்வ சாதாரணமாய் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும் மருந்துகள் எல்லாம் கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனால் தடை செய்யப்பட்ட மருந்துகளே என்பது எத்தனை பேருக்குத் தெரியும் ? இதில் இன்னொரு வருத்தத்துக்குரிய விடயம் என்னவெனில், சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட பல மருந்துகள் பல இந்தியாவில் தடை செய்யப்படவில்லை என்பதே!

ஒரு மருந்தைத் தடை செய்யும் அதிகாரம் மருத்துவத் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுக்கு உண்டு. ஒரு மருந்தைத் தடைசெய்யும் முன் ஒரு மருத்துவக் குழு அந்த மருந்தை முழுமையாக ஆராய்கிறது. அந்த மருந்தில் உள்ள வேதியல் பொருள்கள், அவை உடலுக்கு ஏற்படுத்தக் கூடிய பக்க விளைவுகள் போன்றவற்றை முழுமையாக ஆராய்ந்தபின் அந்த மருந்தைத் தடை செய்வதா, வேண்டாமா எனும் அறிக்கையை ஆலோசனைக் குழுவுக்கு அளிக்கிறது. ஆலோசனைக் குழு அந்த அறிக்கையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறது.

அப்படித் தடை செய்தாலும் அவை விற்பனைக் கூடங்களுக்கு திருட்டுத்தனமாக வந்து சேர்ந்து விடுகின்றன. கடந்த மாதம் பஞ்சாபில் ஒரு மருந்துக் கடையிலிருந்து மட்டும் சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள தடை செய்யப்பட்ட மருந்துகள் கைப்பற்றப்பட்டன. ஒரு கடையின் நிலைமையே இப்படியெனில் இந்தியா முழுவதுமுள்ள கோடிக்கணக்கான மருந்துக் கடைகளில் எத்தனை கோடி ரூபாய்களுக்கான தடை செய்யப்பட்ட மருந்துகள் இருக்கின்றனவோ எனும் பதட்டம் இயல்பாகவே எழுகிறது.

மருந்தை வாங்க வரும் நோயாளிகள் எந்தெந்த மருந்துகள் தடை செய்யப்பட்டவை, எவை அங்கீகரிக்கப்பட்டவை என்பதை அறிந்திருக்க முடியாது. அந்தத் தார்மீகக் கடமை மருந்தைப் பரிந்துரைக்கும் மருத்துவர்களுக்கும், மருந்தை விநியோகிக்கும் மருந்துக் கடைகளுக்கும் உண்டு.

(தொடரும்...)

கல்லாத பேர்களே நல்லவர்கள்

அமிழ்தம் போல் தித்திக்கும் துரியோதனன் வீட்டுப்பால் பாயாசத்தைவிட, விதுரன் வீட்டு உப்புக்கஞ்சி தான் கண்ணனுக்குப் பிடித்தது. நமது படிப்பும் அறிவும் திறமையும் அற்பமானவை என்ற பணிவுதான் பரமபக்தியின் அடையாளம். ஆணவம் அகங்காரம் என்பவை சமய சாம்ராஜ்யத்தில் நாடு கடத்தப்பட்ட அகதிகள். அன்பு, பணிவு, தாஸ்யம் எனப்படும் தொண்டுமனம் இவையே இறையுலகின் குடியுரிமைத் தகுதிகள்.

மீனைக்கொண்டு வந்தார் படிப்பறிவற்ற குகப்பெருமாள். ''பரிலினில் தழீஇய என்னில் பவித்திரம்'' என்கிறார் ஸ்ரீராமன். பகவானுக்குப் பன்றிமாமிசம் படைத்தார் கண்ணப்பர். ''அன்பினால் அவன் யாது செய்யினும் நமக்கு அது உகப்பு'' என்கிறார் சிவபெருமான் . கங்கை வேடனும் காளத்தி வேடனும் பக்தி வலையில் பரமனையே இழுத்துவிட்டனர். ஆணவம் கலவாத அன்புக்கு இறைவன் அடிமை... ஆணவம் எப்படித் தோன்றுகிறது?

உடம்பு கொஞ்சம் அழகாக, இளமையாக, எடுப்பாக, நிறமாக இருந்தால் போதும்.... அகங்காரம் அந்த உடம்பைத் தன்முகவரியாக்கிவிடும். ஆனால் வயது ஏற ஏற அந்த அகந்தை அழியும்; இரைப்பையும் இருதயப்பையும் தத்தம் முதுமையை உணர்த்திய பின், இருமலும் சளியும் கட்டிப்புரண்டு கடும் யுத்தம் நடத்திய பின், உடம்பைப் பற்றிய அகங்காரம் ஓடிவிடும்.

பணத்தாலும் பதவியாலும் அகந்தைவரும். செல்வமும் செல்வாக்கும் தொலைந்து போனால், அந்த அகந்தையும் அழிந்துபோகும். படிப்பாலும் கல்வியாலும் வருகின்ற அகங்காரம் இருக்கிறதே அது அழியாது! இந்த அறிவு வெறும் அறியாமை என்று அடுத்தவர் அறிவால் அடி வாங்கினால் ஒழிய, இது அழியாது . 'சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா?' என்ற கேள்வி, ஔவையின் அறிவில் விழுந்த அடி.

பிரம்மனை முருகன் குட்டினான் என்ற கந்தபுராணக்கதை இந்தக்கருவின் விளக்கமே. பலபேர் புராணம் சொல்லும்போது, பிரம்மன் தன்னை வணங்கவில்லை என்ற கோபத்தினால் முருகன் பிரம்மனைத் தண்டித்ததாகச் சொல்கிறார்கள். அது பிழை. அப்படிப்பார்த்தால் முருகனை வணங்காத மக்கள் பலர் உண்டு. தன்னை வணங்காத அவர்கள் எல்லோரையும் முருகன் தண்டிப்பாரா? அவர் என்ன அரசியல்வாதியா?தன் துதிபாடாதவரை எல்லாம் தண்டிக்க ... கலைமகள் கணவனான, சதுர்வேதங்களுக்காகவே சதுர்முகம் கொண்டவனான பிரம்மாவின் அறிவும் அறியாமை உடையதே! அதனை உணர்த்தவே பிரம்மனைக் கேள்விகேட்டு முருகன் தண்டிக்கிறான்.

ஒரு பாடசாலை ஆசிரியர் வண்ணப் புத்தகத்தில் யானையின் படத்தைக்காட்டி ''இது என்ன? '' என்று மாணவர்களைக் கேட்டார். சின்னப்பிள்ளைகள் எல்லாம் மகிழ்ச்சியான குரலில் ''யானை!'' ''யானை!'' என்றார்கள். ''மிக்கநல்லது.. இதுயானை'' என்று சொல்லிக்கொண்டு, அடுத்த வகுப்பை நோக்கி நடந்தார். ஒரே ஒரு சின்ன மூளைக்குத் தைரியம். மெல்ல எழுந்து நின்று சொன்னான்: ''சேர் நீங்கள் சொன்னது தப்பு... அது யானை அல்ல...'' ஆசிரியருக்கு பயங்கரக்கோபம். ''அது யானை இல்லையா ...அப்படி என்றால் அது என்ன? நீ தான் சொல்லேன்.'' மாணவன் பேசினான்: ''ஐயா அது யானை அல்ல.. யானையின் படம்! '' ஐம்பது வயது மூளை அப்படியே வெட்கத்தால் செத்தது! உண்மைதானே. அது யானையா? யானையின் படம் தானே அது!பிஞ்சு மூளையில் உதித்த அறிவு தமது அறியாமையை உணர்த்திவிட்டதே!

கல்வியின் பெருமையே அறியாமையை அறிவது தான். அடக்கமும் பணிவுமே கல்வியின் அடையாளங்கள். ''நுணங்கிய கேள்வியர்... வணங்கிய வாயினர்'' என்பது திருவள்ளுவரின் தீர்மானம். புத்தகவிழுங்கலால் வரும் அறிவுகளில் அகங்காரம் கொடிகட்டிப்பறப்பது கண்கூடு.

அதனால் தான் தாயுமானவர் ''கல்லாத பேர்களே நல்லவர்கள் '' என்று கடவுளின் செல்லப்பிள்ளைகளை அடையாளம் காட்டினார்.

சுகி.சிவம்

வாசகர் திருமுகம்

எஞ்சியிருக்கும் சுமைதாங்கிகளை புனரமைப்பார்களா?

சுமார் நூற்றாண்டு காலத்துக்கு முன்பு எமது மூதாதையர் வாகன வசதிகள் இல்லாது கால் நடையாகப் பயணம் செய்தனர் எனவும், இதனால் பொருள்களை தலையிலே சுமந்துகொண்டு தென்மராட்சி மக்கள் வடமராட்சிக்கு பயணித்தனர் எனவும் மூதாதையர் கூறுகின்றனர். தலையிலே பாரம் சுமந்து பயணிக்கும் போது, சுமையை இறக்கி இளைப்பாறி நீர் அருந்திச் செல்வதற்காகவும் சுமைதாங்கிகள் அமைக்கப்பட்டன. தற்போது வல்லிபுர ஆழ்வார் ஆலய சந்தியில் எஞ்சியிருக்கும் ஒரு சுமைதாங்கி எமக்கு ஞாபகப்படுத்தி எமது மூதாதையர் பட்ட துன்பங்களை எடுத்துக்காட்டுகிறது.

இப்படிப்பட்ட சுமைதாங்கிகள் முன்பு எருவன், அம்மா கடையடி, வாழைத்தோட்டத்தடி, கறுக்காய், முள்ளி போன்ற இடத்தில் இருந்ததாக சான்றுகள் உள்ளன. சில இடங்களில் சுமைதாங்கிகள் அழிவடைந்து கிணறுகள் பாழடைந்த நிலையிலும் காணக்கூடியதாக உள்ளது.

வரலாற்றில் மறக்க முடியாத சான்று பகிரும் இடங்களை புனரமைப்புச் செய்யாது விடில் எமது மூதாதையர் எப்படி வாழ்ந்தார்கள் என்ற வரலாறே இளம் தலைமுறைக்குத் தெரியாது போய்விடும். எனவே சுமைதாங்கிகளை புனரமைப்புச் செய்து எமது எதிர்கால சந்ததிக்கு தெரியப்படுத்த பெரியவர்கள், சமூகவிரும்பிகள் முன்வரவேண்டும்.

100 ஆண்டுகால வரலாற்றுச் சின்னமான இந்த சுமைதாங்கிகளை பிறப்பெடுக்கும் குழந்தைச் செல்வங்களும் அறிந்து வைத்திருப்பதற்காக புனரமைப்புச் செய்யவேண்டியது எமது முக்கிய கடமையாகக் கருதப்படுகிறது. எனவே எஞ்சியிருக்கும் சுமைதாங்கியை திருத்தம் செய்ய உரியவர்கள் முன்வரவேண்டும்.

மு.அருமைச்சந்திரன்
வடக்கு வறணி

தனியார் பேருந்து உரிமையாளர்கள் கவனிப்பார்களா?

இன்றைய காலப்பகுதியில் வசதி படைத்தவர்கள் என்றாலும் சரி, வசதி குறைந்தவர்கள் என்றாலும் சரி அனைவரும் பஸ்களில் பிரயாணம் செய்யும் நிலையில் உள்ளனர். தொழில் நிலையங்களுக்கு, அன்றாட வாழ்க்கைத் தேவைகள், மருத்துவ நிலையங்களின் தேவைகள் அனைத்தையும் சென்றடைய வேண்டும் என்றால் நாம் அனைவரும் பஸ்ஸில்தான் பயணம் செய்ய வேண்டும். சொந்த வாகனம் வைத்திருப்போர் தமது தேவைகளை சுலபமாக நிறைவேற்றுகின்றனர். இருப்பினும் அனைத்து தேவைகளுக்கும் தமது சொந்த வாகனத்தில் மட்டும் பயணங்களை மேற்கொள்வது என்பது கடினமான விடயம்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் பஸ்களில் பயணத்தை மேற்கொள்கின்ற நாம் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள் எத்தனை. இன்று குறிப்பாக தனியார் பஸ்களில் தமது பணத் தேவைகளை மட்டும் மையமாக வைத்து தொழில்புரியும் வாகனச் சொந்தக்காரர்கள் மக்களை அடுக்கி அடுக்கி ஏற்றி அவர்களை நசியவிட்டு பணம் சேர்ப்பதிலே குறியாக இருக்கிறார்கள். இது பற்றி கதைத்தால் வாகன உரிமையாளர்கள் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை.

ஏன் இந்த நிலைப்பாடு வரவேண்டும்? பஸ்ஸில் ஏறும் போது ''அம்மா வாங்கோ, அக்கா வாங்கோ'' என்று பெரிய வரவேற்போடு ஏற்றுவார்கள். பிறகுதான் தெரியும் அதற்குள் நின்று படுகின்ற நரக வேதனை. இடிப்பதும், வயது வேறுபாடுகளின்றி பாலியல் சேட்டைகளும், மிகவும் அருவருக்கத்தக்க சம்பவங்களும் பஸ்களில் இடம் பெறுகின்றன. தாய்மை நிலையான தோற்றத்தைக் கொண்ட பெண்களிடம் கூட பாலியல் சுரண்டல், சேட்டைகள். மனிதர் மூச்சுவிட்டு நிமிர்ந்து நிற்க முடியாமல் நிற்கையில் காமவெறியர்களின் அருவருப்பான சேட்டைகள் தனியார் பஸ் பயணத்தினையே வெறுக்கத் தோன்றுகின்றது.

சில பஸ்களில் ஒலிக்கும் பாடல்கள் காமத்தை தூண்டுவதாக வேறு உள்ளன. இப்படிப்பட்ட பாடல்களை தணிக்கை செய்ய வேண்டும். பஸ்களில் ஒலிபரப்ப அனுமதிக்கக் கூடாது. சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுப்பார்களா?

சிவாஜினி, சுன்னாகம்

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பார்களா?

கடந்த 19.05.2012 ஆம் திகதியில் உதயன் பத்திரிகையில் வெளிவந்த வாசகர் கடிதம் பகுதியில் வடக்கு மாகாண சபையினால் மீள் நியமனங்கள் நிறுத்தப்படுமா? வடக்கு மாகாண பிரதம செயலர் சரியான நடவடிக்கை எடுப்பரா? என்பது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டது. கடந்த 02.06.2012 ஆம் திகதியில் உதயன் பத்திரிகையில் வடக்கு மாகாண சபையும், ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் தொடர்பாகவும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் கடிதம் எழுதப்பட்டிருந்தது. இதற்கான உரிய விளக்கம் வடக்கு மாகாண சபையினால் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிகின்றது.

உதயனில் வெளிவரும் கடிதங்கள் மூலம் மக்கள் தங்கள் குறைபாடுகளை சகலருக்கும் தெரியப்படுத்தி, அதற்கான விளக்கத்தை பத்திரிகை மூலம் அறிவதற்காகத்தான் தெரிவிக்கின்றார்கள். ஆனால் இந்த விடயம் தொடர்பாக ஒரு விளக்கமும் கிடைக்கப் பெறுவதாகத் தெரியவில்லை.

சம்பந்தப்பட்ட நிர்வாகம் சரியான விளக்கத்தை தெரியப்படுத்தி மக்கள் பார்வைக்கு வைப்பதே ஜனநாயக நடைமுறையாகும், ஆனால் நிர்வாகமோ ஏதோ பத்திரிகையில் தெரிவிக்கிறார்கள் நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் எனத் தெரியாதது போல் இருந்து விடுகிறார்கள்.

ஓர் அரச நிர்வாகம் சம்மந்தமான விடயம் ஏதும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டால் அந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதுதானே விதிக் கோவையில் குறிப்பிட்ட அரச நடைமுறை? மேற்படி மீள் நியமனம் தொடர்பான விளக்கத்தை உரிய மாகாண நிர்வாகத்திடமிருந்து பெற்றுப் பிரசுரிப்பதற்கு ஆவன செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இனிவரும் காலங்களில் ஆவது வாசகர் பகுதியில் பிரச்சினை சம்பந்தமாக மக்களால் எழுதப்படும் கடிதங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தகுந்த பதிலளிக்க வேண்டும். இவ்வாறு மேற்கொள்ளுவதன் மூலமே வாசகர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டமுடியும்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ம.இந்தி

கொண்டை அலங்காரம்

1. மயில் கொண்டை:

முதலில் முன் பகுதியை சரி செய்யவும். பிறகு முடி எடுத்து போனி டைல்ஸ் போடவும். பிறகு சுற்றிலும் சுருள் மற்றும் நடுவில் ஒரு சுருள் போடவும் பிறகு மீதமுள்ள முடியில் சவுரி வைத்து பின்னல் போட்டு குஞ்சலம் வைத்து பின்னவும். பிறகு மயில் வடிவத்தை அதில் இணைக்க வேண்டும்.

2. கதம்ப கொண்டை:

நேர் வகிடு எடுத்து முன் பகுதியை சரி செய்து உச்சியில் முடி எடுத்து பல்லை செட் செய்யவும். பல்லை சுற்றி கதம்ப மலர் சுற்றி வைத்து கதம்ப இணைப்பை வைக்கவும்.

3. மல்லிகை மற்றும் கோழிக் கொண்டை கொண்டை:

முகத்திற்கு தக்கபடி வகிடு எடுக்கவும். பிறகு தேவையான நீளத்திற்கு பன்னல் போட்டு தேவையான நிறத்தில் குஞ்சலம் வைத்துக் கொள்ளவும். அதன் பின்னர் மல்லிகை மற்றும் கோழிக் கொண்டை பூவை வைத்து அடுக்கு அடுக்காக அலங்கரிக்கவும்.

4. முகூர்த்த கொண்டை:

தேவையானபடி வகிடு எடுத்து உச்சிபல்லை வைத்து பின்னல் போட்டு தங்க நிறம் குஞ்சலம் அல்லது குண்டு குஞ்சலம் வைக்கவும். பின்னர் ஜடை அலங்காரத்தை கூந்தலில் வைத்து கட்டி விடவும். பின்னர் பெங்களூர் ரோஸ் வைத்து நடு நடுவே அலங்கரிக்கவும்.

5. கொண்டை கொண்டை:

கூந்தலின் நடுப்பகுதியில் பப் வைக்கவும். பிறகு போனிடைல் போடவும். கூந்தலை இரண்டு பகுதியாக பிரிக்கவும். முதல் பகுதியில் சுருள் போடவும் மீதியுள்ள பகுதியில் பின்னல் போட்டு குஞ்சலம் வைக்கவும். விருப்பத்திற்கு ஏற்ப கோழிக் கொண்டை, மல்லிகைப்பூ, நகை வைத்து அலங்கரிக்கவும்.

6. கோல்டா கொண்டை:

தேவையானபடி பரன்ட்செட் செய்து பின்னர் ஒரு பகுதி முடியை எடுத்து அதில் கோல்டன் ரிங் வைக்கவும். அதன் பின்னர் மீதியுள்ள முடியை பின்னல் இட்டு குஞ்சலம் வைத்து கோல்டன் இணைப்பு, கோழி கொண்டை, மல்லிகைப்பூ வைத்து அலங்கரிக்கவும்.

7. பேஷன் கொண்டை:

முதலில் முகத்திற்கு ஏற்ப வைத்துக் கொண்டு அதன் பறகு உச்சிபல்லை (ராக்கொடி) வைத்து சவுரி வைத்து ஜடை பின்னி பிறகு குஞ்சலம் வைக்கவும். அதன் பிறகு உச்சியில் கோழி கொண்டை வைத்து அலங்கரிக்கவும். பின்னர் ஜடையில் நகை வைத்து அதன் மேல் கோழி கொண்டை சம்பங்கியை வைத்து அலங்கரிக்கவும்.

8. பழம் மற்றும் இலை கொண்டை:

முதலில் முகத்திற்கு ஏற்ப முன்பகுதியை சரி செய்து கொள்ளவும். அதன் பிறகு உச்சிபல்லை வைத்து சவுரி வைத்து பின்னி அதன் பிறகு குஞ்சலம் வைக்க வேண்டும். பல்லை சுற்றி பழங்கள் வைத்து கட்டவும். வெற்றிலையின் மேல் சாத்துக்குடியை வைத்து அதன் மேல் திராட்சை வைத்து அலங்கரிக்கவும்.

9. சிம்பள் முகூர்த்த கொண்டை:

முதலில் வகிடு எடுத்து பல்லை இணைக்கவும். பின்னர் சவுரி வைத்து குஞ்சலம் வைத்து அதன் பின்னர் மல்லிகைப் பூவை பல்லையில் சுற்றி அதன் ஜடை மேல் சுற்றி விடவும். பிறகு ஜடை நடுவில் பென்டன்டை வைத்து அலங்கரிக்கவும்.

10. முந்திரி மற்றும் செரி கொண்டை:

முதலில் முன் பகுதியில் பல்லை வைத்து அதன் பிறகு சவுரி வைத்து குஞ்சலம் வைத்து பின்ன வேண்டும். பிறகு முந்திரி, செரி பழம் வைத்து அலங்கரிக்கவும். அதன் பிறகு திராட்சை, மல்லிகை, கனகாம்பரம் வைத்து அலங்கரிக்கவும்.

11. முஸ்லிம் மணப்பெண் கொண்டை:

முதலில் முகத்திற்கேற்ப முன் பகுதியை சரி செய்யவும். பறகு சவுரி வைத்து ஜடை பின்னி குஞ்சலம் வைத்து அதன் பிறகு 'கோல்டன் பீட்ஸ்' வைத்து அலங்கரிக்கவும்.

12. பரஞ்ச் பளாட்:

முதலில் கண் புருவ பகுதியில் இருந்து முடியை எடுத்து அதை நார்மல்பளாட் ஆரம்பக்கும்படி தொடங்கவும். அடுக்காக எடுத்து முன் பகுதியை சரி செய்யவும். அதே போல இரண்டு பக்கமும் செய்யவும். இதை காது வரை போடவும். பிறகு மீதியுள்ள முடியில் நார்மல்பளாட் போடவும். பிறகு பீட்ஸ் வைத்து அலங்கரிக்கவும்.

பாதங்களில் வெடிப்பு பார்த்தாலே வெறுப்பு

பெண்கள் பலருக்கு முகத்தில் பருக்கள் தோன்றுவதைப் போல் பாதங்களில் வெடிப்பு ஏற்படுகிறது. ஆரம்பத்திலேயே பாதங்களை பராமரிப்பதில் ஆர்வம் காட்டினால் நிரந்தரமாக வெடிப்பு வருவதை தடுக்க முடியும். பாதங்களை பராமரிக்க சில எளிய டிப்ஸ் .

மருதாணியை நன்கு அரைத்து வெடிப்பு உள்ள இடங்களில் தேய்த்து உலர விடவேண்டும். பின்பு தண்ணீரால் கழுவி வர நாளடைவில் பித்த வெடிப்பு குணமாகும். பாதம் தாங்கும் அளவிற்கு தண்ணீரை சூடுபடுத்தி அதில் சிறிது உப்பும் எலும்பச்சை சாறும் சேர்த்து அதில் பாதத்தை வைத்திருந்து பின்பு சொரசொரப்பான பொருட்களால் தேய்த்து வந்தால் கெட்ட செல்கள் உதிரும்.

வேப்பிலை மஞ்சள் ஆகியவற்றுடன் சிறிது சுண்ணாம்பு சேர்த்து அரைத்து விளக்கெண்ணெய் சேர்த்து வெடிப்பு ஏற்பட்ட பகுதிகளில் தேய்த்து வந்தால் பித்த வெடிப்பு குணமடையும். பப்பாளி பழத்தை நன்கு அரைத்து அதனை பாதங்களில் வெடிப்பு உள்ள பகுதிகளில் நன்கு தேய்த்து வர வெடிப்பு குணமாவதுடன் எரிச்சல் குறையும். தரமான காலணிகளை பயன்படுத்துவதன் மூலம் வெடிப்புகளை தவிர்க்கலாம்.

விளக்கெண்ணெய் தேங்காய் எண்ணெய் சம அளவில் எடுத்துக்கொண்டு அதில் மஞ்சளை சேர்த்து பாதத்திற்கு தடவி வந்தால் வெடிப்பு ஏற்படாது.

இரவு நேரங்களில் படுக்க செல்லும் முன்பு காலை சுத்தப்படுத்தி சிறிது தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் வெடிப்பு வருவதை தவிர்க்கலாம். தினமும் குளித்ததும் பாதத்தை துணியால் துடைத்து பின் விளக்கெண்ணெய் தேய்த்து வந்தாலும் வெடிப்பை தவிர்க்கலாம்

அழகுக்கு அழகு சேர்க்கும் பொட்டு

பெண்களின் முகத்திற்கு அழகையும் வசீகரத்தையும் தருவதுவது நெற்றி பொட்டுத்தான். நம் முன்னோர்கள் அனைவரும் நெற்றியில் வைக்கும் குங்குமப்பொட்டின் அழகே தனி என்று தான் சொல்ல வேண்டும். ஒவ்வொருவரும் தங்களின் முகத்திற்கேற்றவாறு பொட்டு வைக்க வேண்டும்.

நீள் வடிவ பொட்டு

வட்ட வடிவ முகம். இவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்க வேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தை சற்று நீளவாக்காக மாற்றியதுபோல் அழகு தரும். இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால் அவர்கள் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும்.

குங்குமப் பொட்டு

இதய வடிவ முகம் கொண்டவர்கள் சற்றே வித்தியாசமானவர்கள். இவர்கள் குங்குமத்தினால் பொட்டு இட்டுக்கொள்வது முகத்தை அழகாக்கும். ஸ்டிக்கர் பொட்டுக்களில் சிறிய அளவில் நீளமான பொட்டுகள் முக வசீகரத்தை அதிகரித்துக் காட்டும்.

வட்ட பொட்டு

ஓவல் வடிவ முகம் கொண்டவர்கள் புருவத்திற்கு சற்று மேலே நெற்றியில் வட்டப் பொட்டு வைப்பது அழகை அதிகரிக்கும். நீளமான ஸ்டிக்கர் பொட்டு வைத்தாலும் வசீகரமாக இருக்கும்.

உருண்டைப் பொருட்டு

சதுர முகம் உள்ளவர்கள் நீளமாக பொட்டுகளை வைக்கக்கூடாது. அகலம் அதிகமுள்ள பொட்டுகளை வைத்துக்கொள்ளலாம். உருண்டை மற்றும் முட்டை வடிவிலான பொட்டுகள் இவர்களுக்கு பொருத்தமாக இருக்கும். வண்ணத்துப் பூச்சி வடிவ டிசைன் பொட்டுக்கள் எடுப்பாக இருக்கும்.

முக்கோணப் பொட்டுக்கள்

முக்கோண வடிவ முகம் உள்ளவர்களுக்கு அனேகமாக எல்லாவகைப் பொட்டுகளும் பொருந்தும். நெற்றி அகலமாக இருந்தால் நீளமான பொட்டுகளை பயன்படுத்த வேண்டும். முக்கோண வடிவிலான பொட்டுகளும் இவர்களுக்கு நன்றாக இருக்கும்.